

# ஞானச்சுடர்

பங்குனி

2011



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ



# குறள்வழி

**என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்.**

பொருள் : எலும்பில்லாத புழுக்களை வெய்யில் சுடுவது போல அன்பில்லாத உயிரைத் தரும தேவதை வருத்தும். (77)

**அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை**
**—வன்பாற்கண்**
**வற்றன் மரந்தளிர்த் தற்று.**

பொருள் : மனத்தில் அன்பில்லாத மக்கள் இல்லறத்தில் நன்கு வாழ்தல் கழனமான நிலத்தில் உலர்ந்த மரம் தளிர்த்தல் போன்றது. [உலர்ந்த மரம் தளிராது] (78)



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### யோகநெறி


**பாலும் பழமுந்தின்று பகல்நித்தி ரையைத்தள்ளு**
**பாலனைப்போல் தேகுண்டாகும் - தங்கமே**
**பரமனைநீ பத்திசெய்வாய்** 5

**இரவுபக லில்லாத ஏகாந்த வீட்டினிலே**
**பரவிப் பணிந்திடடி - தங்கமே**
**பாரும் விண்ணும் உன்கைவசம்** 6

**பன்னிரண்டு காற்புரவி பக்குவமாய் நீயேறி**
**உன்னிரண்டு கால்கீழே - தங்கமே**
**உறுதியாய் அடக்கிவிடு** 7

**ஆறு படிதாண்டு அப்பாலே வெள்ளிப்படி**
**அதுவும்நீ தாண்டிவிட்டால் - தங்கமே**
**ஆருனக்கு நிகராவார்** 8

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



# ஞானச்சுடர்



## வெளியீடு - 2 சுடர் - 159

2011 பங்குனி பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| மனிதப்பிறிவியின்....... | இ. ஸ்ரீதரன் | 01- 03 |
| வித்தகா! உன்....... | திருமதி பா. சிவனேஸ்வரி | 04- 06 |
| கயமையும் நயமையும் | முருகவே பரமநாதன் | 07- 09 |
| இந்து ஆலயங்களும்... | இரா. சாந்தன் | 10- 11 |
| தவமுனிவனின் தமிழ்... | சிவ மகாலிங்கம் | 12- 16 |
| மேற்குலக நாடுகளில்.... | இ. சாந்தகுமார் | 17- 21 |
| உலகளாவிய சைவமும்... | Dr. இலம்போதரன் | 22- 25 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 26- 27 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 28- 33 |
| சிறுவர் கதைகள் | - | 34- 36 |
| கீர்த்தித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 37- 39 |
| நித்திய அன்னப்பணி | - | 40- 41 |
| தினம் தினம் ஆனந்தமே.. | ஜக்கி வாசுதேவ் | 42- 43 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 44- 47 |
| கந்தனே கலியுகத்... | கே.வி. குணசேகரம் | 48- 50 |
| சான்றோர் யார்? | ஐ.கோ. சந்திரசேகரம் | 51- 53 |
| அம்மாவின் பெருமை... | கு. குணாளன் | 54- 56 |
| தமிழகத் திருக்கோயில்.... | வல்வையூர் அப்பாண்ணா | 57- 60 |


அன்பளிப்பு: மலர் ஒன்று 30/- ரூபா


சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 021 321 9599

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

உ



# ஞானச்சுடர் மாசிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

மாசிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திருமதி. புனிதவதி சண்முகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்கள் நிகழ்த்தினார்.

ஆசிரியை தனது உரையில் சூரியன் தவறாது தனது கடமையைச் செய்து தினமும் பிரகாசிப்பதுபோல, ஞானச்சுடர் மலரும் மாதம்தோறும் பிரகாசித்து வருகின்றது என்பது சாதாரண ஒரு காரியம் அல்ல என்பதை சபையினருக்கு எடுத்துக்காட்டினார்.

அடுத்து தனது உரையில், இன்றைய காலகட்டத்தில் இப்படியான ஆன்மீக சஞ்சிகையினை வெளியிட்டுவரும் ஆச்சிரமத்தின் பணியினை மிகவும் சிறப்பாக எடுத்துக்கூறியதோடு, சைவமக்கள் அனைவரும் இம்மலரினைப் பெற்றுப் பயன்பெற வேண்டும் எனவும், ஆச்சிரமத்தில் நடைபெறும் அறப்பணிகள் பற்றியும் எடுத்துக் கூறினார். இந்த அறப்பணிக்கு நாம் அனைவரும் இயன்ற வரையில் பங்களிப்பு செய்யவேண்டும் என்று கூறியதோடு மேலும் இப்பணிகள் யாவும் வளர்ந்து செல்ல வேண்டும் என்று கூறி தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.


## மதிப்பீட்டுரை:

மாசிமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திருமதி. நாச்சியார் செல்வநாயகம் (முதுநிலை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) அவர்கள் நிகழ்த்தினார்.

ஞானச்சுடர் மலரில் இடம்பெறும் கட்டுரைகள், கவிதைகள், பாடல்கள் மற்றும் ஏனைய விடயங்கள் அனைத்துமே தற்கால இளைஞர்களும், யுவதிகளும் கற்றுத் தெளியும் வகையில் அமைந்துள்ளதால், சமூகவிழுமியங்களைக் கட்டியெழுப்பும் ஒரு வழிகாட்டியாக உள்ளதாகவும் தமது மதிப்பீட்டுரையில் எடுத்துரைத்தார்.

அழகியவடிவமைப்புடன் மாதாமாதம் வெளிவரும் "ஞானச்சுடர்" சஞ்சிகை அனைவரதும் அறிவுப்பசியினைப் போக்கி, ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிசமைப்பதாக உள்ளதாகவும் கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்



மனிதன் முழுமையான நிலையை எய்து வதற்குரிய பக்குவநிலையை சமய நெறிகள் சாற்றி நிற்கின்றன. மனித மனத்தை ஒருவழிப்படுத்தி இறை சிந்தனையில் மெய்மறந்து லயித்திட சைவநெறி துணை நிற்கின்றன. இவ்வகையில் நம் முன்னோர்கள் இறை பக்தியைப் பேணி நின்ற மையினால்த்தான் அவர்களுடைய நாமம் இன்றும் பல வழிகளில் போற்றப்படுகின்றது. அதற்கமைவாக எம்மோடு கூடவேஇருந்து எமக் கெல்லாம் வழிகாட்டியதுடன் திருவருளோடு, குருவழிபாட்டையும் மேம்படையச் செய்தவர் தவத்திரு. வே. முருகேசுச்சுவாமிகள் ஆவார். அவரது மகத்துவத்தை சொல்லில் கூறமுடியாது. அவரோடு இருந்து அவரது குருவருளுக்குப் பாத்திரமான அடியவர்களை இன்றும் காணலாம்.

சுவாமிகள் இறைவனடி சார்ந்து பதின்மூன்று வருடங்கள் கடந்து விட்டநிலையிலும் அவரது அருட்பார்வை அவரைப்பேணி வருகின்ற அடியவர்களை வழிப்படுத்துவதை நாம் இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

அவ்வகையில் தவத்திரு முருகேசுச் சுவாமிகளின் பதின்நான்காம் ஆண்டு குருபூசை தினம் எதிர்வரும் 10.04.2011 சந்நிதி ஆலயத்திலும், சந்நிதியான் ஆச்சிரமத்திலும் வழமை போன்று இம்முறையும் நடைபெற உள்ளது. அந்நன்நாளில் அடியவர்களாகிய நாமும் அதில் கலந்து குருவருளோடு திருவருளையும் பெற்று மனிதப்பிறவியின் மாண்பினை அடைவோமாக.



## ஞானச்சுடர் வாசகர்களுக்கு எமது சித்திரைப் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உ

# ஆட்கொண்டவாறென்ன சொல்வேன்!



ஆட்கொண்ட வாறென்ன சொல்வேன் - சந்நிதி
ஆறுமுக நாதன் தேடி யெனை யடைந்து
(ஆட்)


வாட்டமேன் என்றென் முன் நின்றே - இந்த
வையத்தோர் பார்த்திட
வாழ்ந்து காட் டென்றான்
(ஆட்)

கூட்டமாய்ச் சந்நிதி வந்து - அடியார்
கோயில் வலம் வந்தே கும்பிட்டே - நன்றே
நாட்டத்தால் மூலவேல் கண்டு - எந்த
நாளும் புறப்பூசை நாடி மகிழ்வார்
(ஆட்)

தேட்டமாய்ச் சரியை கிரியை - தொண்டை
செய்யும் போதென்னை நினைப்பார் - அவரும்
ஈட்டமாய்க் கண்டிலர் - இதயம்
எண்ணாமல் செய்தாரும் என்னன்பர் - என்றான்
(ஆட்)

பாலாபிஷேகங்கள் செய்தே - என்னை
பாடி யமுது படைத்து - அர்ச்சித்தும்
நேர்த்தியாய் ஆரத்தி யெடுப்பார் - அந்த
நேரான அடியார்க்கும் நிம்மதி யென்றான்
(ஆட்)

அன்பினால் என்னையுள் நோக்கி - நாடி
அகமே குழைந்ததைக் கோயிலாய்க் கொண்டார்
துன்பினை யொருபோது மடையார் - என்று
தோகை மயிலிலே துலங்க முன்னிசைத்தான்
(ஆட்)



இறவாத இன்ப அன்பு கேட்கும் - நல்ல
இனியதாம் சந்தர்ப்பம் ஈடுதன் றவனை
மறவாமை கேட்டியான் பாட - ஐயன்
மாறின்றி, ஒன்றாயிருப் போம் வா என்றான்
(ஆட்)

முதுபெரும்புலவர், கலாபூஷணம்
ஆசிரியர் வை.க. சிற்றம்பலவனார்.

# பங்குனி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

R. கிருஸ்ணசிவம்
(அவுஸ்திரேலியா)

V. சிவநாதன்
(பிராந்திய முகாமையாளர், யாழ். இலங்கை வங்கி)

இ. சங்கரலிங்கம்
(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு)

இராமசாமி திருச்செல்வம்
(தலைவர், பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்)

நா. நவராஜ்
(உளவள துணையாளர், யாழ்ப்பாணம்)

அ. வரதராசா
(வரியப்புலம் வீதி, சுண்ணாகம்)

வே. நடராசா
(தும்பளை மேற்கு)

சி. கிருஷ்ணபிள்ளை J.P.
(ஆவரங்கால்)

பொதுமுகாமையாளர்
(வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)

பொதுமுகாமையாளர்
(பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி)

சி. சந்திரலிங்கம் J.P.
(பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை)

செ.க. செல்வநாயகம்
(செல்வா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

க. இராசதுரை
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)

சோமசுந்தரம் செல்வக்குமார்
(சண்சில்க் றைக்கிளின் சென்ரர், G.P.S. றோட், கல்வியங்காடு)

நா. ரதீஸ்
(நாவற்காடு அச்சுவேலி)

Dr. அ. செந்தில்குமரன்
(பல் வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, மந்திகை)

K. மங்கையர்க்கரசி
(நல்லூர், யாழ்ப்பாணம்)

கி. இராஜதுரை அதிபர்
(வதிரி மெ.மி.த.க. பாடசாலை)
உரிமையாளர்
(சுபாஸ் வெதுப்பகம், நெல்லியடி)
ஜீ. ஜெயப்பிரகாஸ்
(ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி)
சி. கணபதிப்பிள்ளை (தலைவர்)
(யாழ். மாவட்ட கூட்டுறவுச் சமாசம்)
கு. செல்வரெத்தினம்
(நிக்ஷன் பல்பொருள் வாணிபம், அச்சுவேலி)
வை. துரைராசா
(ஓஸ்காவீதி, உரும்பராய் தெற்கு)
ந. நவரெட்ணம்
(மகேஸ்வரி வாசா, ஆனைக்கோட்டை)
S. விமலராசா
(தேவாலயவீதி, சங்கானை)
வே. கிருஸ்ணபிள்ளை
(K.V.K. அரிசி ஆலை, உடுப்பிட்டி)
M.B. முருகதாஸ் (கல்யாணி)
(வல்வெட்டித்துறை)
சி. வல்லிபுரம்
(தும்பளை, பருத்தித்துறை)
உரிமையாளர்
(கந்தசாமி அன்சன்ஸ், சங்கானை)
சபா இரத்தினசிங்கம் J.P.
(சபா றேடர்ஸ், அச்சுவேலி)
V. பரமானந்தம்
(கொள்வனவு உத்தியோகத்தர், பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம்)
ஜெ. நகுலன்
(அரசடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
திருமதி இ. தில்லையம்பலம்
(திருவாதெனி, இமையாணன்)
K. கேதீஸ்வரநாதன்
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
சு. மகேஸ்வரன்
(மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்)
இராசையா ஈஸ்வரகுமாரன்
(ஐயனார் கோயிலடி, யாழ்ப்பாணம்)
சின்னத்தம்பி செல்வரத்தினம் J.P.
(இளை அதிபர், இராசவீதி, நீர்வேலி)

திருமதி மகேஸ்வரி

(திருநெல்வேலி யாழ்ப்பாணம்)

E.V.K. குமாரசாமி

(ஞானபதி, மட்டுவில்)

V. சுந்தரமூர்த்தி

(ஈசன் ஜுவல்லரி சங்கானை)

S. நாகம்மா

(கிறீன் மெமோறியல் வைத்தியசாலை, மானிப்பாய்)

உரிமையாளர்

(மெடிலாண்ட் பார்மஸி, சங்கானை)

S. திருவனேஸ்வரன்

(V.S.K. மானிப்பாய்)

த. விவேகானந்தராசா

(டச்றோட், சித்தங்கேணி)

இ. புஸ்பநாதன்

(S.R.P. ஸ்ரோர்ஸ், சங்கானை)

அ. குபேரானந்த உதயன்

(உதயன் கொமினிக்கேஷன், இணுவில்)

அ. கோணேஸ்கரன்

(தில்லையம்பதி, கோண்டாவில்)

ஆ. தனபாலசிங்கம்

(இணுவில் கிழக்கு)

சி. அழகேசன்

(வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்)

க. தர்மநாயகம்

(மஞ்சத்தடி, இணுவில்)

பூ. இராமகிருஷ்ணர்

(சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி)

Dr. ஸ்ரீகணேசன்

(பழமுதிர்ச்சோலை, பருத்தித்துறை)

செ. சூரியகுமார்

(இன்பர்சிட்டி)

உரிமையாளர்

(கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி)

வ. தங்கவடிவேலு

(இராமுகடை, கரவெட்டி)

ஐ. காளிங்கநடனம்

(கொக்குவில்)

ஆனால், உயர்திணையிலுள்ள மனிதனின் வாழ்க்கையைப் பாருங்கள். பொய்யும் புரட்டும் பூசலும், ஏமாற்றமும் மலிந்து கிடக்கின்றது. "ஏய் மனிதா! நீ திருந்தமாட்டாயா?" என்று கேட்டுக் கவலை கொள்ளும் அளவுக்கு அவனது வாழ்க்கை அமைந்திருக்கின்றது. இந்தப் பசுவையும் கோழியையும் பூனையையும் காகத்தையும் பார்த்தாவது மனிதன் மாறக் கூடாதா? திருந்தக்கூடாதா? இந்த வாழ்க்கையில் என்ன அர்த்தம் இருக்கிறது? மனித இனமே! கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!! சிந்தியுங்கள்.

நீர்க்குமிழிக்கு நிகரானது யாக்கை. அழியும் இந்தத் தேகத்தினை வளர்ப்பதற்கு மனிதன் என்னவெல்லாமோ செய்கின்றான். கொஞ்சமும் கூசாமல் கொலையும் செய்கின்றான். தன் வீட்டில் அன்பாக வளர்த்த சேவலைக்கூட விட்டுவைப்பதில்லை. அதையும் அறுத்துச் சமைத்து உணவாக்கிக் கொள்கின்றான். இப்படி இந்த உடம்பை வளர்க்க வேண்டுமா? சீ... வெட்கமாயில்லை. ஆறறிவு படைத்த மனிதன் செய்கின்ற காரியமா இது!

உண்மையான அன்பும் பாசமும் எங்கே போய்விட்டது? மச்சமும் மாமிசமும் சாப்பிட்டால்த்தான் நலமாக வாழலாம் என்று யார் சொன்னது? தாவர உணவு உண்ணும் யானையைப் பாருங்கள். எத்தனை பெரிய உடம்பு. எவ்வளவு பாரத்தையும் எளிதாகத் தூக்கிவிடுகிறது. எருது மாட்டைப் பாருங்கள் அது எவ்வளவு தூரம் ஓடி ஓடி உழைக்கின்றது. அவை மாமிசம் உண்கின்றனவா? இல்லையே.

உலகில் வாழும் எல்லா உயிர்களும் அன்பு வலையில் அகப்பட்டு பாசமும் நேசமும் பரிவும் காட்டியே வாழ்ந்து வருகின்றன. ஆனால் இந்த மனிதன் மட்டும் ஏன் நடிக்கின்றான் என்று தெரியவில்லை? பொய் வேஷம் போட்டு நல்லவன் மாதிரி நடிக்கின்றான். ஏன் இந்த அநியாயம்?

மனித வாழ்க்கையில் அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, தாத்தா, பாட்டி என்றெல்லாம் பல்வேறு சொந்தபந்தங்கள் உண்டு. இந்தச் சொந்தபந்தங்களிடம் ஒருவன் காட்டும் அன்பு உண்மையானதாக இருக்கவேண்டும். வெளிவேஷமாக இருக்கக் கூடாது. சிலபேர் நுனிநாக்கில் ஒன்றும் உள்ளே ஒன்றுமாகப் பேசுவார்கள். அது கூடவே கூடாது. "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். அடி மனதில் ஓர் எண்ணமும் வெளியில் இன்னோர் எண்ணமுமாகப் பேசுவதை அறவே விலக்க வேண்டும்.

எந்நேரமும் இன்சொல் பேசவேண்டும். பிறர்மனம் புண்படும்படியாகப் பேசக்கூடாது. மாமிசம் புசிக்கும் புலி, சிங்கம், கரடி, நாய், பூனை முதலியவற்றின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் வெறும் வயிற்றை நிரப்பவே எல்லாம் செய்கின்றன. எனவே மனிதன் இதை உணர்ந்து வாழ்நாள் இருக்கும்போதே நல்லவற்றைச் செய்து நன்மை பயக்கக்கூடிய காரியங்களை முன்னெடுக்கவேண்டும். எதையும் சிந்தித்த பின்பே செய்யவேண்டும்.

நாம் செய்கின்ற இந்தக் காரியத்தால் பிறருக்குத் தீமைகள் வருமா? நன்மைகள் வருமா? அவ்வாறு நன்மைகள் வந்தால் எவ்வளவுதூரம் மற்றவர் இன்புறுவர்? இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அது மாத்திரமன்றி மனித வாழ்வின் மகத்துவத்தை நன்கு புரிந்து கொண்டு நாம் மற்றவர்களுக்காக வாழப்பழக வேண்டும். எந்தக் காரியத்திலும் சுயநலம் கூடாது. பொது நலனையே கருத்திற்கொள்ள வேண்டும். எமது செயலால் பிறர் மனம் வருந்தக்கூடாது. பதிலாக நிறைய நன்மைகள் கிடைக்கப்பெற்று உள்ளம் மகிழ்ச்சியால் தூண்டப்பட்டு குதூகலம் அடைவதையே பெரிதும் விரும்ப வேண்டும்.

**உங்களில் ஒருவர் மற்றவரை இழிவாகக் கருதி குற்றங்குறை கூறவேண்டாம்.**

பணம் சம்பாதிக்கத்தான் வேண்டும். அதை நேர் வழியில் உண்மையின் அடிப் படையில் சேகரிக்க வேண்டும். பொய்யான காரணங்களைக்கூறி நேர்மையற்ற அநீதியான முறையில் பணம் சேர்க்கக்கூடாது. அவ்வாறு வந்த பணம் எப்படி வந்ததோ அப்படியே போய்விடும். ஒருபோதும் நிலைத்து நிற்க மாட்டாது. செல்வம் செல்வோம் என்று நம்மை விட்டு நீங்கிவிடும்.

யோகர் சுவாமிகள் கூறியதுபோல் "இது எப்பவோ முடிந்த காரியம்; ஒரு பொல் லாப்புமில்லை; முழுதும் உண்மை" என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். "மனித குலமே! கொஞ்சம் சிந்தித்துப்பார்!"

நாம் பூர்வஜென்ம புண்ணியப் பேற்றினால்தான் மானிடப்பிறவி எடுக்கின்றோம். மனிதப் பிறவி ஒரு புனிதப்பிறவி. ஆகவே இந்தப் பிறவி எமக்குக் கிடைத்தது ஆண்ட வனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். இறைவனுடைய திவ்ய பேரருட் கிருபாகடாட்சம் கிடைத்துவிட்டால் எமக்குப் பிறவியில்லை.

வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனாக விளங்குகின்ற இறைவன் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து பரிபூரண னாகவே இருக்கின்றான். அவன் ஆட்டுவிக்கின் றான். நாங்கள் ஆடுகின்றோம். அவ்வளவுதான். இதை ஒருபோதும் மறந்துவிடாதே!

இப்பூவுலகில், இந்த உண்மையை மனிதன் மட்டும் உணரவோ, ஏற்கவோ, மறுக் கின்றான். காரணம் அறியாமையே. வரும்போது ஒன்றுங் கொண்டுவந்தது கிடையாது. போகும் போது எதுவும் கொண்டு போவதும் கிடை யாது. அரைநாண் கயிறுகூட விடமாட்டார்கள். வெட்டி எடுத்து விடுவார்கள். அப்பேர்ப்பட்ட இந்த உலகத்திலே பாசம், பரிவு, அன்பு, நேசம், என்று காட்டுவதெல்லாம் வெறும் பொய். "காதற்ற ஊசியும் வராது காண் உன் கடைவழிக்கே" என்று பட்டினத்தார் வரலாறு கூறுகின்றது.

எனவே, இனியாவது நல்லதையே எண்ணி, நல்லதையே செய்து, நல்லவர்களோடு பழகிப் பூவுலகில் நல்வாழ்வுவாழ எல்லாம் வல்ல இறையருளை நாடி நிற்போமாக. செய்வீர்களா?

## எண்சீர் ஆசிரிய விருத்தங்கள்
## செல்வச் சந்நிதி

மலையிடத்த குறிஞ்சிநீத்து மணலிடச்சந் நிதியமைத்துக்
கலைமிகுத்த மக்களோடு கலந்திருக்குங் கார்த்திகேயா
உலைமுகத்த மெழுகதென்ன உளமுருகி யுருகிநைந்து
இலையெமக்கிங் கிடமதென்ன இல்லகன்று ஏங்குகின்றோம்
தலைநிமிர்த்தி வாழநாளைத் தந்திடாயோ தந்துவெம்மை
நிலைநிறுத்தி நீக்கமின்றித் தாங்கிநிற்றல் நின்கடனே
சிலையிலாது வேலதாகித் திருவருள்செய் தெய்வமதாய்
அலையிடத்த சூர்தழிந்த அன்னதான ஸ்கந்தரூப

~மூ. தியாகராசா~

தன்னடக்கமும் சுறுசுறுப்புமே மனிதனுடைய நிவாரணங்கள்.

(தொடர்ச்சி...



# வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ



திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

முருகப்பெருமானோடு நேரிடையாகப் பேசும் அளவு அவனருளில் ஐக்கியப்பட்டிருந்தவர் பாம்பன் சுவாமிகள். கல்வியில் கரையிலாக் காஞ்சித்தலத்தில் பாலனோடு, பக்தியாலும் பெருக்கெடுத்தோடும் சிவாலயங்கள், திருமாலின் திவ்யதலங்கள், உலகமுய்ய முப்பத்து இரண்டு அறங்களும் செய்த அன்னை காமாட்சியின் தலம் அனைத்தையும் தரிசித்த பாம்பன் சுவாமிகள் அவருடைய அபிமானத்திற்குரிய குமரப்பெருமானின் குமரக்கோட்டம் தலத்தை தரிசிக்காமலே நேராக ரயிலடிக்குச் சென்றுகொண்டிருந்தார்.

அப்போது தலைப்பாகை அணிந்த சிறுவனொருவன் அவரெதிரே தோன்றி, "பெரியவரே! காஞ்சியில் எல்லாத் தலங்களையும் தரிசித்தாயிற்றா?" என்றான். எனக்குத் தெரிந்த வரை எல்லாத் தலங்களையும் தரிசித்து விட்டேன். "குமரகோட்டத்து முருகனைத் தரிசிக்கவில்லையே" அந்தத் தலம் எங்கிருக்கிறது? அதோ, அங்கே! நான் வழிகாட்டுகிறேன் என்றான் சிறுவன். குமரகோட்டத்து முருகனைத் தரிசிக்க ஆவலாகத்தான் இருக்கிறது... ஆனால் ரயிலுக்கு நேரமாயிற்றே என்று தயக்கத்துடன் கூறினார். "உங்களுக்காக ரயில் நிற்கும்!" என்றான் சிறுவன். ஆர்வத்துடன் சிறுவனைத் தொடர்ந்து சென்றார். குமரகோட்டத்துக்கு அருகாமையில் சென்ற சிறுவன் திடீரென மறைந்துவிட்டான். அப்போதுதான் பாம்பன் சுவாமிகளுக்குப் புரிந்தது வந்த சிறுவன் தன்னை ஆட்கொள்ள வந்த முருகப்பெருமானேதான் என்று! தன்னை அழைத்து ஆட்கொண்ட குமரப்பெருமானைப் போற்றி வழிபட்டுவிட்டு, ரயிலடிக்குவந்த பின்னரே அந்த ரயிலும் தாமதமாகவே வந்தது. பக்தர்களுக்கு எளியனான, ஞானபாலகனான குமரகோட்டத்து ஸ்ரீ சுப்ரமண்யன் அடியவர்களை ஆட்கொள்ள தத்ரூபமாகக் காட்சி கொடுப்பவன் சிறுவனாக வந்து தனது அடியவருக்கு ஒரு திருவிளையாடலை நடத்தினான் வடிவேலன். காஞ்சிபுரத்திலுள்ள குமரகோட்டத்தில் சோமாஸ்கந்தமூர்த்தி என்ற அற்புதக் கடவுள் அம்மை அப்பருக்கு நடுவில் செல்லப்பிள்ளையாக வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். அடியார்களும் ஞானிகளும் மட்டுமன்றி ஈசனும், உமையவளும், மகாவிஷ்ணுவுமே இந்தக் குமரகோட்டத்தை வலம் வருகிறார்கள். காஞ்சிநகரில் மாவடியின்கீழ் இருக்கும் ஏகாம்பர பெருமானும், மக்களுக்காக மண்ணுலகில் முப்பத்திரண்டு அறங்கள் இயற்றிய அன்னை காமாட்சியும், கச்சபேசப் பெருமானும், வரதராஜப் பெருமாளும், பச்சைவண்ணரும், பவளவண்ணரும், உலகளந்த பெருமாளும், வைகுந்தவாசனும் உற்சவ காலங்களில் குமரகோட்டத்து ஞானச் செல்வனான குமரேச வள்ளலை வலம் வராமல் செல்வதில்லை! திருப்புகழ் பாடி முருகன் புகழை திக்கெட்டும் ஒலிக்கச் செய்தவர் அருணகிரி

கடவுள் தமது செயலைக் கோழைகள்மூலம் விளக்கமாட்டார்.

நாதர். சண்முக கவசம் பாடி, ஆறுமுகனின் கருணையை அகிலமெலாம் பெறச்செய்தவர் பாம்பன் சுவாமிகள். இன்னொரு மகான் கச்சி யப்பச் சிவாச்சாரியார் இந்தத் தலத்திலேயே வாழ்ந்து ஓர் அற்புதப் பணியை ஆற்றியிருக் கிறார். அவர் கந்தபுராணத்தைப் பாடி அரங் கேற்றியதும் இந்தக் குமரகோட்டத்தில்தான்.

முருகப்பெருமானின் சிறப்புக்களை யும், திருவிளையாடல்களையும் தொகுத்து சிறப்பான புராணம் ஒன்றைப் படைக்க விரும் பிய சிவாச்சாரியார், கந்தனைத் தொழுது அவன் அருளுக்காக உருகி நின்றார். தொண் டர் பெருமை கூறும் பெரியபுராணம் பாடு வதற்கு "உலகெலாம்" என்று ஈசன் முதல் பதம் எடுத்துக்கொடுத்தார். அதேபோல, கந்த புராணம் எழுதுவதற்காக "திகட சக்கரச் செம் முகம்" என்று கந்தப்பெருமானும் அடி எடுத்துக்கொடுத்தார். ஒவ்வொருநாளும் பாடி யதை கந்தனுடைய சந்நிதியிலே வைத்து விட்டு இரவு போய்விடுவார். முருகன் அத னைப் படித்துப் பிழை திருத்தம் செய்து வைப்பார். இப்படியாக கந்தபுராணத்தைப் பாடி முடித்துவிட்டார். அதனைக் கந்தப்பெருமான் சந்நிதியில் அரங்கேற்ற சித்தமாயிற்று. அரங் கேற்றம் தொடங்கியதும் அங்கிருந்த புலவர் கள் இதென்ன "திகட சக்கர" என்ற பதம்? இதற்குப் பொருள்கூறி மேலே தொடர்க என் றனர். "புலவர்களே! இது பிரணவத்தின் பொரு ளான குமரனே அளித்த செஞ்சொல். அதற்கு விளக்கந் தரும் அருகதை யாருக்குண்டு? அதைப் பகுத்துப் பார்க்காமல் தொடர்வோம்" என்றார். மற்றப் புலவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. இதன் பொருள் தந்த பின்னரே அரங்கேற்றம் தொடரும் என்றனர். சபை கலைந்தது. ஆனால் சிவாச்சாரியாரோ "முருகா! ஏன் இந்தச் சோதனை?" என்று புலம் பியவாறு ஊண் உறக்கமின்றி மண்டபத்திலேயே கிடந்தார்.

மறுநாள் சபைகூடும்போது அனை வரும் வியப்புறும் வண்ணம் ஓர் இளம்புலவன் ஒளியில் விளைந்த உயர் ஞானமே போல சுவடியும், கையுமாக, "திகடசக்கர" என்ற பதத்திற்கு விளக்கமளிக்க சபையில் பிரசன்ன மானான். இதோ இச்சுவடி வீரசோழியம் என்ற இலக்கணநூல் இதிலே 'ழ'கரம், 'ள'கரம் இரண்டிற்கும் முன்னால் 'த'கரம் வந்தால் 'ட'கரம் ஆகும் என விதியுள்ளது போதுமா? என்றார் ஞானபண்டிதன். அவனையும் அவனது செம்முகத்தையும் கண்டதுமே அந்தப் பதத் தின் பொருள் அனைவருக்கும் புரிந்துபோயிற்று. முருகன் அதன் பொருளை எடுத்தியம்பி சபையை மெய்மறக்கச்செய்து மறைந்து விட்டான். கச்சியப்பரின் கரங்கள் முருகனை நோக்கிக் குவிந்தன. ஒளிபோல வந்தவன் ஒளி யாகச் சடுதியில் மறைந்ததைக் கண்டு சபை யோர் பெருமிதமும், விம்மிதமும் அடைந்து "அரோகரா, அரோகரா" எனப் போற்றி வணங் கினர். தன் அருளை ஒரு திருவிளையாடல் மூலம் உணர்த்தி கந்தபுராணத்தை தானே முன்னின்று அரங்கேற்றம் செய்யும் பேறுபெற்ற தலம் குமரகோட்டம்.

இங்கு பிரமனின் பிரணவ வழக்கு விவகாரமாய், தவமியற்றும் பிரமச்சாரிய கோலத்தில் திகழ்கிறார் குமரப்பெருமான். பிரணவமாய், பிரணவத்தின் பொருளாய், பிறவி நீக்கிப் பேரருள் புரியும் ஞானமாய், பிணிபோக் கத் தவமியற்றும் கருணைப் பெரும்செல்வமாய் எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறார். இங்கு தீபாவளி தவிர ஆண்டுதோறும் தேன் அபி ஷேகம் கொள்கிறார்.

"தீ தறு தேன் நிகர் பேரருளைப்பெற வந்தடைவீர் என் பாதங்களை" என்று தெய்வ நாதன் நம்மை அழைக்கும் குறிப்பை அந்தத் தேனாபிஷேகத்தில் காணலாம். வினையகற் றும் வேல்கொண்ட வள்ளி கந்தனின் திரு வருளைப் போற்றித் தொழுவோம்.

**தன் வலிமையைக் கணித்த பின்னரே செயலில் ஈடுபடவேண்டும்.**

முருகப்பெருமான் தனை அடைந்த அன்பர்களுக்கு இனியவர், மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற ஞான முதல்வர், முனிவர்க்குத் தலைவர், சோதிசொருபர், சிந்தனைக்கு எட்டாத பெருமான், பிரபஞ்சங்கள் அனைத்தையும் படைத்தவர், சிவபெருமான் தந்த கருணைக் கடவுள், தேவர்களுக்கெல்லாம் அதிதேவர், பகைவர்க்கு இடியேறு போன்றவர், வேற்படையை யுடைய நிர்மலர், பொய்அடிமை இல்லாத புலவர்களுக்கு எளிவந்த பெம்மான், பன்னிரு திருப்புயங்களையுடையவர், மும்மூர்த்திகளுமாய் நின்ற முதல்வர் ஆகிய முருகப்பெருமானை நாம் அடைக்கலமாக அடைய வேண்டும்.

குமரகோட்டத்து அழகா! குறைவிலா அருள்தரு முருகா! அருள்காட்டும் திருமுகம் ஆறுகொண்ட ஆனந்தா! அருள்மூர்த்தியே! குமரா சரணம்: அருளே சரணம்: என் அமுதே சரணம்: செவ்வேளே சரணம்: நின்சேவலே சரணம்: சக்திவேல் சரணம்: மயிலும் சரணம்: வேதப்பொருளே: வினைதீர்க்கும் வேலா: நின் அருள் திருப்பாதங்களே சரணம், சரணம்!

கச்சியப்பருக்கு அடியெடுத்துக்கொடுத்த கருணைத்தேவா! தந்தை சொல்லின் பெருமையை உலகுக்கு உணர்த்த தவம் செய்த கந்தா! சோமாஸ்கந்த நிலையில் தன் ஆலயத்தையே கொண்ட ஞானமுருகா! கந்தபுராணம் அரங்கேறிய திருத்தலக்குமரா! தினந்தோறும் தேனபிஷேகம் காணும் உமைபாலா! சிவமணிக்கு உபதேசித்த ஜெபமணியே, ஆறுமுகச் சிவனே, வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ!

முத்தரின் முதல்வா முதுமொழித் தலைவா
முட்டிலா வனப்பது பொதுளும்
சித்திரவடிவே திகழ் அரும் குழகா
செங்கையில் நன்கு அயில் உடையாய்
மத்தமும் எழில் ஆர் அறுகும் வில்வமும்
மதலையும் அணிபவர் மழவா
பித்தனேன் குறைதீர்த்து அருள்சிவனே என்
பிழை பொறுத்து ஆள்வது உன்கடனே.

(ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள்)

(தொடரும்...

**சித்திரை மற்றும் வைகாசி மாத குருபூசைத் தினங்கள்**

**28. 04. 2011 சித்திரை 15 வியாழன்**
**திருநாவுக்கரசர் குருபூசை**

**03. 05. 2011 சித்திரை 20 செவ்வாய்**
**சிறுத்தொண்டர் குருபூசை**

**05. 05. 2011 சித்திரை 22 வியாழன்**
**மங்கையர்க்கரசியார் குருபூசை**

மன அமைதியோடு இருப்பதில் என்றும் ஆபத்து இல்லை.

உ

# கயமையும் நயமையும்

ஆத்கடலான் முருகவேள் பரமநாதன் அவர்கள்

கயமை- பொறாமை, அழுக்காறு எரிச்சல்- ஓர்வகை எச்சிற்குணம். நயமை- ஒப்புரவு, நாகரிகம், பிரதி பயன்பார்த்தல், கண்ணோட்டம்.

கண்ணோட்டம் என்பது பழகினவர் இடத்து, மாற்றங்கள் ஏற்பட்டாலும் மறுத்தற்கு இயலாமல் மீண்டும் பழகுவது, தொடர்ந்தும் பழகுவது, கண்ணோட்டம்- தாட்சண்யம்.

ஒருவர் எல்லாருக்காகவும், எல்லாரும் ஒருவருக்காகவும் என்ற தத்துவமே ஒப்புரவின் சாரமாகும்.

நாகரிகம் என்பது, உடலிற் கலந்து, உயிரிற் கலந்து உணர்விற் கலந்து வாழ்வின் விளக்கமாக அமைவது.

மனித ஒழுகலாறுகள், பழக்கவழக்கங்கள், சீர்சிறப்பாய் அமைந்து நீதிவழுவா நெறிமுறையில் தன்னை வழிநடத்தினால், அச்சமுதாயத்தை உலகம் போற்றும். போற்ற வாழவேண்டுமேயன்றி- தூற்றவாழக்கூடாது. சிரித்து வாழ்வதே மேலானது, சிரிக்க வாழ்வது சிறப்பன்று. எதையும் சிந்தித்துச் சீர்தூக்கி வாழ்வதே வாழ்வு. இவ்வகையில் மனிதநேயம், மனித விழுமியம், மனிதம் பேணப்படல் வேண்டும். பேணுதல்- தாங்குதல், பாதுகாத்தல். தந்தைதாய் பேண்- ஔவை. பேண்- காப்பாற்று.

மனித சமுதாயத்திலே நல்லதும் கெட்டதும் நடைமுறையில் நிறைய உண்டு. நல்லன நன்மை பயக்கும், தின்மை தீய பயக்கும். எனவே உலகத்தால் ஒதுக்கப்பட்டவற்றைவிட்டு மேன்மையானவற்றைப் போற்றி வாழவேண்டும். ஓர் நாணயத்தின் இருபக்கங்கள்தான் நல்லதும் தீயதும். எனவே தீமைகளைத் தவிர்த்து- நன்மைகளை நன்மை பயப்பனவற்றை நாம் நாடோறும் கடைப்பிடிக்க வேண்டும். நல்ல பரம்பரையை உருவாக்கவேண்டும். நீதி நூல்களாலும், சமய நூல்களாலும் இலட்சிய சமுதாயத்தாலும் நீக்கப்பட்டவையை நீக்கி நல்லனவற்றையே நாம் கைக்கொள்ள வேண்டும். இதற்கு நல்ல அறிவு வேண்டும். இதை வள்ளுவம் அறிவுடைமையில் எடுத்துப் பேசுகிறது.

சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின் பால் உய்ப்பதறிவு

-குறள் 422

மனத்தை அது செல்கின்ற வழியிற் செல்லவிடாது, (அப்பாதை) வழியிலே நல்லது எது, தீயது எது என ஆராய்ந்து தீயதை நீக்கி (தவிர்த்து) நல்லதன்கட் செலுத்துவதே அறிவு. எனவே ஒவ்வொன்றின் சாதக பாதகங்களைக் கண்டு உத்தமமானவற்றை மேற்கொள்வதே உசிதமாம்.

இந்த வாழ்க்கைமுறையிற் சில வெறுக்கத்தக்க, இசைவற்ற, பக்குவமற்ற வழிமுறைகள் பண்பாடற்றவையே. இதில் ஒன்று கயமை. கயமையுடையவர்கள் கயவர். இந்தக் கயவர் மக்கள் மத்தியில் மலிந்து போயினர். கயமையுள்ள இடத்தில் நயமை இருக்காது. ஆமை புகுந்த வீடும் ஆமினா புகுந்த வீடும் உருப்படாது என்பர். இதை முதல் ஔவையார் வாக்கிற் பார்ப்போம்.

கற்பிள வோடு ஒப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிள வோடு ஒப்பாரும் போல்வாரே- விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போலே மாறுமே
சீர் ஒழுகு சான்றோர் இனம் -மூதுரை 23

கீழ்மக்கள் கடுங் கோபத்தால் வேறுபட்டவராயின், கருங்கற்பிளவுபோல் மீண்டும் சேரார். அவ்வண்ணம் சேராதபோது- பொன் பிளந்தாலும் சேர்வதுபோல, ஒருவர் சேர்த்துவைக்க மீண்டும் நட்பாவார் சிலர். பெருமைமிக்க சான்றோருடைய கோபம், வில்லைப்பிடித்து, அம்பினாலே நீர்கிழியுமாறு எய்த வெட்டுப்போல அப்போதே தீரும்.

இந்தக் கயமைக்குணம் பற்றி வள்ளுவனார் ஒழிபியலிலே ஓர் அதிகாரம் தந்துள்ளார். கயவரது கெட்ட குணம் அங்கே பேசப்பட்டிருக்கிறது.

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும்கீழ் -குறள் 479

உடுப்பதூஉம் உண்பதூம் கீழ்காணின்- பிறர் செல்வத்தாற் பட்டுத்துகில் உடுத்தலையும் பாலோடு அடிசில் உண்டலையும் கீழ்காணின்- கயவன் காண்பானாயின் பிறர்மேல் வடுக்காணவற்றாகும் கீழ்- அவர் மாட்டில் வடு இல்லையாயினும் உண்டாக்க வல்லனாம்.

கயவனைக் கீழ் என்று குறிப்பிடுகிறார். வற்றாகும் வலிந்து காணப்படும். பிறர் உண்பது கஞ்சியாகவேனும், கூழாகவேனும் இருந்தாற்கூட இவன் கஞ்சியாகிலும் குடிக்கிறானேயெனப் பொறாமைப்படும். அஃதே போல உடுப்பது பட்டாயும், பீதாம்பரமாயும் இல்லாமல் கந்தையாயினும் கசடாகவேனும் இருந்தாற்கூட இவன் கந்தையாயினும் கட்டுகிறானே எனப் பொறாமைப்படும். இந்த நிலை வள்ளுவர் வாழ்ந்த சொந்தமண்ணுக்கு மட்டும் உரியதன்று. உலகத்துக்கே பொது.

ஒருவர் தன் அண்ணையைப் பார்க்கப் போயிருந்தார் சேர்மனிக்கு. அண்ணை ஒருதினம் தம்பியையும் கூட்டிக்கொண்டு தன் சேர்மனிய நண்பர் வீட்டுக்குச் சென்றார். அவர் வெளியிலே உயர்ந்தரக பென்ஸ்கார் (பென்ஸ்5) ஒன்றைக் கழுவிக் கொண்டு நின்றார். இருபகுதியாரும் உரையாடிக்கொண்டிருந்தனர். இருந்தாற்போல போனவர் என்னிடமும் S. ரக கார் (CAR) இருக்கிறதென்று சொன்னார். அவ்வளவுதான். சேர்மனியர் பைப்பைப் போட்டுவிட்டு- கதவைத்திறந்து உள்ளே போனவர் வெளியே வரவேயில்லை. காரணம் என்ன? வேறு நிறத்தவர். கறுப்பர் உயர்ந்த சாதிக் கார் வைத்திருப்பதா என்ற பொறாமை. எரிச்சல். இப்படிப்பினை என்ன சொல்கிறது கயமை எந்தத் தோலுக்கும் சொந்தம் என்பதுதான். இந்நிகழ்வு இன்னொரு உண்மையையும் கூறுகிறது. திருக்குறள் உலகப் பொதுநூல்தான் என்பதற்கு இது ஓர் சாட்சியாகும். பல்கலைக்கழக மட்டத்திலே கெட்டிக்கார மாணவர்களுக்கு இடைஞ்சல் உண்டாக்கி அவர்களை முன்னேறவிடாது தடுப்பதும் ஒருதினுசான கயமைதான்.

நல்ல பேச்சாளர்கட்கு இடர்விளைப்பதும், உயர்ந்த சமயச் சிந்தனையாளர்களையும், எழுத்தாளர்களையும் மட்டந்தட்டும் ஆத்மீகவாதிகளும் இல்லாமல் இல்லை.

துச்சனருக்கு அங்கம் முழுவதும் விடமேயென்றாள் ஒளவை. தீங்கினர் தங்கண்ணிற் தெரியாத தூரத்தே நீங்குவதே நல்ல நெறி, உடன் இருந்து குழி தோண்டுபவர்களும் இல்லாமல் இல்லை. இவர்களை நம்பி நாம் இருக்கக்கூடாது. இந்த நயவஞ்சகரில் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

நாக்கு நுனியில் நறுந்தேனும் நெஞ்சகத்து
நீக்கரிய நஞ்சும் நிலைகொண்ட தீக்குணத்தோன்
இன்சொல் உரைக்கின்றான் என்று அவனை
என்சொலினும் நம்பாதே செய்வான் இடர் விவேகசிந்தாமணி

நல்லோர் கேண்மை நாடோறும் நன்றாகும். போலி வேடதாரிகள் நுனிநாக்கில் இனிப்பும், அடிநாக்கில் நஞ்சும் உடையவராய் உலாவுவர். எனவே நாம் வெகு ஜாக்கிரதையாய் இருப்பது புத்திசாலித்தனமாகும்.

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே- தீயார்
குணங்கள் உரைப்பதுவும்தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது

மூதுரை4

எனவே கயமை உள்ள இடத்தில் நயமை இல்லை என்பதை உணர்ந்து வாழ்வோமாக.


# கீதையின் உபதேசம்

குருநாதர் ஒருவர் தமது சீடர்களுக்குப் பகவத்கீதை பற்றி விளக்கிக்கொண்டிருந்தார். அவர் சில அத்தியாயங்கள் முடிந்த பிறகு, "கண்ணன் கீதையின் முதல் அத்தியாயத்தில் என்ன உபதேசித்தான்?" என்று சீடர்களிடம் வினவினார். சீடர்கள் பதில் சொல்லத் தெரியாமல் திகைத்தனர். ஏனென்றால் கண்ணனின் உபதேசம் இரண்டாவது அத்தியாயத்தில்தான் ஆரம்பிக்கிறது. அர்ஜூனன் கூறியதற்கு இணங்க அவனுடைய தேரைக் கண்ணன் ஓட்டிச்சென்று, பாண்டவ- கௌரவ சேனைகளுக்கு இடையே நிறுத்தினான். இது முதல் அத்தியாயத்தில் உள்ள செய்தி. தான் ஏற்றுக்கொண்ட தேர்ச்சாரதிப் பொறுப்பை உரியபடி கண்ணன் நிறைவேற்றினான். அதாவது பலனை எதிர்பார்க்காமல், தன்னுடைய கடமையைக் கண்ணன் செய்தான்.

"கண்ணனின் இந்தச் செயல், 'கடமையைச் செய்' பலனை எதிர்பார்க்காதே!; என்ற கீதையின் முக்கிய உபதேசத்தை உணர்த்துகிறது. இதுவே முதல் அத்தியாயத்தில் பொதிந்துள்ள உபதேசம்" என்று தெளிவுபடுத்தினார் குருநாதர்.

அன்புதான் இந்த உலகிலுள்ள கடவுள்.

உ




**இரா சாந்தன் அவர்கள்**

மனித நாகரிக வரலாற்றில் கலைகள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. இக்கலைகள் மனிதப் பண்பினை வளப்படுத்துவது குறிப்பிடற்பாலது. "ஆயகலைகள் அறுபத்து நான்கு" என நம் முன்னோர் கலைகளின் எண்ணிக்கை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இவ் எண்ணிக்கை நாகரீக வளர்ச்சிக்கேற்ப அதிகரித்துவிட்டதாயினும் கட்டிடக்கலை, ஓவியக் கலை, சிற்பக்கலை, இசைக்கலை, நாட்டியக் கலை போன்ற சீரும் சிறப்புமுள்ள கலைகளின் முக்கியத்துவம் குன்றவில்லை.

மனித பண்பாட்டு வரலாற்றிலே நுண் கலைகள் முக்கியமான இடத்தினை வகிக்கின்றன. கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம் முதலிய நுண்கலைகள் பல்வேறு நாடுகளிலே வெவ்வேறு அளவிலே வளர்ந்து மனித வாழ்வினை வளப்படுத்தி வந்துள்ளன. மனித வாழ்விலே கலைகள் இறைவனுக்கே அர்ப்பணிக்கப்பட்டன. குறிப்பாக இங்கு குறிப்பிடப்பட்ட கலைகள் தெய்வீக நிழலிலேதான் நன்கு வளர்ந்து வந்துள்ளன. இறைவனே வெவ்வேறு வடிவங்களில் கலைகளின் வடிவமாகவும் முடிவாகவும் கருதப்பட்டான்.

கட்டிடக் கலையின் சிறப்பை நாம் இந்துக்கோயில்களில் காணலாம். இராஜ இராஜன் எழுப்பிய தஞ்சைப் பெரிய கோயிலானது தென்னாட்டு வரலாற்றிலே குறிப்பாகக் காணப்படுகிறது. இவ் ஆலயம் அனைத்து ஆலயங்களிலும் மிக உயர்வாகவும், பெரிதாகவும் உள்ளது. இவ் ஆலயம் தென்னிந்தியக் கட்டிடக்கலையின் உச்ச நிலையைக் காட்டுகின்ற தலைசிறந்த படைப்பாக விளங்குகின்றது. இவ்வாலய கட்டிட அழகைவிட சிற்பக் கலை மரபுக்கும் பெரும் தொண்டாற்றி உள்ளது. ஆலய கோபுரங்களில் காணப்படும் சிற்பங்கள் எமக்கு ஒவ்வொரு புராணக் கதையை உணர்த்திநின்று எம்மை இறைவன் பால் இட்டுச்செல்வதை நாம் உணரலாம்.

ஓவியக்கலை பண்டைய காலத்தில் சுவர்களிலும், மரப் பலகைகளிலும் வரையப்பட்டன. இவ் ஓவியங்கள் அழிந்த போதிலும் குகைக்கோயில்களில் காணப்படுகின்றன. இச் சுவர் ஓவியங்கள் இன்றும் சிறப்புற்றுக் காணப்படுவதை அவதானிக்கலாம். குகை ஓவியங்களில் அஜந்தா குகைஓவியம் தலைசிறந்து விளங்குகின்றது. ஆலயங்களில் இடம்பெறும் இதிகாசபுராண செய்திகளையும், கடவுளரது திருவிளையாடல்களையும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டு ஆன்மீக வளர்ச்சியையும் இறை உணர்வையும் எம்மில் ஏற்படுத்துகின்றது.

நாட்டியக்கலையை நினைத்தவுடன் மனதில் எழுவது நடராஜரது திருஉருவமே. எனவே நடனக்கலை சமயத்துடன் சிறப்பாக இந்துசமயத்துடன் பின்னிப்பிணைந்து வளர்ந்து வந்துள்ளது. நுண்கலைகளில் காலத்தால் முந்தியது நாட்டியக்கலை என கருதப்

படுகின்றது. இவ்வழகியற்கலை மிகப்பழைய வரலாறு கொண்டதாகவும், பெரும்பாலும் சமய சூழ்நிலையிலே சமயக் கருத்துக் களையும், தத்துவக் கருத்துக்களையும் புலப்படுத்தி மக்களை ஆன்மீக வழிப்படுத்தும் சாதனமாகவே விளங்கிவந்துள்ளது. இறை வனை அடைவதற்கான சிறந்த வழிகளாக இசையும், நடனமும் கருதப்பட்டன.

நாயன்மார்கள் ஆலயங்கள்தோறும் திருநீற்றையும், திருவைந்தெழுத்தையும் சிறப்பித்ததோடு இறைவனின் திருக்கோலக் காட்சியையும், தாம் இறைவனைக் கண்ட, கேட்ட இறைவனின் அருட்செயல்களை மக் கள் உணரும்படி செய்தது நோக்கற்பாலது.

ஆலயங்கள் கலைகளின் நிலைக்கள மாகத் திகழ்கின்றன. ஆலயங்கள் சமய உணர்வினையும் அறிவினையும் புகட்டும் நிலையங்களாக மட்டுமன்றிக் கவின்கலை நிலையங்களாகவும் மிளிர்கின்றன. ஆலய அமைப்பு அதில் இடம்பெறும் சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவற்றிலே கவின்கலை குறிப்பாக இசையும், நடனமும் முக்கியமான இடத்தினைப் பெற்றுள்ளன. ஆலயமே ஒரு முழுமையான கவின்கலைக் கூடமாகவும் காட்சி அளிக்கின்றது.

கலைவடிவினனாய், கலைப்பிரியனாய், கலை ஆதரவாளனாய் விளங்கும் இறை வனை வழிபாடு செய்யும் முறைகளிலே கலை களும் குறிப்பிடப்பாலன. மலரினாலும், இலை யினாலும், மனத்தினாலும் வழிபடுதல்போன்று இசையினாலும் நடனத்தினாலும் இறைவனை வழிபடும்முறை நன்கு போற்றப்படுகின்றது. "தமிழோடிசையாக" விளங்கும் இறைவனை இலங்கையை ஆண்ட இராவணன் வீணைக் கொடியோன் எனவும், அவன் சாமகானம் பாடிச் சிவபெருமானின் திருவருள் பெற்றான் என்ற நிகழ்வில் இருந்து கலையின் சிறப்பம்சத்தை நாம் காணலாம்.

"ஏழிசையால் இசைப்பயனாய் விளங்குகின்ற இறைவனை
"ஆடுகின் றிலை" கூத்துடையான் கழற்கு அன்பிலை
என்புருகப்- பாடுகின்றிலை" எனவும் "ஆடிப்பாடி
அண்ணாமலை கைதொழ ஓடிப்போம் நமதுள்ள வினைகளே"

என்றும் "பண்ணினேர் மொழி யாளோடு பாங்கரோ", என சைவ நாயன்மாரும் "பாடோமே எந்தை பெருமானைப்பாடி நின்றாடோமே ஆயிரம் பேராணை" என வைணவ ஆழ்வாரும். ஆடல்பாடல்மூலம் ஆண்டவனை வழிபட்டு உய்யும் முறையினை நன்கு வலியுறுத்தியிருப்பதனைக் காணலாம்.

ஆலயங்கள் மனித வாழ்க்கை முறையிலே சைவ மக்கள் மத்தியில் சமய விழிப்புணர்வையும், கலையுணர்வையும் ஏற்படுத்தி கலையும், சமயமும் ஒன்றோடு ஒன்று பிணைந்து சமுதாயத்தை வளர்த்ததோடு விழுமியப் பண்புகளை மக்களிடம் ஏற்படுத்துவது நோக்கற்பாலது.

---

நாளைத் தேடு....

கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார். அவரவர் புரியும் நன்மை, தீமைகளை அறிந்து அவைகளுக்குத் தகுந்த பலாபலன்களை அவர் அளித்து வருகின்றார்.

உன் கடமையை மட்டிலும் சரிவரச் செய்துவந்தால் மற்ற விஷயங் களைக் கடவுள் கவனித்துக்கொள்வார்.

பண்பு அமைவது ஒருவருடைய இளமையில்.

உ

(தொடர்ச்சி...

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் தொடர்-44

**சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள்**

இறைவனுடைய அடியவர்கள் நாளுக்கும் கோளுக்கும் என்றுமே அஞ்சுவதில்லை. "நாளும் கோளும் நம்பனடியார்க்கு நலிவு செய்யாது" என்பது அடியவர்களுடைய நம்பிக்கையாகும். இறைவன் அகத்திலே இருந்து அருள் வழிகாட்டும்பொழுது எல்லாக் கிரகங்களும் நன்மையே செய்யும் என்பதை

"ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே"

என ஞானக்குழந்தையாகிய சம்பந்தரின் கோளறு பதிகப் பாடல் குறிப்பிடுகிறது. முருகப்பெருமானுடைய திருவருள் இருந்தால் வினையாலும் வினையின் விளைவாகத் தோன்றும் நாளினாலும், கோளினாலும் எதுவித அச்சமும் கொள்ளத்தேவையில்லை என்பதை

"நாளென் செயும் வினைதான் என் செயும்"

என்ற கந்தரலங்காரப் பாடல் விளக்குகிறது.

உலகமெல்லாம் ஆண்டருளும் இறைவனின் திருவடித் தாமரைகளை என்னுள்ளம் பொருந்தியிருக்கத் தந்தருளிய இறைவனை அன்றாடம் போற்றி வணங்கி வழிபட்டால் அதன் பயனாகிய பேரின்பப் பெருவாழ்வைப் பெறலாம். சிவப்பரம்பொருளிடத்து நான் என் கண்ணையும் கருத்தையும் வைத்துப்போற்றி வணங்கினேன். கோள்களினால் வரும் தீமைகளையும் வினைப் பயனால் வரும் துன்பங்களையும் சிவனுடைய திருவருள் அடியோடு அழித்தது. இதனால் எனது துன்பப் பிறவி ஒழிந்தேன். இன்ப நிலையில் இருந்தேன் எனச் சிவனின் திருவடியைப் பற்றிப் பிடித்து வணங்குவதால் ஏற்படும் பயனைத் திருமூலர் பின்வரும் திருமந்திரப் பாடலில் குறிப்பிடுகின்றார்.

ஆளும் மலர்ப்பதம் தந்த கடவுளை
நாளும் வழிபட்டு நன்மையுள் நின்றவர்
கோளும் வினையும் அறுக்கும் குரிசிலின்
வாளும் மனத்தொடும் வைத்து ஒழிந்தேனே

உண்மையான பக்தி செலுத்தினால் மாட்சிமை பொருந்திய வீரர்களுக்குக் கிடைக்கும் பெரும் பதவியாகிய இறைவனின் திருவடியைக் காணும் வாய்ப்புக் கிட்டும். புண்ணியம் செய்த பெரியோர்களுக்கு கிட்டுகின்ற பேரின்ப உலகம் இதுவாகும். மனம் கள்ளமின்றி மெய்யான நிலையில் நின்று வணங்கும் அன்பர்களுக்குச் சொர்க்கலோகமாகிய இறைவனின்

**கடவுளைப்போல பிறர் குற்றங்களைப் பலமுறை மன்னிக்கப் பழகவேண்டும்.**

திருவடியை அடையும் வாய்ப்புக் கிடைக்கும். இதுவே பாவம் போக்கும் புனித தீர்த்தமும் ஆகும். தவம் செய்வோர் பெறுகின்ற புண்ணிய உலகமும், புனித நதிகளிலும் புண்ணிய தீர்த்தங்களிலும் குளித்துப்பெறும் பாவ விமோசனமும், வீரர்கள் தங்கள் உயிரைக் கொடுத்துப் பெறுகின்ற வீர சுவர்க்கமும் ஆகிய அனைத்தும் ஈசன் திருவடிகளில் மனதைச் செலுத்துவதினால் மட்டுமே பெறமுடியும். "பக்தி வலையில் படுவோன் காண்க" என்ற திருவாசக வாக்கிற்கு அமைய உண்மையான உருக்கத்தோடு சிவனின் திருவடிகளை எண்ணித் துதிக்கின்ற பக்தர்களுக்கு எல்லாப் பயனையும் அவனுடைய திருவடியே தரவல்லது என்கிறார் தவயோகி. இறைவனிடத்தில் மெய்யான விருப்பம் செலுத்துவது திருவடியிலே மனம் நன்கு பொருந்தி நிற்பது. தீய எண்ணங்களில் இருந்து மனம் திருந்துவது ஆகியன இறைவனின் திருவடியை நாடுவோர்க்குரிய கடமைகள் எனத் திருமந்திரம் விளக்குகிறது.

விரும்பிய அவனடி வீர சுவர்க்கம்
பொருந்தில் அவனடி புண்ணிய லோகம்
திருந்தில் அவனடி தீர்த்தமும் ஆகும்
வருந்தி அவனடி வாழ்த்த வல்லார்க்கே

"என் கடன்பணி செய்து கிடப்பதே என்ற அப்பர் பெருமானுடைய வாக்கிற்கு அமையத் திரிகரணங்களையும் இறைவன்மீது செலுத்தி வணங்கும் தொண்டர்களுக்கு முத்திக்கான வழியை அவன் காட்டுவான். அண்ட சராசரமெல்லாம் கடந்து வியாபித்து நிற்கும் பெருமையை உடையவன் இறைவன். இத்தகைய பெருமைக்குரிய பேராளன் அற்பமானது என்று கூறப்படும் மானுட உடம்பினுள்ளும் பொருந்தி நிற்பான். ஒலி செய்யும் வீரக்கழல் அணிந்த பெருமானுடைய திருவடிகளைத் தரிசிக்கும் வாய்ப்புத் தொண்டர்களுக்குக் கிடைக்கும். இத்தகைய தொண்டர்களைச் சன்மார்க்க நெறியில் அழைத்துச் செல்வதற்கு இறைவன் முன்வந்து நின்று உதவுவான். நாத சொருபமான இறைவன் தொண்டர்களை முத்திக்கு அழைத்துச் செல்லும் நெறியில் வழிகாட்டியாய் விளங்குவான்.

அண்டங் கடந்துயர்ந் தோங்கும் பெருமையன்
பிண்டங் கடந்த பிறவிச் சிறுமையன்
தொண்டர் நடந்த கனை கழல் காண்டொறுந்
தொண்டர்கள் தூய்நெறி தூங்கி நின்றானே

கடவுள் இல்லை என்று கூறுபவர்களை நாஸ்திகர்கள் என்றும் கடவுள் உண்டு என்று ஏற்பவர்களை ஆஸ்திகர்கள் என்றும் அழைக்கும் மரபு உண்டு. புறக்கண்ணுக்கு காண முடியாத பொருள்கள் எதனையும் உட்பொருள் என்று கூறமுடியாது. நமது புலன்களினாலோ அறிவினாலோ இறைவனைக்காண நினைப்பது ஒருவன் தன் தோளிலே தான் ஏறிநிற்பதைப்போலவும் வண்டி சக்கரத்தை உருட்டுவது போலவும் காணப்படும் என்று இந்துக்களின் ஞானக் களஞ்சியமாகிய உபநிடதங்கள் கூறுகின்றன. உள்ளம் உருகி வழிபடும் அடியவர்களின் அகத்திலே இறையருள் பிரகாசிக்கும். வெப்பம் அதிகம் கொடுத்தால் கல்லுக்கூட உருகும். ஆனால் சிலருடைய கல்நெஞ்சம் என்றும் உருகுவதில்லை.

"கல்லேனும் ஐய ஒரு காலத்தில் உருகும்
என் கல்நெஞ்சம் உருகவில்லையே"

என்ற தாயுமான சுவாமிகளின் பாடல் பக்தியால் உருகாத பாவிகளின் மனத்தினை வெளிப்படுத்துகிறது. பக்தி வலையில் இறைவன் அகப்பட்டே தீருவான். கண்ணப்பனின் அதிதீவிர பக்திக்கு காளத்தியப்பன் கட்டுண்ட வரலாற்றினைக் கண்ணப்ப நாயனாரின் வரலாற்றிலே காண்கிறோம். பஞ்ச பாண்டவர்களில் இளையவனாகிய சகாதேவன் பக்தியின் வலிமையினால் கிருஷ்ண பரமாத்மாவைத் தன்னுள் சிறைப்படுத்திய வரலாற்றினை மகாபாரதத்திலே காணலாம்.

இறைவனுடைய திருவருளைப் புரியாத காரணத்தினால் அவனை இல்லை என்று சொல்லிவிடவும் முடியாது. பரம்பொருளாகிய இறைவனே பல இடங்களில் பல உருவ வடிவில் காட்சிதருகிறான் என்பதால் அவன் உள்பொருள் என்று கூறிவிடவும் முடியாது. கல்போன்ற நெஞ்சத்தைக் கசிவித்து நிற்பவரிடமே இறைவன் விளங்கித் தோன்றுவான். முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாய் இருக்கும் பழமையானவன், தூய்மையானவன், நடுக்கமற்றவன், குற்றமில்லாத மாணிக்கம் போன்ற பிரகாசமுடையவன். சொல்லில் வடிக்கமுடியாத சோதி வடிவானவன் ஆகிய இறைவன் சீவர்களது உள்ளத்தை உருக்கித் தூய்மை பெற வைப்பதற்காக தொடர்ந்து நின்றருளுகின்றான்.

இல்லனும் அல்லன் உளன் அல்லன் எம் இறை
கல்லது நெஞ்சம் பிளந்திடும் காட்சியன்
தொல்லையன் தூயன் துளக்கிலன் தூய்மணி
சொல்லரும் சோதி தொடர்ந்து நின்றானே

எடுத்த பிறப்பைச் சரியாகப் பயன்படுத்தாத காரணத்தினால், தவநிலையில் நின்று இறையருளைப்பெற முயற்சிக்காமையால். பிறவித் துன்பம் நமக்குத் தொடர்கதையாக ஏற்படுகிறது என்பதைப்

"பின்னே நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்"

எனத் திருமந்திரம் கூறுகிறது.

அளவிலாத ஆற்றலும் குறைவில்லாத நிறைவும் கொண்ட எம்பெருமான் யாவர்க்கும் மேம்பட்ட பெருமையை உடையவன். இத்தகைய இறைவன் இந்த அற்பமான மனித சரீரத்துக்குள்ளும் கலந்து நிற்கிறான். தேவர்களாலும் காணமுடியாத இறைவன் அடியவர்க்கு எளியவனாகக் காட்சி தருவான். ஒவ்வொருவரும் செய்கின்ற தவத்தின் அளவுக்குத் தக்கவாறு அவனை அறியமுடியும். அவர்கள் மேற்கொள்ளும் உண்மையான உள்ளன்போடு கூடிய இறை முயற்சிக்கு ஏற்ப அவனுடைய அருளும் கிடைக்கும். பெருமை மிக்க சிவத்தைச் சிறுமை மிக்க உயிர் தன் தவத்தின் அளவால் அறிந்து கொள்ள முடியும்.

ஏனோர் பெருமையன் ஆகிலும் எம் இறை
ஊனே சிறுமையுள் உட்கலந்து அங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே

உலகியல் வாழ்க்கையில் நாம் பல பொருட்களைப் பற்றுகின்றோம். நாம் பற்றும் பொருட்கள் நம்மை விட்டு விலகும்போது பரிதவிக்கின்றோம். நிலையில்லாத பொருட்களை

நிலையானது எனப்பற்றுவதால் ஏற்படும் துன்பங்கள் பலவாகும். அழிகின்ற பொருட்களாகவும் நிலைமாறுகின்ற பொருட்களாகவும் இருக்கின்ற உடல், செல்வம், அழகு ஆகியவற்றில் வைக்கும் பற்றினால் நமது வாழ்க்கையில் துன்பங்கள் தொடர் கதையாக ஏற்படுகின்றன. உலகப் பற்றுக்களை விடவேண்டுமானால் பற்றற்றவனாகிய இறைவனைப் பற்றுவது ஒன்றே வழியாகும் என்பதைப்,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

என்றே தமிழ்மறையாகிய திருக்குறள் கூறுகிறது. பற்றப்படும் பொருள்களுள் மிக மேலானது சிவமேயாகும் என திருமந்திரம் குறிப்பிடுகிறது. பரம்பொருளாகிய சிவன் எங்கும் நிறைந்திருக்கிறான். சூரியன், சந்திரன், அக்கினி, ஆகிய மூன்றின் ஒளியும் நெற்றிக் கண்ணாக முளைத்தெழுந்த மூலமுதல்வனாக அவன் காட்சி தருகிறான். யோக நிஷ்டையில் இருந்து புருவ மத்தியில் அவன் நினைவைப் பொருத்தி நினைப்பவர்களுக்கு அவன் அங்கு நிலைத்த பொருளாக நின்று அருளுவான். இறைவனை எப்படி நினைக்கினும் அப்படி நின்று அவர்களுக்கு அருளும் தவயோகியாகத் திகழ்வான்.

பற்றின் உள்ளே பரமாய பரஞ்சுடர்
முற்றினும் முற்றி முளைக்கின்ற மூன்றொளி
நெற்றியில் உள்ளே நினைவாய் நிலை தரும்
மற்று அவனாய் நின்ற மாதவன் தானே

சிவனடியார்களின் ஊன் உயிர் எல்லாம் இறைவன் வியாபித்து நிற்பான் என்பதை "ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்" எனத் திருவாசகம் குறிப்பிடுகின்றது. தவஞானியர்களின் உள்ளத்து உணர்வும், உடலின் உயிரும் சிவப்பரம்பொருளாகவே காணப்படும். ஐம்புலன்களுடன்கூடி அறியும் அறிவும், அறியப்படும் பொருளும் தவஞானியர்களுக்கு இறைவனாகவே காட்சி தரும். இவ்வாறு ஆருயிர்களின் உணர்வில், தெரிவில், அறிவில் அவன் தொடர்ந்து கலந்திருந்தாலும் அவன் எண்ணிலடங்காத அளப்பரும் ஆற்றலை உடையவன். பூங்கொத்தில் மலர்ந்த பூக்கள் விரிக்கும் வாச மணம் போல எங்கும் நிறைந்து விளங்கும் வல்லமை உடையவன் என்பதைப் பின்வரும் திருமந்திரம் விளக்குகிறது.

உணர்வும் அவனே உயிரும் அவனே
புணர்வும் அவனே புலனும் அவனே
இணரும் அவன் தன்னை எண்ணலும் ஆகான்
துணரும் மலர்கந்தம் துன்னி நின்றானே

இறைவனைப் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என மூன்று வடிவங்களாகப் பகுத்து நம்முடைய சமய நூல்கள் குறிப்பிடுகின்றன. படைத்தலுக்கு பிரம்மாவையும், காத்தலுக்கு விஷ்ணுவையும் அழித்தலுக்கு உருத்திரனையும் உரிய தெய்வங்களாகக் கூறியுள்ளன. இந்த மூன்று நிலைகளிலும் நிற்கும் ஈசன் ஒருவனே என்கிறார் திருமூலர். சிவனே பிரம்மா ஆகவும், திருமாலாகவும் நிற்கிறான். நிலத்திலும் நிலத்துக்குக் கீழும், மேலே வானத்திலும்

ஆக மூன்று உலகத்திலும் வியாபித்து நிற்கிறான். எங்குமாய், எல்லாமாய் உலகம் முழுவதும் வியாபித்து நிற்கும் சர்வவியாபியான பரம்பொருள் பக்தர்களுக்கு அருட்கனியாக வந்து காட்சி தருகின்றான்.

நின்றனன் மாலொடு நான்முகன் தானாகி
நின்றனன் தான் நிலம் கீழொடு மேலான
நின்றனன் தான் நெடுமால்வரை ஏழ்கடல்
நின்றனன் தானே வளங்கனியாயே

(தொடரும்...

# செந்தீ எமக்களித்த பெரும் சோதீ!

ஞானத் தலைவனாய், நான்முகனுக்கு ஒருகுருவாய்
ஞானங் கொடுத்து வைத்த பெருமானே!
வேலால் உலகனைத்தும் விரைந்து காப்பாற்றி
வியப்பாய் துயரோட்டும் அருள்நீயே!
நீலம் பூத்திருக்கும் ஆற்றின் கரையோரம்
நிறைவாய் சேர்ந்திருக்கும் நிலவோனே!
ஓலம் இடுமெங்கள் உறவின் அவலத்தை
ஒரு தீ நோக்காலே பொசுக்காயோ!

அன்னம் கொடுத்தன்பர் பசியைத் தீர்ப்பதுவே
உலகில் பெருங்கொடையாய் நினைப்பாயே!
இன்னும் எத்தனைபேர் உன் அடியை நாடுகிறார்
இன்னல் தனைத்தீர்த்து மிளிர் நீயே!
மின்னும் விழிகளிலே இரக்கம் தெரிகிறது!
மிச்சத் துயர்களையும் ஒடுக்கிவிடு!
கன்னல் தமிழுக்கு வாய்த்த பொருள் நீயே!
காத்துத் தமிழினத்தின் நிலைகூட்டு!

செல்வச்சந்நிதியின் சிறப்பே! பெருநிதியே!
செந்தீ எமக்களித்த, ஞானப்பெரும் பிளம்பே!
அல்லல் மிகுந்துளது! ஆக்கினைகள் சூழ்ந்துள்ளது!
அடுத்துனது வேல் எடுப்பதெப்பொழுதோ!
எல்லோரும் இன்புற்று இருக்கும் நாள் வாராதோ!
எல்லைகள் பிளவுற்ற 'சண்டைகள்' தீராதோ...!
நல்லோரைக் காப்பதற்காய் நல்லொளியைச் சொரிபவனே!
நற்றமிழின் சோதனைகள் தீர்த்திடவா!

-தாட்சாயணி-

பணப்பார்வைக்கு முகப்பார்வை இல்லை.

உ

# மேற்குலக நாடுகளில் இந்து நாகரிகம்



இ. சாந்தகுமார் அவர்கள்

"ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி" எனப் போற்றப்படும் இறைவனாகிய சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமே இந்து சமயமாகும். இதனுடைய நாகரீக பண்பாட்டு வளர்ச்சியை ஆய்வுசெய்த ஆய்வாளர்கள் இதன் தோற்றத்தினை அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது என்பதனையும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இப்புராதன மகிமை பெற்ற இந்து தர்மத்தின் வரலாற்று விழுமியங்களைத் தொலைத்து விடாமல் இப்புலம்பெயர் மண்ணிலேயும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றதென்றால் இதன் பெருமையை எம்மால் அளவிட்டுக் கூறமுடியாது என்பதே உண்மையாகும்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டிற்கும் இறைவா போற்றி"

என்றும்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்...."

என்றும் கூறப்பட்டதற்கமைய மேலை நாடுகளில் எல்லாம் இந்து நாகரிகத்தில் செல்வாக்கு மிகவும் விரிவடைந்து உள்ளன என்பதனை நாம் அறிந்துகொள்வதற்கு அங்கு அமைக்கப்பட்ட ஆலயங்கள், தொண்டு நிறுவனங்கள், சமய ஸ்தாபனங்கள், கல்விக்கூடங்கள், பலதரப்பட்ட விழாக்கள் என்பவற்றினைக் கொண்டு அறியலாம். அங்கு இந்துநாகரிகத்தின் சிறப்பினைத் தளரவிடாது மேலும் மேலும் உயர்நிலைக்கு கொண்டு வருவதற்குரிய பூர்வாங்க நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறார்கள் என்று அங்கு சென்று வந்தவர்களும் அத்தொண்டு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் சேவைகள்மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதற்கிணங்க சைவ மக்கள் தாங்கள் செல்லுமிடமெல்லாம் ஆலயம் அமைத்துக் கும்பாபிஷேகம் நடாத்தி அங்கு நித்திய நைமித்திய பூஜை வழிபாடுகளை, உற்சவங்களை நடாத்தி மன அமைதி கொண்டு நமது சமய கலாச்சாரங்களைப் பேணி வருகின்றனர். எமது பண்பும் பாரம்பரியமும் அதுவே. இந்த வகையிலே இங்கு இலண்டன் ஈலிங் நகரில் அன்னை ஸ்ரீ கனக துர்க்கை அம்பாளுக்கு அழகுற ஆலயம் அமைத்து சுபவேளையிலே கும்பாபிஷேகம் இடம்பெற்றது. இவ்வாலய வரலாறு மிகவும் சிறப்பானது.

சிவனுக்கு லண்டனில் லூசியம் எனும் பகுதியில் ஓர் சிவன் கோயிலும் வெம்பிளி

ஒழுக்கம் தீமையை மறைக்கிறது.

எனும் இடத்தில் ஈழர்பதீஸ்வரர் என்னும் கோயிலுமாய் இரண்டு சிவன் ஆலயங்கள் உண்டு. லண்டனில் ஈஸ்ராம் எனும் பகுதியில் ஸ்ரீலச்சுமி நாராயணன் கோயிலும் ரோன்லி எனும் இடத்து ஸ்ரீராஜராதேவி அம்மன் கோயிலும் ருட்டிங் எனும் இடத்தில் ஸ்ரீ முத்து மாரி அம்மன் கோவிலும், மற்றும் லோஸ்த் தம்ஸ்தோ என்னும் இடத்தில் நேருபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலும் உள்ளன. மற்றும் முருகன் ஆலயங்கள் எனப் பார்க்கும் போது கர்ச்வே ஒரு முருகன் கோவிலும் ஈஸ்ட்ஹாம் குறோய்டன் ஆகிய பகுதிகளில் முருகன் ஆலயங்களும் உள்ளன. லூசியம் பகுதியில் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடை பெறும் மங்களபதி ஸ்ரீ வேல்முருகன் கோவி லும் உண்டு.

இங்கு நடைபெறும் பூசைமுறைகள் பஜனைகள் பலவற்றிலும் ஆங்கிலேய பக்தர் கள் கலந்து சிறப்பிப்பது ஈண்டு குறிப்பிடத் தக்கதாகும். இந்நிகழ்வினை வேற்று மதத் தவரும் வேற்று மொழியினரும் இதனைக் கண்டு மகிழ்வதோடு தமது தமது மொழியில் எழுதி அதனைப் படிப்பதனையும் காணமுடி கின்றது என்று நேர் சென்று பார்த்தோர் கூறு கின்றனர். இந்த வகையில் லண்டன் ஆலயத் தில் பல சிறப்பினைக் கண்டு கொள்வதுடன் அங்கு அமைத்த ஆலயங்கள் எல்லாம் ஆகம விதிமுறைகளுக்கு அமைவாக 16 கோயில் கள் அமைக்கப்பட்டன. இன்னும் பல சிறிய கோயில்களும் உள்ளன. பல கோயில்கள் கட்டிக்கொண்டும் இருக்கிறார்கள்.

ஜேர்மனில் இந்துக்களுடைய நாகரிகத் தினை பிரதிபலிக்கும் பல நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. அந்த வகையில் அனைத்து நிகழ்வுகளும் ஆலயத்தினை மையமாகக் கொண்டு நடைபெறுகின்றன. அங்குள்ள 12 ஆலயங்களும் பல தூர இடைவெளிக்கு அப் பால் உள்ளன என்பர். இவற்றுக்கெல்லாம் தலையாக விளங்குவது ஜேர்மனி ஹம் எனும் இடத்தில் உள்ள ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய மாகும். இவ் ஆலயத்தில் அழகிய பஞ்சதள ராஜ கோபுரத்துடன் கருவறையிலே ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம் மிகவும் பிரம் மாண்டமான முறையில் அமைக்கப்பட்டு அழ காக காட்சி தருகின்றது. இந்த ஆலயம், விநாயகர், முருகன், நாராயணன், நவக்கிரகம், வைரவர் என பரிவார மூர்த்திகளோடும் உள் ளது. இந்த ஆலயத்தின் சிறப்பு கருதி Hindu temple road என வீதியின் பெயர் சூட்டப் பட்டமையிலிருந்து இதன் சிறப்பினை அறியலாம்.

தமிழர்கள் நெடுங்காலமாக வாழ்ந்து வரும் இடமாக பிரான்சினைக் குறிப்பிடலாம். அங்கு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் மற்றும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் சிவன் ஆலயம் என்பன அமைந்து உள்ளன. இவற்றிலே ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் மிகச்சிறிய இடத்திலே அமைந்து மிகப்பெரிய கீர்த்தி உடையதாக விளங்குகின்றது. ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் மிகவும் அழகாக நேர்த்தியாக அமைந்துள்ளது. விநாயகர், அம் மன், முருகன், நடராஜர், நவக்கிரகம் என பரிவார மூர்த்தங்களுடன் கருவறையிலே ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் மிகச்சிறப்பாக அமைந்துள்ளது.

நெதர்லாந்து இயற்கை அழகு கொண்டுள்ளது. இங்கு விநாயகர், முருகன், அம்மன் ஆலயங்கள் உள்ளன. டென்சில்லடர் எனும் இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலயம் அந்நாட்டு அரசாங் கத்திடம் இருந்தே சொந்தமாக நிலங்கள் வாங்கி ஆகம முறைகளுக்கமைய மிகப் பெரிய ஆலயமாய் ராஜகோபுரத்துடன் அமைக்க எண்ணம் உண்டு. அதற்குரிய திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டுள்ளதிலிருந்து அவர்கள் இந்து நாகரிகத்தின்மீது

மேற்கொண்ட ஆர்வத்தினையும் அக்கறையையும் கண்டுகொள்ள முடிகின்றது.

அவுஸ்திரேலியா நாட்டினை எடுத்துக் கொண்டால் சிட்னி, மெல்போ, கன்பரா, போர்த் எனும் இடங்களில் இந்து சமயத்தவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இங்கு மொத்தமாக பத்து ஆலயங்கள் உள்ளன. சிட்னி நகரில் பிரதான இரு வீதிகளுக்கு நடுவே சிட்னி முருகன் ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலயம் மிகச்சிறப்பான முறையிலே நித்திய பூசைகளும், மகோற்சவம் மற்றும் விரத விழாக்கள் என்பன மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சிட்னி நகரில் இதைவிட ஒரு ஐயப்பன் ஆலயமும் அமைப்பதற்கு ஐயப்பன் அடியார்கள் முயற்சி எடுத்து வருகின்றமையும், துர்க்கையம்மன் ஆலயத்திற்கு அத்திவாரம் போடப்பட்டு உள்ளதும் குறிப்பிடத்தக்கன. இதன்மூலம் இந்து நாகரிகம் நாளுக்குநாள் மேலைநாடுகளில் சிறப்பாகப் பரவிவருவதை நாம் கண்ணாரக் காணமுடிகின்றது. (வெளியில் இருந்து வருபவர் உடைய கருத்து) அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனில் வசிக்கும் இந்திய ஆன்மீகப் பெருமக்களில் சிலர் 1980ஆம் ஆண்டில் ஒன்றுகூடி இந்துக் கோயில் ஒன்றை வாஷிங்டனில் அமைக்க ஒருமனதாக முடிவெடுத்தனர். இதற்குக் கிடைத்த மக்களின் பேராதரவு அவர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கொடுத்தது. 1984இல் ஒரு சிறிய இடத்தில் பாலாலயம் அமைக்கப்பட்டு வழிபாடுகள் தொடங்கப்பட்டன. அடுத்த ஐந்தாண்டுகளில் நன்கொடை மூலம் போதிய பொருள் உதவி கிடைக்கவே 1984இல் கோயிலுக்கென நிலம் வாங்கப்பட்டது.

1990இல் விநாயகர், முருகன், துர்க்கை சன்நிதிகள் அமைக்கப்பட்டன. 1991இல் சிவன் முருகன் சன்நிதிகளுடன் மேலும் நான்கு சன்நிதிகள் சேர்க்கப்பட்டன. இப்படிப் படிப்படியாக நிதி வரவரக் கோயிற் பணிகள் தீவிரமாக்கப்பட்டன. பிரபல கணபதி ஸ்தபதி அவர்கள் தலைமையில் பல கலைஞர்கள் இரவு பகலாக உழைத்து இந்தக் கோயிலை உருவாக்கினர். இதைத் தொடர்ந்து இன்று அமெரிக்காவில் 100க்கு அதிகமான கோயில்கள் தோற்றம் பெற்றுள்ளன. அமெரிக்காவில் 70% கோயில்கள் கலிபோர்னியா, நியுயோர்க், இலினோயில், ஒகையோ, டெக்சஸ், லொசேஞ்சஸ் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளன. டெக்ச்ஸ் பிரதேசத்தில் இந்தியாவில் இருந்துவந்த பொறியியலாளர், மருத்துவர், வர்த்தகர் கூடுதலாக வசிப்பதால் தமது மனநிம்மதிக்காகவும் பக்தியைத் தம் பிள்ளைகளிடம் வளர்க்கவும் வரிச் சலுகைக்காகவும் பெரும் செல்வந்தர்கள் கூடி இந்துக் கோயில்கள் பலவற்றைக் கட்டினார்கள் என்பதில் இருந்து கோயில்கள் மன அமைதியைப் பெறும் இடம் என்பதை உணர்ந்து இருப்பதோடு தமது பிள்ளைகளுக்கும் சமய உணர்வினை ஊட்டி வருகின்றனர்.

நியுசிலாந்தில் தற்போது சிறிய இரு இந்துக் கோயில்கள் உருவாகி வளர்ச்சிபெற்று வருகின்றன என்பதில் இருந்து தமிழ் மக்கள் சமயத்தில் ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்பது புலனாகின்றது. டென்மார்க்கில் சைவ மன்றங்கள் மண்டபங்களில் கோயில் வழிபாடுகளையும் சமய வகுப்புக்களையும் நடத்தி வருகின்றன.

பகவாய் நாட்டில் யோக சுவாமிகளின் சீடன் சிவாய சிவசுப்பிரமணிய சுவாமிகளினால் சிவன் கோயில் ஆச்சிரமம் ஸ்தாபிக்கப்பட்டு உலகப் பிரசித்திபெற்ற ஆன்மீக நிலையமாக ஆலயமும் ஆச்சிரமமும் இன்று விளங்குகின்றது. பிரமச்சாரியர்களாக பல இன சீடர்கள் தங்கி வாழ்கிறார்கள். சந்தன மரம் நிறைந்த காடு இன்று புனித இடமாக உலகை வியக்க வைக்கிறது என்ற கருத்து

அங்கு இந்து நாகரிகத்தின் உயர்வைக் காட்டுகின்றன.

ஹொலண்ட் நாட்டில் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் கோயில் மிகவும் சிறப்பாக இயங்குகிறது. சைவ சமய வகுப்புக்கள் இவ்வாலயம் வாயிலாக சிறப்பாக நடத்தப்படுகிறது என்று கூறப்பட்டதில் இருந்து அந் நாட்டில் இந்து சமயத்தின்நிலை எவ்வாறு உள்ளது என்பதை அவதானிக்கலாம்.

பிரான்சில் பாரிஸ் நகரில் ஆறு இந்துக் கோயில்கள் ஈழத்தமிழர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. முருகனுக்கு இரண்டு கோயில்களும் பிள்ளையாருக்கு இரண்டு கோயில்களும் அம்மனுக்கு ஒரு கோயிலும் சிவனுக்கு ஒரு கோயிலுமாக அருகருகே அமைந்துள்ளன. இங்கு சைவத்தமிழ் வகுப்பு, இசை, நடன வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றன. இவை இந்துக்களுடைய கலை பண்பாட்டினை கட்டிக்காத்து வருகின்றன என்றால் மிகையாகாது.

சுவிட்ஸ்லாந்தில் பல இந்து ஆலயங்கள் ஈழத்துத் தமிழ் மக்களினால் உருவாக்கப்பட்டுள்ளன. பேர்ன் நகரில் சித்தி விநாயகர் கல்யாண சிவசுப்பிரமணியர், லவுசாண் நகரில் கற்பகவிநாயகர், ஜெனீவா நகரில் அற்புத விநாயகர், பேர்ன் நகரில் பிள்ளையார் என பல இடத்தில் இந்து ஆலயங்கள் உள்ளன. இவ் ஆலயத்தில் கூட்டு வழிபாடுகள், விழாக்கள் என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

1983இல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து கனடாவில் இலங்கைத் தமிழருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டதனால் சுமார் மூன்று இலட்சம் ஈழத்தமிழர் அங்கு நிரந்தரமாக இன்று வாழ்கின்றனர். கனடா அரசு தாய்மொழியை ஒரு பாடமாகக் கற்பதற்கும் அனைவருக்கும் மத சுதந்திரம் வழங்குவதிலும் முன்நின்று உதவுகின்றது. இவ்வகையில் ரோரன்ரோ மாநிலத்தில் 5 இந்துக்கோயிலும் வங்குவரில் இரண்டு கோயிலும் பிரசித்தமான ஈழத்தமிழரின் கோயில்களாக விளங்குகின்றன. இந்தவகையில் பிரசித்தி பெற்ற கோயிலாக கனடா நிசமன்கின் விநாயகர் கோயில், கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில், வங்குவர் லச்சுமி கோயில், வங்குவர் விநாயகர் கோயில், ரொரன்ரோ மார்க்கம் ஐயப்பன் கோயில், பிரசித்தி விநாயகர் கோயில், ரொரன்ரோ துர்க்கை அம்மன் கோயில், ரொரன்ரோ முருகன் கோயில், மொன்றியல் திருமுருகன் கோயில், மொன்றியல் அம்மன் கோயில் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவ் ஆலயங்களில் இந்து நாகரிகத்தின் சிறப்பினையும் பண்பாட்டினையும் மங்கவிடாது தொடர்ந்து நிகழ்ந்துவரும் விழாக்களை நாம் இப்போது கண்டுகொள்ள முடிகின்றது. அவையாவனயெனின் அன்னதான நிகழ்வு, சுமங்கலிப்பூசை, கௌரி விரதம், வெள்ளிக் கிழமைகளில் பிரசங்கம், திருவிழா, அறநெறிப் பாடசாலை முதலியனவும் அபிராமிப்பட்டர் விழா, சூரன்போர், புராணபடிப்பு, கந்தசஷ்டி உற்சவம் குங்கும அர்ச்சனை, குத்துவிளக்குப் பூசை போன்ற வழிபாடுகள் சிறப்பாக இடம் பெறுகின்றது.

கனடாவில் பல சபைகள், மன்றங்கள், நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு பல வழிகளில் இந்து நாகரிகத்தை வளர்த்து வருகிறார்கள். அந்த வகையில் கனடா இந்து மாமன்றம், கனடா இந்துசமயப் பேரவை, கனடா இந்து கலாசார மன்றம், கனடா தமிழ் கலாசார சங்கம், யுகியூபேக் சைவ மகாசபை, வேதாந்த ஞானமன்றம், கனடா ஆதி அருள் நெறி மன்றம், கனடா சைவ சித்தாந்த மன்றம், கனடா சிவதொண்டன் நிலையம், கனடா சிவத்தொண்டர் சபை போன்றவை இன்றும் தமது சேவையினை நிகழ்த்திக்கொண்டு

வருகின்றன. அந்தவகையில் இவைகள் ஆற்றும் சேவையினை பார்க்கும்போது மேலை நாடுகளில் இந்து நாகரிகத்தின் வளர்ச்சியினை மேலும் அறிந்து கொள்ளலாம்.

சைவ மாநாடு நடாத்துவது, சஞ்சிகை வெளியிடுதல் "ஆத்மஜோதி" மாத இதழ் வெளியிடுதல், வருடாவருடம் நாவலர் பெருமானுக்கு விழா எடுத்தல், திருமுறை முற்றோதல் நடாத்துதல், கோயில் கட்டுதல், சமய நிகழ்ச்சி நடத்துதல், கருத்தரங்குகள் நடாத்துதல் பெரியார்களை அழைத்து பாதபூசை செய்து அவர்களுடைய ஆசி பெறுதல், "தமிழ் மகன்" சஞ்சிகை வெளியிடல், நாயன்மார்கள் குருபூசை, சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் "அன்புநெறி" மாத இதழ் வெளியீடு, பஜனை, தியானம், சிறப்புச் சொற்பொழிவுகளுடன் வருடாவருடம் யோகர் சுவாமிகளின் விழாவையும் சிறப்பாக நடாத்துகின்றனர். இவற்றில் உள்ள விடயத்தினைப் பார்க்கும் போது மேலை நாடுகளில் இந்து நாகரிகம் மிகவும் உயர்நிலையில் இருக்கின்றது என்பதுடன் காலப்போக்கில் இன்னும் உயர் நிலையை அடையும் என்பதிலும் சந்தேகம் இல்லை.

மேலை நாட்டு ஆலயத்தில் வரும் வருமானத்தை ஈழமக்களுக்கு அனுப்பும் முயற்சியில் அந்நாட்டு ஆலய நிர்வாகத்தினர் மேற்கொண்டு இருக்கின்றமையும் அறிந்து கொள்ளலாம். மேலைநாடுகளில் சமயங்களுக்கு இடையில் போட்டி பூசல்கள் இருந்தாலும், இங்கு உள்ளவர்கள் மதம் மாறாமலும் எமது பண்பாட்டை அங்கு பேணியும் வருவது இந்து மக்களுக்கு மகிழ்வுதரும் ஒன்றாகும். இருப்பினும் அங்கு சென்ற ஒரு சிலருடைய நல்ல முயற்சி இன்று பெரும்பலனை அளித்திருக்கின்றன. இந்த விடயத்தில் திரு தி. மாணிக்கவாசகர், திரு சி. செகராசசிங்கம், திரு எஸ்.ஏ. சிவபாதம், திரு க.தெ. சண்முகராசா, திரு சிவாஜி மகேந்திரன், திரு டி.இலிங்கராஜா, திரு கே.வி. செல்வராஜா, திரு விபுலானந்தர், திரு க. தம்பிராஜா, திரு சி. கருணானந்தன் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவார்கள்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

என்ற கூற்றும் சிந்தனைக்குரியதாகும்.

தொகுத்துநோக்கும்போது மேலை நாடுகளில் இந்து நாகரிகம் பல்வேறுபட்ட நிலையில் உயர்ந்துள்ளது. மக்கள் தாம் சென்ற இடங்களில் தங்களுடைய வழிபாட்டினையும் பண்பாட்டினையும் ஒழுக்கத்தினையும் பேணிவருகின்றார்கள் என்பதையும், மேலை நாட்டில் இந்து மக்கள் நிறைவாகச் செறிந்து வாழ்ந்து இந்து சமயத்தினை வாழும் சமயமாக ஆக்கினர் எனலாம்.

## கல்வியின் உயர்வு

பணக்காரர் ஒருவர் ஒருமுறை பாரதியாரின் புலமையைப் பாராட்டி நூறு ரூபாய் நோட்டு ஒன்றை பாரதியாருக்குக் கொடுத்தார். பாரதியார் அதை வாங்க மறுத்துவிட்டார்.

"உங்கள் கைகளில் அந்த நோட்டை வைத்துக்காட்டுங்கள். அதை நான் எடுத்துக் கொள்கிறேன். ஏனென்றால் நீங்கள் கொடுக்க நான் வாங்கினால் என் கை தாழ்ந்துவிடும். என்றைக்கும் சரஸ்வதி லட்சுமிக்குப் பணிந்துபோகக்கூடாது. அது உலகத்திற்கு நல்லதல்ல" என்று தமது செயலுக்குப் பாரதியார் விளக்கந் தந்தார்.

**தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயங்காதே.**

உ

(தொடர்ச்சி...

# உலகளாவிய சைவமும் இருபத்தோராம் நூற்றாண்டில் அது எதிர்கொள்ளும் சவால்களும்

## UNIVERSAL SAIVAM AND IT'S CHALLANGES IN THE 21ST CENTUARY

Dr. இலம்போதரன் அவர்கள்

வடமொழி என்பது பரதகண்டம் என்றும் அன்றைய இந்திய துணைக்கண்டம் எங்கும் காணப்பட்ட வெவ்வேறு மக்கட் கூட்டங்களுக்கு இடையிலான பொதுத்தொடர்பு மொழியேயன்றி ஒரு குறிப்பிட்ட இனத்துக்கோ, அல்லது மக்கட் கூட்டத்துக்கோ உரிய மொழி அல்ல. அது கற்றறிந்தவர்களின் மொழியாக விளங்கியது. அவர்களின் இடைத்தொடர்பு மொழியாக விளங்கியது. வெவ்வேறு மொழிகள் பேசும் மக்கட் கூட்டத்தினரின் பொதுத் தொடர்பாடல் மொழியாக விளங்கியது. ஒரு குறிப்பிட்ட இனத்துக்கோ அல்லது மக்கட் கூட்டத்துக்கோ அல்லாது பரதகண்டம் முழுமைக்கும் அறியவேண்டி அறிவு நூல்களும், மெய் நூல்களும் இம்மொழியில் எழுந்தன. "ஆரியமும் தமிழும் உடனே சொலிக் காரிகையார்க்குக் கருணை செய்தானே" என்கிறது திருமந்திரம்.

முதன்முதலில் 1853இல் 'ஆரிய' என்ற சொல் ஐரோப்பாவில் ஒரு இனத்தைக் குறிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிந்துநதி தீர ஆராய்ச்சியாளரான சேர் ஜோன் மார்ஷல் (Sir john marshall) ஆரியர் படையெடுப்பதைப் பற்றிப் பேசுகின்றார். தொன்மையான சிந்துநதி தீர குடியிருப்புகள் திராவிடர்களின் நாகரிகம் என்றும், மத்திய ஆசியாவில் இருந்து குதிரைகளில் வந்த ஆரியர்களின் படையெடுப்பால் இந்நாகரிகம் அழிக்கப்பட திராவிடர்கள் தெற்கே குடிபெயர்ந்தார்கள் என்றும், ஆரியரின் இயற்கை வழிபாட்டுடன் திராவிடர்களின் சிவ வழிபாடும், சக்திவழிபாடும் கலந்து உருவாகியதே இன்றைய இந்து மதம் என்றும் கூறினார் இவர். இவருடன் அக்காலத்திய வரலாற்று ஆசிரியர்களாகிய மார்டைமர் வீலர் (martimer wheeler), ஸ்ருவார்ட் பிகொட் (stuart piggot) போன்றோர்களும் சேர்ந்து கொண்டார்கள். இக்காலத்திலே நமது கீழைத்தேச வேத, உபநிடத, பௌத்த சாத்திரங்களையெல்லாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பித்துப் பதிப்பித்து ஐம்பத்தொரு தொகுதிகளாக வெளியிட்ட மாக்ஸ் முல்லர் (max muller) தமது எழுத்தின் மூலமாகவும், உரைகளின் மூலமாகவும், அவரது சமகாலத்திய அறிஞர்களுடனான தொடர்பாடல்கள் மூலமாகவும் ஆரியப் படையெடுப்புக் கொள்கைக்கு உரம் சேர்த்தார்.

இதற்கு அக்கால உலக அரசியல், புவியியல், பண்பாட்டியல் சார்ந்த புறநிலைக் காரணிகள் முக்கிய காரணமாக அமைந்தன. சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராச்சியம் உலகளாவி வளர்ந்திருந்த காலம். இவ்வாறு உலகம் முழுவதும் போக்குவரத்தும், பரிமாற்றமும் பெருகிவர கீழைத்தேய தத்துவங்களை மேலைநாட்டார் கண்டறிந்து மூக்கின்மேல் விரலை வைத்த காலம். இவ்வாறான பண்பாட்டுச்சிறப்பு மிக்க கலாச்

சாரத்தை தாம் மறுதலித்து அரசியல் ஆதிக்கமும், மதப்பிரசாரமும் செய்வதை நியாயப்படுத்தவும், நிலை நிறுத்தவும் வேண்டிய வரலாற்றுக் கட்டாயம் இங்கு அவர்களுக்கு ஏற்படுகின்றது.

ஐரோப்பாவின் நூற்றாண்டுகளான இருண்ட காலத்தின் பின் 15ஆம் நூற்றாண்டில் தொடங்கிய அரசியல், சமுதாய கைத்தொழில், பொருளாதார, பண்பாட்டு மறுமலர்ச்சியின் உச்சக்காலமும் இதுவே. அதன் விளைவாக ஐரோப்பாவில் உதயமானதுதான் தூய ஆரிய மேன்மைவாதக் கொள்கை. ஜேர்மனியில் இது ஹிட்லரை உருவாக்கி இரண்டாம் உலக மகா யுத்தத்துக்குக் காரணமாகி இலட்சக்கணக்கான மக்களின் உயிரைக் குடித்த பின்தான் ஓய்ந்தது.

ஏறக்குறைய இதே காலத்தில் இக்கொள்கை தமிழ் நாட்டிலே அதன் மறுவடிவான திராவிட மேன்மைவாதக் கொள்கையாகப் பிறப்பெடுத்தது. இதற்குப் பாடசாலைகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பாடப்புத்தகங்களினூடாகப் புகுத்தப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆராய்ச்சியாளர்களினதும், நூலாசிரியர்களினதும் ஆரியப் படையெடுப்புக் கொள்கையோடு, இந்தியாவின் அரசியலில் நிலவிய வட இந்தியர்களினதும், ஹிந்தி மொழியினதும் மேலாதிக்கமும், தென்னிந்தியாவில் நிலவிய பிராமணர்களின் கல்வி, சமுதாய, பொருளாதார மேலாதிக்கமும், இந்தியா எங்ஙனும் நிலவிய உயர் சாதிக்காரர்களின் சாதீய மேலாதிக்கமும், புற மதப்பிரசாரகர்களின் நிதி உதவிகளும், பிரசார தந்திரோபாயங்களும் புறநிலைக் காரணிகளாக அமைந்தன. தொல்காப்பியர் தொடக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை ஆக்கப்பட்ட தமிழ் நூல்களில் ஒன்றுகூட ஆரியரை ஒரு இனம் என்றோ, ஆரிய மொழியாம் சமஸ்கிருதத்தை வேற்றின மொழி என்றோ ஒரு வரிதானும் எழுதவில்லை என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. ஆயினும் இன்று "நன்றும் தீதும் பிறர் தர வாரா" என்றுரைத்த புறநானூற்றுத் தமிழ் மரபில் வந்த நாம் எமது சமூகத்திலும், சமயத்திலும் பீடித்திருக்கும் பீடைகள் எல்லாம் இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேற்கத்திய ஆராய்ச்சியாளர்களால் படைக்கப்பட்ட ஆரியரின் வேலையே என்று சொல்லி மாய்கின்றோம். கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக எம்மிடையே புரையோடிப்போயுள்ள இந்த ஆரிய திராவிட பேதம் இருபத்தோராம் நூற்றாண்டில் சைவம் எதிர்நோக்கும் இன்னொரு பெரும் பெரும் சவால்.

இன்று இன்றைய அறிவியல் ஆராய்ச்சி விமர்சன முறையாக மீண்டும் இந்த ஆரியப் படையெடுப்பு அல்லது குடியேற்றக் கொள்கையை அலசி ஆராய்ந்து டேவிட் ஃபுரோலி (Dvid frawley the author of `the myth of aryan invasion of india, co- author of' vedic aryans and the origin of civilization), முனைவர் கொன்ராட் எல்ஸ்ட் (Dr. koenraad elst the author of `update on the aryan invasion debate), மிஷெல் டானினோ (mishell danino the author of `the invasion that never was) போன்ற பல வரலாற்று ஆசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும் மீள எழுதியிருக்கிறார்கள். இவர்கள் ஆரியப்படையெடுப்பு என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆராய்ச்சியாளர்களின் அனுமானமான ஒரு கற்பனாவாதம் என்றும் அதற்கு எந்தவிதமான தொல்லியல், மானுடவியல், வரலாற்று ஆதாரங்களும் இல்லையென்றும் தெட்டத்தெளிவாக நிருபித்துள்ளனர். இது 1980களின் பின்னர் விஞ்ஞான, மருத்துவ, சரித்திர, தொல்லியல், மொழியியல், மானுடவியல் போன்ற துறைகள் யாவற்றிலும் தோன்றி வளர்ந்த கூர்த்த விமர்சன நோக்குடன் கூடிய வலு குறைந்த ஆராய்ச்சி அணுகு

முறைகளின் பயனாகும். முன்னர்போல ஒவ்வொரு துறைகளிலும் பெயர் எடுத்த பெரிய மனிதர்கள் சொல்லும் மேம்போக்கான கருத்துக்களையெல்லாம் வேதவாக்காகக் கொண்ட காலம் மலையேறிவிட்டது. ஆனால் இருபத்தைந்து வருடங்களாகியும் இன்னமும் எங்களிடமிருந்து இந்தப் பழைய சரித்திரக் குப்பைகளும், அவற்றின் கொள்கைகளும், தாக்கங்களும், சுவடுகளும் போகவில்லை.

காலங்காலமாக திராவிட மொழி களையே தமது தாய் மொழியாகக் கொண்ட பிராமணர்களை அவர்கள் திராவிடர்கள் அல்ல என்றும் ஆரியமாயை என்றும் சொல்லிப் புறந்தள்ளி விட்டோம். அவர்களும் இதை நம்பிக்கொண்டு, தம்மை ஒரு புறம்பான இனக்கூட்டமாக அடையாளம் கண்டு பாரத மண்ணில் ஆரியர் என்னும் இனத்தை முதன்முதலாகத் தோற்றுவித்து மயங்கு கின்றார்கள். தமிழ் ஞானசம்பந்தன் என்று தனது பாடல்களில் தன்னைக்குறித்த சம்பந்தர் திராவிடர் இல்லை என்றால் வேறு யார்தான் இங்கு திராவிடர்? திராவிட சிசு என்று சங்கராச் சாரியார் சௌந்தரிய லகரியில் பாடிய இந்த சம்பந்தர்கூட திராவிடர் இல்லை என்றால் வேறு யார்தான் இங்கு திராவிடர்? அந்தணச் சீராளர் களான சுந்தரரும், மாணிக்கவாசகரும் திரா விடர் இல்லை என்றால் யார் தான் இங்கு திராவிடர்? தமிழில் மெய்யியல் நூல்கள் படைத்த சந்தனாசாரியர்களான அருணந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் ஆகி யோரும் திராவிடர் இல்லை என்றால் யார்தான் இங்கு திராவிடர்? நாயன்மார்களில் பெரிய புராணம் கூறும் அந்தணர்களான அப்பூதி யடிகள், சடையனார், இசைஞானியார், கண நாதர், குங்கிலியக்கலயர், சண்டேசர், சிறப்புலி நாயனார், சிறுத்தொண்டர், சோமாசிமாற நாய னார், திருநீலநக்கர், நமிநந்தியடிகள், புகழ்த் துணை நாயனார், பூசலார் நாயானார், முருக நாயனார் ஆகியோர் திராவிடர் இல்லை என்றால் வேறு யார்தான் சைவத்தின் திரா விடர்கள்?

வடமொழியில் உள்ள வேதங்களும், ஆகமங்களும், புராணங்களும், இதிகாசங் களும், ஆரியரினதும், பிராமணரினதும் படைப்பு என்றும், அவர்கள் புகுத்தியவை என்றும் புறந்தள்ளுகின்றோம். இவர்கள் மேல் கொண்ட கோபத்தாலும், துவேஷத்தாலும் எமது பெருஞ்செல்வங்களான வேத ஆகமங் களையும், ஏனைய வடமொழி நூல்களையும் அவர்களுடன் சேர்த்துப் புறந்தள்ளி வறிய ராகின்றோம். சைவத்தின் தாரக மந்திரமாம் பஞ்சாட்சரம் கிருஷ்ண யசுர் வேதத்தில் உள்ள ஸ்ரீ ருத்திரத்தில் இருக்கும் வடமொழி மந்திரம் என்பதை மறந்து விடுகின்றோம். வடமொழியில் உள்ள வேதத்தின் ஸ்ரீ ருத் திரத்தை செபித்தே உருத்திர பசுபதி நாய னார் சிவபதம் பெற்றார் என்று பெரியபுராணம் கூறுவதையும் மறந்துவிடுகின்றோம். திரு முறைகளில் இருந்து புராணக்கதைகளையும், இதிகாசக்கதைகளையும் தணிக்கைசெய்து எடுத்துவிட்டால் புத்தகங்களில் வெற்று அட்டை மட்டும் தான் நமக்கு மிஞ்சும். நாம் இப்போது அதைத்தான் செய்து கொண்டிருக் கின்றோம். உள் வீட்டுக்குள் இருந்துகொண்டு அதையே உடைத்தெறிகின்றோம்; நுனிக் கிளையில் இருந்துகொண்டு அடி மரத்தை வெட்டுகின்றோம்; **தேவாரம் படித்துக்கொண்டு திருக்கோயில்களை இடிக்கின்றோம்.** வேறு எந்த சமயத்துக்கோ அல்லது இந்திய தத்து வத்துக்கோ இல்லாத பிரிவினைவாதம் வடக்கு- தெற்கு என்றும், ஆரியம்- திராவிடம் என்றும், தமிழ்- வடமொழி என்றும், பிராமணர்- பிராமணரல்லாதார் என்றும், தமிழர்- தமிழரல் லாதார் என்றும் சைவத்தில் தலைவிரித்தாடு கின்றது. இது எமது சவால் மட்டுமல்ல சாபக்கேடும்கூட.

**சோம்பல் எல்லாவற்றையும் கடினமாக்கும்.**

"ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" என்று சைவத்தின் ஞான முதனூலாம் சிவஞானபோதம் சொல்வதை மறந்து "சைவம் மேலான இறை ஞானத்தைக் காட்டும் மார்க்கமாயினும் அதிலுள்ள கோயில் வழிபாடும், சடங்குகளும், கிரியைகளும், விழாக்களும் அதைச் சிக்கலாக்கி உண்மையை இலகுவில் புரிந்துகொள்ள முடியாத படி மறைக்கின்றன; இவற்றுக்கு அவசியமேயில்லை; ஞானம் நாடுவோருக்கு இவை தேவையுமில்லை; இந்தச் சடங்குகளும், கிரியைகளும், விழாக்களும் அவற்றை நடத்துவோரின் பிழைப்புக்காக எழுந்தவை; அவற்றைப் புறந்தள்ளிவிட்டு நாம் ஞான நூல்களின் துணைகொண்டு இறைஞானத்தை அடைவோம்" என்று கூறும் எம் போன்ற சைவ ஞானிகள் சைவத்தின் இன்னொரு சவால். ஞானத்தை மறைப்பது சடங்குகளும் கிரியைகளும் அல்ல எம்மில் உள்ள ஆணவம் முதலிய மலங்களே. இவற்றை சிறுகச் சிறுக அகற்றி ஞானத்தை விளக்க உதவுவையே சைவத்தின் கோயில்களும், சடங்குகளும், கிரியைகளுமாம்.

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே மாதொருபாகனார் தாம் வருவர்" என்றும் "அத்தெய்வம் அத்தனைக்காண் எங்கும்வாழ் தெய்வம் எல்லாம் இறைவன் ஆணையினால் நிற்பது" என்றும் சிவஞானசித்தியார் கூறுவதையும், திருத்தொண்டர் புராணம் சொல்லும் அறுபத்து மூன்று நாயன்மார்கள் காட்டிய அறுபத்து மூன்று விதமான வழிகளையும், நெறிகளையும் மறந்து சைவம் கூறும் தெய்வங்களும், வழிகளும், நெறிமுறைகளும் குழப்பமாக இருக்கின்றன.; நாம் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரே கொள்கை, ஒரே வழிபாடு, ஒரே நோக்கம், ஒரே செய்கை உடையோராக வேண்டும் என்று சைவத்தில் ஒருநெறித் திருச்சபை காண முயலும் எம்போன்ற ஒரு நெறிச் சைவர்கள் இன்னொரு சவால்.

கோயில்களையும் சமய நிறுவனங்களையும் நடாத்துவதிலும் நிர்வகிப்பதிலும் எமது சமய சாத்திர நூல்களைப் பிரமாணமாகக் கொள்ளாது மேற்கத்திய நிர்வாகக் கலாச்சார முறைகளைப் பின்பற்றி நாமே ஏற்படுத்திய யாப்புகளையும், ஒழுங்குகளையுமே விதிமுறைகளாகக் கொண்டு, நிர்வாகக் கூட்டங்கள்தோறும் இவற்றையே பிரமாணமாகக் கொண்டு வாதித்து, போதித்து சமயாசாரமும், நெறிமுறையும் இல்லாத மாக்களையும் மக்களாட்சியின் சனநாயகம் என்ற பெயரில் இதிலே சேர்த்து, வாக்கெடுப்பு நடாத்தி தீர்மானங்களை நிறைவேற்றி, இந்த ஆத்மீக நிறுவனங்களை கொம்பனிகள் போலவும், கூட்டுத்தாபனங்கள் போலவும் வியாபார நிறுவனங்களாகத் தரமிறக்கி வழிநடாத்தும் எம் போன்ற ஆலய அறங்காவலர்களும், நிர்வாகத்தர்களும் இருபத்தோராம் நூற்றாண்டின் சைவம் எதிர்கொள்ளும் இன்னொரு சவால்.

உலகளாவிய சைவத்தின் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான இந்தச் சவால்களை இனங்காண்போம்; எதிர்கொள்வோம்; பதில் காண்போம்; தெளிவுறுவோம். சைவத்தை வாதிப்பதைவிட்டு வாழ்க்கையில் வாழ முயலுவோம். நமது வினைகள் ஓயவும், உலக நன்மை கருதியும் சைவத்தின் உண்மையைத் தரணியெங்கும் எடுத்துரைப்போம். இதுவே இருபத்தோராம் நூற்றாண்டின் எமது சிவவழிபாடாகக் கொண்டு செயற்பட்டு உய்வோம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.


(முற்றும்)



# படங்கள் தரும் பதிவுகள்



14ஆம் ஆண்டில் காலடி வைக்கும் தைமாத வெளியீடான ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரை- மதிப்பீட்டுரை நிகழ்த்தும் திரு ஆறு திருமுருகன், திரு ஆ. சிவநாதன்



அறியாமையே பக்தியின் தாய்.



தைமாத வெளியீட்டின்பொழுது பாடசாலை மாணவி ஒருவருக்கு ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினையும், பார்வைக் குறைபாடுடைய ஒருவருக்கு பெறுமதிமிக்க மூக்குக்கண்ணாடியினையும் திரு சி. பத்மநாதன் அவர்கள் வழங்கும் நிகழ்வு



வாரியார் பக்கம்: உ (தொடர்ச்சி...

# அருணகிரிநாதர் அருளிய
# கந்தரநுபூதி



-வாரியார் சுவாமிகள் உரையுடன்-

## நூல்

1. ஆடும்பரி வேலணி சேவலெனப்
பாடும்பணி யேபணி யாஅருள்வாய்
தேடுங்கய மாமுக னைச்செருவில்
சாடும்தனி யானை சகோதரனே.

## பதவுரை

**தேடும்** கய மாமுகனை- துன்புறுத்துவதற்காகத் தேவர்களைத் தேடிச் செல்கின்ற கயமுகாசுரனை, செருவில் சாடும்- போர்க்களத்தில் தாக்கி வென்ற, தனியானை சகோதரனே- ஒப்பற்ற விநாயகருடைய இளையவரே!

ஆடும்பரி- ஆடுகின்ற மயில் எனவும், வேல்- வேல் எனவும், அணிசேவல் என- அழகிய சேவல் எனவும், பாடும் பணியே- அடியேன் எப்போதும் பாடும் செயல் ஒன்றினையே, பணியா அருள்வாய்- தொண்டாக அருள்புரிவீராக.

## பொழிப்புரை

தேவர்களை எப்போதும் துன்புறுத்தும் பொருட்டு தேடிச் செல்கின்ற கயமாமுகனைப் போர்க்களத்தில் தாக்கி வென்ற ஒப்பற்ற விநாயகப்பெருமானுடைய இளைய தம்பியாராகிய ஆறுமுகக் கடவுளே! ஆடுகின்ற மயிலையும், வேலாயுதத்தையும், அழகிய சேவலையும் துதி செய்து பாடுகின்ற ஒரு சிறந்த பணியை எனக்குத் தொண்டாகத் தந்து அருள்புரிவீராக.

## விரிவுரை

**ஆடும்பரி:**

கலைகளில் சிறந்தது நடனக்கலை. நடனக் கலைக்கு அரசர் நடராஜர். அவர் நஞ்சைக் கண்டத்தில் அடக்கிய நீலகண்டர். மயில் இயல்பாகவே- ஒருவரும் கற்றுக்கொடாமல்- ஆடும் இயல்புடையது. மயிலும் நஞ்சுடைய பாம்பையடக்கும் ஆற்றல் படைத்தது. மயிலுக்கும் நீலகண்டம், என்று பெயருண்டு.

"நீலக்ரீவ ரத்னக் கலாப மயிலே!" -மயில்விருத்தம்-

நடராஜமூர்த்தியின் திருவாசி ஓங்கார வட்டமானது; மயிலின் தோகை ஓங்கார வட்டத்தைக் காட்டுகின்றது. வளைந்த கழுத்தும், விரிந்த தோகையும் தூக்கிய ஒரு காலும் ....... ஊன்றிய ஒருகாலும் ஆக இவைகள் பிரணவ வடிவத்தைத் தெரிவிக்கின்றன.

"ஆன தனிமந்த்ர ரூபநிலைகொண்ட
தாடுமயிலென்ப தறியேனே"
-(வாதினை) திருப்புகழ்-

ஐயன் ஏறும் மயில் ஒரு நொடிப் பொழுதுக்குள் அகில உலகங்களைச் சுற்றிவரும் வேகம் உடையது.

சிந்தாமணிக்கலச கரகடகபோலத்ரி
யம்பகவிநாயகன் முதல்
சிவனைவலம் வருமளவில் உலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாப மயிலாம்"
-மயில்விருத்தம் 1-

மயிலின் அதிகவேகத்தைக் கண்டு, அகிலலோக ஏக நாயகராகிய சிவபெருமானே அன்புகொண்டு மகிழ்கின்றாராம்.

"நரையிதழி யறுகுபுனல் புட்பத்திரட்களொடு
சிறுபிறையு மரவுமெழி லப்புத் திருத்தலையின்
நளினமுற அணிசடையர் மெச்சிப்ரியப்படவு மயிலேறி
நவநதிகள் குமுகுமென வெற்புத்திரட்சுழல்
அகிலமுத லெழுபுவன மெத்தத் திடுக்கிடவும்
நவமணிகள் உரகனுடல் கக்கத் துரத்திவரு முருகோனே"
-(சிறு பறையு) திருப்புகழ்-

திருமுருகவேள் இந்த ஒரு மயிலேறி, பல மயில்களையுங் கடந்து வந்து அடியார்களின் துயர்களைக் களைகின்றார்.

மயிலின் ஆற்றல் அளவில்லாதது; அதன் தோகை அசைவதனால் ஏற்பட்ட காற்றுப்பட்டு மேருகிரி அசைந்தது! அம் மயில் நடந்ததனால் எண் திசைகளில் உள்ள குலமலைகள் துகள் பட்டன; அத் துகள்களால் கடல் திடராயிற்று.

குசைநெகிழா வெற்றிவேலோன் அவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்டவாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்ததுமேரு; அடியிடஎண்
திசைவரை தூள்பட்ட, அத்தூளின் வாரி திடர்பட்டதே.

ஒருசமயம் எம்பிரான் ஏறுமயில், சுற்றுலா வரும்போது பாலாழியில் கிடந்த ஆயிரம் பணாமகுடம் உடைய ஆதிசேடனைக் காலால் எடுத்து உதறியது. அறிதுயில் புரிந்து கொண்டிருந்த நீலமலை போன்ற நெடுமால் திடீர் என்று ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியினால் பதறி விழித்தலறி மூர்ச்சித்துவிட்டார். அவருடைய திருக்கரங்களில் இருந்த சங்கு சக்கரங்கள் நெகிழ்ந்தன. அவருடைய திருமார்பில் இருந்த திருமகள், விழிநீர் தனங்களின் நடுவே பெருக அழுதாள். நலந்தீது அறியாத சிறு குழந்தையாக உந்திக்கமலத்திலிருந்த பிரமன் தாய் முகத்தை நோக்கிக் கதறியழுதான். இத்தகைய ஒரு திருவிளையாடலை மயில் செய்துவிட்டது.

அம்மயிலின் திருவடியில், ஆதிசேடனுடைய பணாமுடிகளில் இருந்த மாணிக்க ராசியும், உலகங்களைக் காக்கும் திருமாலும் சக்ராயுதமும், பாஞ்சசன்யமும் அணிகலங்களாகக் கிடந்தனவாம்.

சேலில் திகழ்வயல் செங்கோட்டை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தனந்தன் பணாமுடிதாக்க அதிர்ந்ததிர்ந்து

காலில் கிடப்பன மாணிக்கராசியும் காசினியைப்
பாலிக்கு மாயனும் சக்ராயுதமும் பணிலமுமே.

-கந்தரலங்காரம் (91)-

நீலக் கிரிபோல் கிடந்துறங்கும்
நெடுமால் பதறி, விழித்தலறி
நெஞ்சந் திடுக்கிட் டாழிசங்கம்
நெகிழ்வுற் றவசம்உற; உரந்தோய்
சீலக் கமலத் திருமாது
செழுங்கோங் கரும்பாம் முலைநடுவில்
செவ்வேல் விழிநீ விடுத்திரங்கத்
தீதும் நலமுந் தெரியாத
பாலப் பருவம் கொளும்உந்திப்
பங்கே ருகத்தான் அனைமுகத்தைப்
பார்த்துப் பார்த்துக் கதற; அலைப்
பாலாழியில் பாம் பெடுத்துதறும்
கோலச் சிகியில் பவனிவரும்
குகனே தாலோ தாலேலோ
கொடியா டணிமா டப்புதுவை
குமரா தாலோ தாலேலோ.

-வண்ணச்சரம் தண்டபாணி சுவாமிகள்-

பரி- குதிரை. பரித்தல்- தாங்குதல். தாங்குதலால் பரியெனப்பட்டது. அது உவம ஆகுபெயராக மயிலைக் குறிக்கின்றது. இவ்வாறு அருணகிரிநாதர் பல இடங்களில் கூறுகின்றார்.

“பட்சியெனும் உக்ரதுரகமும்” -(பக்கரை) திருப்புகழ்
“ஓகார பரியின் மிசை வரவேணும்” -(இரவி) திருப்புகழ்
“மரகத துரகத மிசையேறி” -(கொடிய மறலி) திருப்புகழ்

**வேல்:**

வேல் முருகப்பெருமானுடைய ஞான சக்தியாகும். வெல் என்ற முதல்நிலை நீண்ட தொழிற்பெயர் வேல். எல்லாவற்றையும் வெல்வது ஞானம் ஒன்றேயாகும். ஞானம் என்ற சொல் தமிழில் அறிவு என வரும்.

அறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உள. ஆழம், அகலம், கூர்மை. வேலின் அடிப்பகுதி ஆழமாகவும், இடைப்பகுதி அகலமாகவும், நுனிப்பகுதி கூர்மையாகவும் இருப்பதை நுனித்து உணர்க.

“ஆழ்ந் தகன்ற நுண்ணியனே” -சிவபுராணம்-

மயிலை ‘ஆடும்பரி’ என்றார். சேவலை ‘அணிசேவல்’ என்றார். வேலைக் கதிர்வேல், வடிவேல், வஜ்ரவேல் என்று அடைகொடாமல் வெறுமனே ‘வேல்’ என்றார். ஏன்? அடையில்லாமலே பெருமை பெற்றது வேல். வேல் ஞானம். மயிலும் சேவலும் அசுர சம்பந்தம் பெற்றவை. சூரபன்மன் சேவலு மயிலுமாக ஆனான். ஆதலால் சேவலையும் மயிலையும் பார்க்க வேல் மிகப்பெரும் பெருமையுடையது. அதனால் கச்சியப்ப சிவாசாரியார்

சேவலுக்கும் மயிலுக்கும் ஒருமுறை போற்றி கூறி, சேவலுக்கு இருமுறை போற்றி கூறுகிறார். சேவலு மயிலும் போற்றி; திருக்கைவேல் போற்றி போற்றி"

ஒருபுறம் மயிலும் மற்றொரு புறம் சேவலும் நிற்க, நடுவில் நடுநாயகமாக நின்று வேல் அருள் புரிகின்றது. வேல் என்னும் சொல்லை அறிவு என்ற பொருளில் பிற மதத்தினரும் எடுத்தாள்கின்றனர். ஜைன முனிவரான திருத்தக்கதேவர், விஜயை மயங்கியவள் அறிவு பெற்றெழுந்தாள் என்று கூறுமிடத்து "வேல் பெற்றெழுந்தாள்" என்று சிந்தாமணியில் கூறுகின்றார்.

'வேல்' 'வேல்' என்று கூறித் துதி செய்தால் சிவஞானம் உண்டாகும். ஞானம்- ஒளி வேல். நூறு கோடி இளம் ஞாயிற்றுக்களின் ஒளிகள் ஒன்று கூடினாற் போன்ற மிக்க ஒளியுடையது.

"உலா வுதயபானு சதகோடி யுருவான
ஒளிவாகு மயில்வேலங் கையிலோனே"

-(அவாமரு) திருப்புகழ்-

"மரகதபட்ச குலத்திவாகரர் வடிவையுருக்கி வடித்த
திருக்கைவேல்" -பூதவேதாள வகுப்பு-

**அணி சேவல்:**

சேவல் அழகான பறவை. இது கதிரவன் வரவை உணர்த்துவது. அதுபோல் முருகனுடைய சேவல் ஞான சூரியனாகிய முருகனுடைய வரவை யுணர்த்தும். சேவல் வீரமுள்ள பறவை.

"வாளகிரியைத் தனது தாளிலிடியப் பொருது
வாகைபுனை குக்குட பதாகைக் காரனும்"

-வேளைக்காரன் வகுப்பு-

செவ்வேளின் சேவல் ஆவலுடன் சிறகை அசைப்பதனால், கடல் கிழிந்து அண்டகடாகங்கள் உடைந்தன; உடுக்குலங்கள் உதிர்ந்தன; குல மலைகளும் மாமேரு மலையும் இடிந்தன. அத்துணை ஆற்றல் படைத்தது சேவல்.

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப்பதாகை யென்னும்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்டகடாகம் உதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமும் மாமேருவெற்பும் இடிபட்டவே.

-கந்தரலங்காரம் (12)-

கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூரர மகளிர் ஆடும் சோலை" -திருமுருகாற்றுப்படை-

'சேவல் கொடி வாழ்க' என்று தெய்வமகளிர் பாடியாடுகின்றார்களாம்.

"தாரை வடிவேலைச் சேவல்தனை ஏனற்
சாரல் மறவானைச் சிந்தியேனோ"

-(பேதகவிரோத) திருப்புகழ்-

அன்பு துன்பத்தை இன்பமாக்குகிறது.

ஆதலால் அன்பர்கள் காதலால் சேவலைக் கண்டால் கைகூப்பி வந்தித்து முருகனைச் சிந்திக்க வேண்டும். கருடனைக் கண்டவர்கள் "அரி அரி" என்று கன்னத்தில் கையால் தட்டித் திருமாலை வணங்குகின்றார்கள். அதுபோல் கோழியைக் கண்டால் "முருகா முருகா" என்று கன்னத்தில் கைதட்டி வணங்கவேண்டும். அதனால் ஆணவ இருள் தொலைந்து, சிவஞான ஒளியுண்டாகும்.

வந்திப்பேன் அனுதினமும் வாழ்த்திடுவேன்
உனதுதிரு வடியை நாளும்
சிந்திப்பேன் முப்பொழுதும் சேவிப்பேன்
செஞ்சூட்டுச் சேவலே! கேள்
"பந்திப்பேன் எனது வலிபார்" என்னும்
ஆணவமாம் பகைவிண் டோடக்
கொந்திற்றேன் பொழிசாரல் தணிகைவரை
யான்வர நீ கூவுவாயே! -தணிகைச் சந்நிதிமுறை-

வயலூரில் வடிவேற்பெருமான், அருணகிரிநாதருக்கு, 'மயிலையும் சேவலையும் வேலையும் வைத்துத் திருப்புகழ் விருப்புடன் பாடுதி' என்று அருள்புரிந்தார்.

பக்கரை விசித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பட்சியெனும் உக்ரதுர கமுநீபப்
பக்குவ மலர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்கது மதிக்க வரு குக்குடமும்....
..............................................
வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே.
-(பக்கரை) திருப்புகழ்-

மயில் விந்து; வேல் ஞானமாகிய கலை; சேவல் நாதம். நாதம், விந்து, கலை என்ற இம்மூன்றுக்கும் தலைவர் முருகர்.

"நாத விந்து கலாதீ நமோநம" -திருப்புகழ்-

**பாடும் பணியே பணியா அருள்வாய்:-**

'மயிலையும் வேலையும் சேவலையும் புகழ்ந்து துதிக்கும் வேலையையே எனக்கு வேலையாக அருள் செய்' என்று அருணகிரிநாதர் ஆண்டவனிடம் வேண்டுகின்றார்.

இதனைச் சிவஞானபோதம் பத்தாவது சூத்திரமும் கூறுகின்றது.

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடும் வல்வினை யின்றே"
"....... செந்திலோன் திருக்கை
வேலென்கிலை; கொற்றமாயூர மென்கிலை; வெட்சித் தண்டைக்
காலென்கிலை; மனமே! எங்ஙனே முத்தி காண்பதுவே?"

என்று சுவாமிகள் கந்தரலங்காரத்திலும் கூறுகின்றார்.

வேலையும் மயிலையும் சேவலையும் பாடினால் முத்தி காணலாம் என்பது இதன்பொருள்.

***தேவர் கயமுகனைச் செருவில் சாடும் தனியானை:-***

கயமுகாசுரன் சிவபெருமானிடம் தவஞ்செய்து அரிய வரங்களுடன், சாகா வரமும் பெற்றான். அதனால் தருக்குற்ற அக்கொடியவன், தேவர்களைத் தேடிச்சென்று துன்புறுத்தினான். மாலயனாதி வானவர்களைத் தினம் ஆயிரம் தோப்புக்கரணம் போடுமாறு செய்தான். துன்புற்ற அமரர்கள் முக்கட் பெருமானிடம் முறையிட்டார்கள்.

சிவபெருமான் உமாதேவியாருடன் திருக்கயிலை மலையில் ஏழு கோடி மந்திரங்கள் பொறித்த மந்திர மண்டபத்துக்கு எழுந்தருளினார். அம்மந்திரங்களுக்கு இடையே சமஷ்டி பிரணவம், வியஷ்டி பிரணவம் என்ற இரு பிரணவங்கள் இருந்தன. இரு பிரணவங்களையும் அம்மையும் அப்பனும் திருக்கண்ணோக்கம் புரிந்தருளினார்கள். இரு பிரணவ மந்திரங்களும் ஒன்றுடன் ஒன்று மருவ, அப்பிரணவத்தினின்றும், பிரணவ வடிவையுடைய விநாயகப் பெருமான் திருவவதாரம் செய்தருளினார். சிவபெருமான் ஆணையை மேற்கொண்ட ஆனைமுகப் பெருமான் பூத கணங்களுடன் போர்க்களம் புகுந்து கஜமுகனுடன் போர் புரிந்தருளினார். எந்த அத்திர சத்திரங்களாலும் அவனுக்கு இறுதி நேராததைக் கண்டு, தமது கொம்பினை ஒடித்து ஏவியருளினார். அது ஞானமேயாதலால், அஞ்ஞான வடிவாய கஜமுகனுடைய உடலைத் தடிந்தது. அவன் தேவாதி தேவனிடம் சாகாவரம் பெற்றிருந்தபடியால் பெருச்சாளியாகிப் பெருமானை எதிர்த்தான். விநாயகமூர்த்தி, கருணைக் கண்களால் நோக்கி, அவனை அருள்வயப்படுத்தி, ஊர்தியாகக் கொண்டருளினார். மாலயனாதி வானவர்கள் கஜமுகனிடம் இட்டதுபோல் கணபதியின் திருமுன் தோப்புக்கரணம் இட்டு வணங்கி வழிபட்டார்கள்.

***சகோதரனே:-***

சூரபன்மன் 1008 அண்டங்களையும் 108 யுகங்களாக அரசு புரிந்து, மாலயனாதி வானவர்களை வருத்தினான். துன்பத்தால் துடித்த வானவர்கள் ஈசன்பால் தஞ்சம் புகுந்தார்கள். ஐம்முகச்சிவம் ஆறுமுகச் சிவமாகி, சூரபன்மனை ஞானவேலால் பிளந்தருளினார். ஒரு பாதி மயிலாகவும், மற்றொருபாதி சேவலாகவும் வந்தான் சூரபன்மன். பறவைகள்மீது பரம கருணை பொழிந்து, மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் குமரவேள் கொண்டருளினார். தமது தமையனார் செயலையே தாமும் மேற்கொண்டார். விநாயகருக்குப்பின் தோன்றியதனால், சரவணபவனை "யானை சகோதரனே" என்று கூறினார்.

சூரபன்மன் ஆணவமலம், ஆணவமலம் என்றும் நித்தமாகவுள்ள பொருள். அது சிவஞானிகட்கு வலி குன்றி அடங்கி நிற்கும். ஞான வேலால் ஆணவம் வலி குன்றி அருள்வயப்பட்டது. எனவே வேலையும் மயிலையும் சேவலையுந் துதிப்போமானால் நமது ஆணவமலம் வலிகுன்றி நிற்கும் என்பது குறிப்பு.

**கருத்துரை**

விநாயகருக்கு இளையவரே! மயிலையும் வேலாயுதத்தையும் சேவலையும் பாடும் பணியையே பணியாகத் தந்தருளும்.

(தொடரும்...

மிகவும் பலவீனமுள்ளவன் முற்கோபக்காரன்.

உ




## நீதிக்கதை

# மங்குவின் முத்துமாலை

வெங்கு, மங்கு என்ற இரண்டு குரங்குகள் அந்தப் பெரிய மரத்தில் விளையாடிக் கொண்டிருந்தன. அந்தப் பகுதியில் ஏராளமான குரங்குகள் வசித்து வந்தன. ஆனாலும் இந்த இரண்டு குரங்குகளும் நீண்ட நாட்களாக நட்புடன் பழகி எப்போதும் ஒன்றாய் சுற்றித்திரிந்து காலத்தைக் கழித்து வந்தன. ஒருவருக்கொருவர் அன்பைப் பரிமாறிக்கொண்டு சந்தோஷமாய் வாழ்ந்து வந்தன.



ஒருநாள் மங்குவின் மனத்தில் அந்த ஆசை உண்டானது. எங்கேயாவது சிலகாலம் சென்று சுற்றிவிட்டு வரவேண்டும் என்பதே அந்த ஆசை. இதை தன் நண்பன் வெங்குவிடம் சொன்னது. "வெங்கு, எனக்கு இந்தக் காட்டிலே ரொம்ப காலமா இருந்து இருந்து என்னமோ போல இருக்கு. கொஞ்சக் காலத்துக்கு பக்கத்துக் காட்டுக்குப் போயிட்டு வரலாம்னு இருக்கேன். நீயும் கூட வந்தா எனக்கு சந்தோஷமா இருக்கும். வர்றியா?" "என்னோட பிள்ளைகளை தனியே விட்டுட்டு உன்கூட வரமுடியாது மங்கு. நீ மட்டும் போயிட்டு வாயேன்." வெங்கு வர மறுக்கவே மங்கு மட்டும் அடுத்த காட்டிற்கு புறப்பட ஆயத்தமானது.


மங்குவிடம் ஒரு முத்துமாலை இருந்தது. அதைப் பத்திரமாக யாருக்கும் தெரியாமல் தன்னுடைய வீட்டில் வைத்து பாதுகாத்து வந்தது. சில வருடங்களுக்கு முன்பு அந்த முத்துமாலை காட்டில் கீழே கிடந்தது. மங்கு அதை எடுத்துக்கொண்டு வந்தது. ஆசைப்படும்போதெல்லாம் தனது இடத்தில் அதை கழுத்திற்போட்டு மகிழும். அடுத்த காட்டிற்குச் சென்று திரும்பும்வரை அதை வெங்குவிடம் கொடுத்து பாதுகாக்கச் சொல்லிவிட்டுச் செல்ல

எண்ணி அதை எடுத்துக்கொண்டு வெங்குவின் இருப்பிடத்திற்குச் சென்றது. "வெங்கு, இந்த முத்துமாலையை நான் திரும்பிவரும்வரைக்கும் நீ பத்திரமா வெச்சிக்கோயேன். நான் வந்ததும் உன்கிட்டே இருந்து வாங்கிக்கறேன்."

அந்த அழகான முத்து மாலையை வாங்கிப் பார்த்தது வெங்கு. "ஆமா, இந்த முத்துமாலையை நான் இதுவரைக்கும் பார்த்ததே இல்லையே. ஏது இது? "கொஞ்ச நாளைக்கு முன்னாலே இது எனக்கு கிடைச்சிது. சரி, நான் புறப்படறேன். முத்துமாலையை பத்திரமா பார்த்துக்கோ." "புது இடத்துக்குப் போறே. ஜாக்கிரதையா போயிட்டு வா." வெங்கு மங்குவிற்கு கையசைத்து விடை கொடுத்தது. மங்கு புறப்பட்டுச் சென்றது.

முத்துமாலையைப் பார்த்த வெங்குவின் மனைவி அதன் அழகில் மயங்கியது. "இந்த முத்துமாலை ரொம்ப நல்லா இருக்கே. ஏது இது?" "இது என்னோட நண்பன் மங்குவுடையது. அவன் கொஞ்சகாலம் பக்கத்து காட்டிலே இருந்துட்டு வரப்போயிருக்கான். திரும்பி வர்ர வரைக்கும் இதைப் பத்திரமா பார்த்துக்கச் சொல்லி என்கிட்டே குடுத்திட்டுப் போயிருக்கான்." வெங்குவின் மனைவிக்கு அந்த முத்துமாலையை அணிந்துபார்க்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது. "அந்த முத்துமாலையைக் கொஞ்சம் தாயேன். போட்டுப் பார்க்கணும்போல ஆசையா இருக்கு." "சேச்சே, இது நமக்குச் சொந்தமான பொருள் இல்லை. இதை மங்குவோட அனுமதியில்லாம நாம உபயோகிக்கக்கூடாது." இந்தப் பேச்சு வெங்குவின் மனைவிக்கு ஏமாற்றத்தைத் தந்தது. "மங்கு அண்ணன் உன்னோட நண்பன்தானே. ஒண்ணும் சொல்லாது." "மங்கு ஒண்ணும் சொல்லாது. இருந்தாலும் நாம மங்குவோட அனுமதியில்லாம இதை உபயோகிக்கிறது தப்பு." வெங்குவின் மனைவி அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை.

அடுத்தநாள் அந்த இடத்திற்கு ஒரு பஞ்சவர்ணக்கிளி வந்தது. அதன் பெயர் பஞ்சு. அது வெங்கு வசித்த மரத்தில் ஒரு கிளையில் உட்கார்ந்தது. அப்போது வெங்கு தன் மனைவி பிள்ளைகளுடன் வெளியே புறப்பட்டது. "ஏங்க? மங்கு அண்ணன் குடுத்த முத்துமாலை உள்ளே இருக்கு. அது நாம வர்ர வரைக்கும் பத்திரமா இருக்குமா?" "நம்ம வீட்டுக்குள்ளே முத்துமாலை இருக்கிற விசயம் நம்மைத்தவிர யாருக்கும் தெரியாது. பயப்படாதே." இந்தப் பேச்சுக்கள் பஞ்சவர்ணக்கிளி பஞ்சுவின் காதில் விழுந்தன. வெங்கு தன் குடும்பத்தினருடன் வெளியே புறப்பட்டுப் போனதும் பஞ்சு வெங்குவின் வீட்டிற்குள் சென்று அந்த முத்துமாலையை எடுத்தது. அந்த அழகிய முத்துமாலை அதற்கு மிகவும் பிடித்திருந்தது. அதைத் தன் கழுத்தில் போட்டுக்கொண்டு பறந்தது.



வெளியே சென்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பிய வெங்கு தனது வீட்டிலிருந்த முத்துமாலை காணாமல் போனதை அறிந்து அதிர்ச்சி அடைந்தது. மங்கு வந்து கேட்டால் என்ன சொல்லுவது என்று நினைத்துக் கவலைப்பட்டது. வெங்கு அக்கம்பக்கத்தில் தேடியது. ஆனால் முத்துமாலை கிடைக்கவேயில்லை.

சிலகாலம் கழித்து மங்கு பக்கத்துக் காட்டிலிருந்து திரும்பி வந்தது. வந்ததும் வராததுமாக மங்கு வெங்குவிடம் முத்துமாலையைத் திருப்பிக் கேட்டது. "என்னை மன்னிச்சிடு மங்கு. அந்த முத்துமாலையை நான் பத்திரமாகத்தான் பார்த்துக்கிட்டிருந்தேன். ஒருநாள் எதிர்பாராதவிதமாக முத்துமாலை தொலைந்து போச்சு." இதைக்கேட்ட மங்குவிற்கு கடும் கோபம் வந்தது. "நீ அதைத் திருடிக்கிட்டு என்கிட்டே தொலைந்து போச்சுன்னு பொய் சொல்றே. நீ சொல்றதை நான் நம்பமாட்டேன்." "இல்லே மங்கு. நான் சொல்றது உண்மை." "நீ இனி என்கூட பேசாதே. இன்னையோட நம்ம நட்பு முறிஞ்சு போச்சு. இவ்வளவு நாள் உன்கூட பழகினதுக்காக நான் வெட்கப்படறேன்." மங்குவின் இந்தப் பேச்சு வெங்குவிற்கு வருத்தத்தைத் தந்தது. அன்றிலிருந்து மங்கு வெங்குவிடம் பேசுவதில்லை.

தனது முத்துமாலை தொலைந்து போனதிலிருந்து மங்குவிற்கு மனசு சரியில்லை. மீண்டும் பக்கத்துக் காட்டிற்குப் போய்ச் சிறிது காலம் இருந்திட்டு வரலாம் என்று மங்கு புறப்பட்டு பக்கத்துக் காட்டிற்குச் சென்றது. மங்குவின் முத்துமாலையை வெங்குவின் வீட்டிலிருந்து திருடிய பஞ்சவர்ணக்கிளி பஞ்சு, அந்தக் காட்டில் முத்துமாலையை தனது கழுத்தில்போட்டு அனைவரிடமும்காட்டி பெருமையடித்துக்கொண்டிருந்தது. அப்போது மங்கு அந்தப் பஞ்சவர்ணக்கிளி பஞ்சுவைப் பார்த்தது. அதன் கழுத்திலிருந்த தனது முத்துமாலையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தது. பஞ்சுவிடம் ஒரு மைனா அந்த முத்துமாலையைப் பற்றி விசாரித்தது. "இந்த முத்துமாலை ரொம்ப நல்லா இருக்கே. ஏது இது?" பக்கத்துக் காட்டிலே ஒரு குரங்கு வீட்டிலே இருந்துச்சு. அங்கேயிருந்து எடுத்துக்கிட்டு வந்துட்டேன்." "கேட்டு எடுத்துக்கிட்டு வந்தியா? இல்லே தெரியாம எடுத்திக்கிட்டு வந்தியா?" "கேட்டா யாராவது தருவாங்களா? அதான் அந்தக் குரங்குக்குத் தெரியாம எடுத்துக்கிட்டு வந்துட்டேன்." "இது தப்பில்லையா?" மைனா வருத்தத்துடன் கேட்டது. "இந்த முத்துமாலை ரொம்ப நல்லாயிருக்கு. அதான் பொறாமையிலே ஏதேதோ பேசறே. முதல்ல நீ இங்கேயிருந்து போ." மைனா அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டது.

மங்கு உடனே பஞ்சுவிடம் வந்தது. "இந்த முத்துமாலை என்னோடது. திருப்பித்தா." "முடியாது போ." பஞ்சு அங்கேயிருந்து பறந்து சென்றது. மங்கு அதை முடிந்த மட்டும் துரத்தியது. ஆனால், மங்குவால் அதைப் பிடிக்க முடியவில்லை. வருத்தத்துடன் தனது காட்டிற்குத் திரும்பியது. நேராக வெங்குவின் வீட்டிற்குச் சென்றது.

"வா மங்கு எப்படியிருக்கே?" "என்னை மன்னிச்சிடு வெங்கு. இவ்வளவு நாள் உன்கூட பழகியும் உன்னோட நல்ல குணத்தை நான் புரிஞ்சிக்கலே. அந்த முத்துமாலையை ஒரு பஞ்சவர்ணக்கிளிதான் திருடிடுச்சு. எனக்கு இன்னைக்குத்தான் தெரிஞ்சிது. என்னை மறுபடியும் நண்பனா ஏத்துப்பியா?"

"நாம என்னைக்குமே நண்பர்கள்தான். உன் மேல எனக்கு எந்தக் கோபமும் இல்லே. வா, நாம விளையாடலாம்." வெங்குவும் மங்குவும் வழக்கம்போல விளையாட ஆரம்பித்தன.

உ

(தொடர்ச்சி...



# கீர்த்தித் திருவகவல்

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
யாழ்ப்பாணம் - காரைநகர்

வேறுவே றுருவும் வேறுவே றியற்கையு
நூறுநூ றாயிர மியல்பின தாகி
ஏறுடை யீசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைக்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையுந்

**பதவுரை:**

வேறு வேறு உருவும்- வெவ்வேறு திருவுருவங்களும், வேறு வேறு இயற்கையும்- வெவ்வேறு தன்மைகளும், நூறு நூறு ஆயிரம் இயல்பினது ஆகி- நூறு இலட்சம் இயல்பினையுடையவாக, ஏறு உடை ஈசன்- எருதினை ஊர்தியாகவுடைய சிவபெருமான், இப்புவனியை உய்ய- இந்நிலவுலகிலுள்ள பக்குவான்மாக்களை உய்விக்கும் பொருட்டு, கூறு உடை மங்கையும் தானும் வந்து அருளி- தன்னுடைய திருமேனியில் ஒரு கூற்றை யுடைய உமாதேவியும் தானும் ஒருங்கு எழுந் தருளி வந்து, குதிரையைக் கொண்டு குடா நாடு அதன் மிசை- குதிரையை நடாத்திக் கொண்டு திருப்பெருந்துறைக்கு மேற்கேயுள்ள பாண்டிநாட்டில், சதுர்பட சாத்தாய் தான் எழுந் தருளியும்- திறமை பொருந்த வணிகர் திரளொடு தான் எழுந்தருளியும்.

வேறு வேறுருவும் நூறுநூறாயிரம் இயல்பினதாகி எனவும், வேறு வேறு இயற்கை யும் நூறுநூறாயிரம் இயல்பினதாகி எனவும் தனித்தனி கூட்டுக. இறைவன் தன்னை வழி படும் அடியவர்களுக்கு அருள்செய்யும் வண் ணம் அவர்களின் பக்குவ வேறுபாட்டிற்கு ஏற்ப எடுக்கும் திருவுருவங்களுக்கும், அத்திரு வுருவங்களுக்குரிய இயல்புகளுக்கும் ஓரள வில்லை என்பார், "வேறுவேறுருவும் வேறுவே றியற்கையும், நூறுநூ றாயிரமியல்பின தாகி" என்று அருளிச் செய்தார். இறைவன் வேறு வேறுருவும் வேறு வேறியற்கையும் உடைய னாவது அன்பர் பொருட்டென்பது.

"உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவி றந்த
அருமேனி யதுவுங் கண்டோம் அருவுரு வான போது

உனது பலவீனத்தைப் பறை சாற்றாதே.

திருமேனி யுபயம் பெற்றோம் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே" (சூத்1. செய்55)

எனச் சிவஞானச் சித்தியாரில் வருதலானும் உணரப்படும்.

நூறுநூறாயிரம்- நூறு இலட்சம் எனப் பொருள்படுமாயினும் அது ஈண்டு அளவின்மைப் பொருளில் வந்தது. "நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" (திருவண்ட4) என வருதலுங் காண்க. இயல்பினது என்ற ஒருமைப் பன்மைப் பொருளில் வந்த வழுவமைதி. இயல்பினதாகி என்பதை இயல்பினதாக எனத் திரிக்க.

புவனியென்பது இடவாகுபெயராய் இவ்வுலகிலுள்ள பக்குவான்மாக்களை உணர்த்திற்று. உய்விக்க என்னும் பிறவினைச் செயவெனச்சம் விவ்விகுதி தொக்கு 'உய்ய' என நின்றது. "குடிபொன்றிக் குற்றமுமாங்கே தரும்" (குறள் 171) என்புழிப்போல.

கூறுடை மங்கை- தன்திருமேனியில் ஒரு கூற்றையுடைய உமையம்மை. "குரவுவார் குழன்மடவாள் கூறுடையா னொருபாகம்" எனத் திருச்சதகத்து (17) வருதலுங் காண்க. மங்கையும் தானும் எனத் திருவருட்சத்தியும் தானும் ஒருங்கு வருதலைக் கூறியது, திருவருட்சக்தி பதிந்த சத்திநிபாதர்களுக்கு இறைவன் வெளிப்பட்டருளும் முறைமைபற்றியாகும்.

"கருவா யுலகினுக் கப்புறமா யிப்புறத்தே
மருவார் மலர்க்குழன் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயி லந்தணனா யாண்டுகொண்ட
திருவான தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ" (கோத் 14)

என அடிகள் அருளியவாறுங் காண்க.

குடாநாடு என்று மதுரையைக் கூறியது இறைவன் திருப்பெருந்துறைக்கு நேர் மேற்கேயுள்ள மதுரையை நோக்கிக் குதிரைகொண்டு போந்தமைபற்றியாகும். இறைவன் திருப்பெருந்துறையிலிருந்து குதிரைகொண்டு எழுந்தருளியமை.

"பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளி" அம்மானை 20

"பரிமிசை வந்த வள்ளல், பெருந்துறைமேய தென்னவன்"
குயிற்7

"அடியோங்க ளுய்ய, ஆடல் அமர்ந்த பரிமாவேறி"
திருவார்த்4

"பரியின்மேல் வந்த- வள்ளல், மருவும் பெருந்துறையை"
பண்டாய2

"நாட்டிற் பரிபாகன் நம்வினையை- வீட்டி
அருளும் பெருந்துறையான்" பண்டாய3

"நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லா நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந் துறையான்"
ஆனந்த7

என வருவனவற்றாலுமறியப்படும்.

சதுர்- திறமை. இது சதுர என்னும் வடமொழிச் சிதைவு. சாத்து- வணிகர் திரள். இப்பொருட்டாதலை, 'கழுதைச் சாத்தொடு' என்பதற்குக் 'கழுதையிலே மிளகெடுத்துக்கொண்டு

போகின்ற திரளோடே' என நாச்சினார்க்கினியரும் (பெரும்பாண் 80-1 உரை) 'சாத்தொடு போந்து' என்பதற்கு 'வாணிகச் சாத்தொடு போந்து' என அடியார்க்கு நல்லாரும் (சிலப் 11:190 உரை) பொருளுரைத்தமையானும் தெளிக.

வேலம் புத்தூர் விட்டேறு அருளி- வேலம்புத்தூரிலே உக்கிரகுமாரற்கு வேற்படையினைக் கொடுத்தருளி, கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்- தனது திருக்கோலச் சிறப்பினைக் காட்டியருளிய கோட்பாடும்.

இறைவன் உக்கிரகுமாரற்கு வேற்படை நல்கிய இடமாதல் பற்றி அவ்வூர் வேலம்புத்தூர் எனப் பெயர்பெறுவதாயிற்று. விட்டேறு- வேற்படை. இதனை, "சக்தி வெ.·.கம் உடம்பிடி குந்தம். விட்டே றரணம் ஞாங்க ரயில்வேல்" எனத் திவாகரத்து (செயற்கை) வருதலானுமறிக. இறைவன் உக்கிரகுமாரற்கு வேற்படை அருளியமையை,

"அறமலி தனது புதல்வனுக் கிரனுக் கருள்சுரந் தரும்புக ழோங்க
மறுவிலோர் வளையை யிந்திரன் பெரிய மவுலியி லறைகென வளித்துச்
செறிகடல் வலியை யறவெறி யென்று சிறந்ததோர் வேலினை நல்கி
யறிவட கிரியைப் பந்துபோற் சுழல வடியெனச் செண்டையுங் கொடுத்தான்"
(வளைவேல் 2)

என நம்பிதிருவிளையாடற்புராணத்து வருதலானுமறிக.

கோலப்பொலிவு என நிற்கற்பாலது எதுகைநோக்கி மெலிந்தது. பொலிவு- சிறப்பு. இப்பொருட்டாதல். "பொருகளத்துப் பொலிவெய்தின்று" (பு.வெ.மா. 148) என்பதனுரை யானுமறிக. தோற்றப் பொலிவு எனினுமாம்.

(தொடரும்...)



(தொடர்ச்சி...

உ

# 2010ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| திரு செகராசா குடும்பம் | கொக்குவில் (கொலண்ட்) | 5000. 00 |
| குணநாயகம் சாந்தகுமார் குடும்பம் | கொழும்பு | 2000. 00 |
| லோகநாதன் சதீஸ்வரன் | கொழும்பு | 2000. 00 |
| ஐ. வேலாயுதர் குடும்பம் | கோப்பாய் | 2000. 00 |
| மா. மகாலிங்கம் பழம்றோட், | ஆனைக்கோட்டை | 1000. 00 |
| திரு சிவராஜா குடும்பம் | கொழும்பு | 10000. 00 |
| S. ஜெகதீஸ்வரி | கனடா | 1000. 00 |
| திரு கிரிதரன் குடும்பம் | கனடா | 5000. 00 |
| திரு இராசேந்திரம் | தாவடி | 1000. 00 |
| ஜெயகிருஸ்ணன் நித்தியஸ்ரீ அவுஸ்திரேலியா | (வல்வெட்டித்துறை) | 10000. 00 |
| சி. செல்வராஜா | இமையாணன் வடக்கு | 1000. 00 |
| திரு, திருமதி சிவலோகம் ஆசிரியர் நினைவு | இமையாணன் உடுப்பிட்டி | 1000. 00 |
| கந்தசாமி செந்தூரன் | கனடா | 2000. 00 |
| வாகீஸ்வரன் மனோராஜி (உசன், மிருசுவில்) | லண்டன் | 5000. 00 |
| நாகமணி குமாரசாமி | ஏழாலை வடக்கு | 2000. 00 |
| திருமதி ம. நாகேஸ்வரி | நவிண்டில் | 2000. 00 |
| திருமதி தேம்பாமலர் இந்துசேகரம் | அவுஸ்திரேலியா | 75000. 00 |
| சி. பத்மநாதன் | | 10000. 00 |
| M. அப்புலிங்கம் | கோண்டாவில் | 5000. 00 |
| திரு உதயகுமாரநாதன் | திருகோணமலை | 1000. 00 |
| ந. குகசங்கர் | புத்தூர் | 1000. 00 |
| க. சிவராசா | துன்னாலை மத்தி | 10000. 00 |
| வ. சிவயோகநாதன் | இடைக்காடு | 1500. 00 |
| க.வ. வைகுந்தவாசன் | கட்டுடை (ஜேர்மனி) | 3000. 00 |
| R. கிருஸ்ணசிவம் | அவுஸ்திரேலியா | 20000. 00 |
| கந்தவனம் ரஞ்சன் | கொழும்பு | 15000. 00 |
| திருநாவுக்கரசு விக்னேஸ்வரன் | | 100 டொலர் |
| திரு அம்பலவாணன் தயாளகுமார் குடும்பம், | மூர் வீதி கொழும்பு | 5000. 00 |
| கு. தியாகராஜாசர்மா (நீர்வைமணி) | நீர்வேலி 1மூடை அரிசி | 3000. 00 |
| S. கிரன் | லண்டன் (அச்சுவேலி) | 12000. 00 |

அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்.

| | | | |
|---|---|---|---|
| குகன் ஸ்ரோர்ஸ் | | பருத்தித்துறை | 3மூடை அரிசி |
| தம்பையா பிரபாகரன் | | லண்டன் | 5000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் | | பத்தைமேனி | 1000. 00 |
| திருமதி இ. நித்தனசுந்தரம் | ஊரிக்காடு | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| சேந்தன் ஸ்ரீநமசிவாயம் | | கொட்டாஞ்சேனை | 18000. 00 |
| M. இந்திரா நாகலிங்கம் | முதலியார் ஒழுங்கை | பருத்தித்துறை | 2000. 00 |
| டனோஷன் சனோஸ் | | | 20000. 00 |
| Dr. குலகேஸ்வரகுமார் | | | 3000. 00 |
| சிவகாமி நாகேந்திரம் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| திருமதி நவரத்தினம்மா | | துன்னாலை மத்தி | 2000. 00 |
| வேலுப்பிள்ளை சம்பந்தநாதன் | | சுண்ணாகம் | 3000. 00 |
| K.V. துரைசாமி (நினைவு) | | மயிலிட்டி | 1000. 00 |
| ச. சம்பந்தநாதன் | | லண்டன் | 1மூடை அரிசி |
| க. கமலநாதன் | | கொழும்பு | 1மூடை அரிசி |
| R. சங்கரலிங்கம் | | ஊரெழு | 1மூடை மா |
| க. கதிரேசு (இளை. உபஅதிபர்) | | ஆனைக்கோட்டை | 4000. 00 |
| நாகலிங்கம் இராமநாதன் | | சுழிபுரம் கிழக்கு | 1000. 00 |
| திரு சுகனீதகுமரன் | | இணுவில் | 2000. 00 |
| சத்தியவதனி மாணிக்கநடராசா | | வெள்ளவத்தை | 1000. 00 |
| திரு தம்பிரட்ணம் | | சுண்ணாகம் | 500. 00 |
| புஸ்பகாந்தி கதிர்காமநாதன் | | கொழும்பு | 7000. 00 |
| சிவசம்பு கமலநாதன் | | கனடா | 3000. 00 |
| சோதிமுத்து சின்னத்துரை | மகாத்மாவீதி | நெல்லியடி | 1000. 00 |
| க. பூபாலராசா | கரந்தன் | நீர்வேலி மேற்கு | 1000. 00 |
| திருமதி பூ. செல்வரட்ணம் | கரந்தன் | நீர்வேலி மேற்கு | 1000. 00 |
| அ. செல்வராசா | வீரமனை | குப்பிளான் | 1000. 00 |
| திரு பொ. செல்வராசா | வீரமனை | குப்பிளான் | 1000. 00 |
| திருமதி செ. இளையபிள்ளை | கேணியடி | குப்பிளான் | 1000. 00 |
| திருமதி அம்மாப்பிள்ளை | | சிறுப்பிட்டி | 500. 00 |
| மார்க்கண்டு கருணாநிதி | | அச்சுவேலி | 500. 00 |
| திருமதி சின்னையா | | கரணவாய் | 3000. 00 |
| க. மார்க்கண்டு | மந்திகை | புட்டளை | 10000. 00 |
| திரு சிவனேசன் | வட்டு தெற்கு | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| லலிதா பாலகிருஸ்ணன் குடும்பம் | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| திரு ஸ்ரீதரன் | | திக்கம் | 2000. 00 |
| செ. சூரியகுமார் | | இன்பருட்டி | 3000. 00 |
| கி. நல்லம்மா | | இடைக்காடு | 1000. 00 |

(தொடரும்...

நடந்ததற்கு பிறகு முட்டாளும் புத்திசாலிதான்.

உ

# தினம் தினம் ஆனந்தமே...

-சத்குரு ஜக்கி வாசுதேவ்-

'கவலைப்படாதீர்கள்; மகிழ்ச்சியாக இருங்கள். இது உங்களுக்கு சிறிதும் பயனளிக்கவில்லை. ஏனென்றால், இதை உங்கள் வாழ்க்கையில் ஒரு கொள்கையாக மாற்றுவதற்கு முயன்றிருக்கிறீர்கள். அவ்வளவுதான்!

நீங்கள் சார்ந்திருப்பவைகளைப்பற்றி உங்களால் எப்படிக் கவலைப்படாமல் இருக்க முடியும்? 'கவலைப் படாதே, மகிழ்ச்சியாய் இரு' என்று உங்களை நீங்கள் எப்பொழுது சொல்லிக் கொள்கிறீர்கள்? எப்பொழுதெல்லாம் உங்கள் மனம் உங்கள் கட்டுப்பாட்டையும் மீறி ஒரு குறிப்பிட்ட எண்ணச் சுழற்சியில் சிக்கிக் கொள் கிறதோ, இதற்குப் பெயர்தான் கவலை. அப்போது தான் நீங்கள் இப்படிச் சொல்லிக் கொள்கிறீர்கள்.



கவலை என்பது ஏதோ ஒன்றைப்பற்றி மீண்டும் மீண்டும் சிந்தித்து, அந்த எண்ணச் சுழற்சி யில் சிக்கிக் கொள்வதுதான். ஏதாவது ஒன்றைப் பற்றி சிந்திப்பதற்குப் பெயர் 'கவலை' அல்ல. நீங்கள் தெளிவான சிந்தனையைக் கொண்டிருப் பது நல்லது. ஆனால் ஒன்றைப்பற்றியே மீண்டும் மீண்டும் சிந்தித்துக்கொண்டிருந்தால், அதுதான் கவலை.

## இந்தப் பிறவியே ஆனந்தம்தான்

அப்படியானால் உங்கள் மனமும் ஒரு கீறல் விழுந்த ரெக்கார்டைப்போல ஆகிவிட்டது, அது மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்கின்றது.

இது உங்கள் மனநிலை சரியில்லாததையே காட்டுகிறது. உங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு நிகழ்வு உங்களை வெகுவாகப் பாதித்திருக்கக் கூடும்; புண்படுத்தி இருக்கக்கூடும்.

அதனால்தான் அதைச்சுற்றியே உங்கள் சிந்தனை உழன்றுகொண்டிருக்கிறது. ஒரு கீறல் விழுந்த ரெக்கார்டைப்போல, உங்கள் மனம் மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறது. நீங்கள் எங்கு சென்றாலும் சரி... அதையேதான் உங்கள் மனம் சுற்றிச்சுற்றி வருகிறது.

ரெக்கார்டை சரிசெய்வதற்குப் பதிலாக, அல்லது அதன் இயக்கத்தை நிறுத்தி விடுவதற்குப் பதிலாக, இப்போது நீங்கள் வேறொரு ராகத்திற்கு மாற்றிவிடுகிறீர்கள். ஒரு சிந்தனையில் இருந்து தப்பிக்க, உங்கள் மனம் வேறொரு சிந்தனையைப் பற்றிக்கொள்கிறது. முதலில் இது உங்களுக்கு ஆறுதலாகத் தெரிந்தாலும், காலப்போக்கில் இது உங்களை மேலும் விரக்தியடையச் செய்கிறது.

ஒரு காலத்தில் மிகவும் பிரபலமாகப் பேசப்பட்ட நேர்மறைச் சிந்தனையை (பாசிடிவ் திங்கிங்) உங்களுக்குக் கற்றுக்கொடுக்க பலர் முயற்சித்திருப்பார்கள். அவர்கள் வாழ்க்கையில் இன்னும் அடிபடவில்லை. 'கவலைப்படாதே; மகிழ்ச் சியாக இரு', 'எது நடந்தாலும் அது நல்லதற்கே', நானும் சரி; நீயும் சரி, அனைத்தும் சரியாகி விடும்'- இதுபோன்ற பல போதனைகள் உங்களுக்கு வழங் கப்பட்டிருக்கும்.



நேர்மறை சிந்தனையை போதித்தவர்களே பின்னாளில் தங்கள் மனதை இழந்து தடம் மாறிப் போனார்கள். ஏனென்றால் அவர்களுடைய இந்தக் கோட்பாடு ஆரம்பத்தில் மட்டுமே சிறிதளவு பயனளித் தது. அது வாழ்க்கையின் அனைத்துப் பரிமாணங் களிலும் பலனளிக்கவில்லை; இதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தப் படைப்பிற்கு ஆதாரமாக விளங்கும் உண்மையைத் தவிர வேறு எதுவும் வாழ்க்கையின் அனைத்து பரிமாணங்களிலும் பலனளிக்க முடியாது. நல்வாழ்வை அளிக்கவல்லது என்று உங்களை நீங்களே பல வழிகளிலும் ஏமாற்றிக் கொள்ள முடியும். ஆனால், இவை எதுவுமே நிலைக்காது.

'கடவுள்தான் ஒரே வழி' என்று மக்கள் கூறியதற்கும் இதுதான் காரணம். அவர்கள் கடவுள் என்று உங்கள் கடவுள், என் கடவுள், இந்தக் கடவுள், அந்தக்கடவுள், அல்லது மேலே அமர்ந்திருக்கும் யாரோ ஒருவர்..... ஆகியோரைப் பற்றி குறிக்க வில்லை.

இந்தப் படைப்பிற்கு ஆதார மாக இருப்பதுதான் கடவுள். உங்கள் படைப்பின்மூலம் எங்கே இருப்பதாக, தற்போது உங்கள் அனுபவத்தில் உணர்கிறீர்கள். உங்களுக்குள்ளேயா...? அல்லது வெளியிலா?

கண்டிப்பாக உங்களுக்குள்ளேதான்; இல்லையா?

இந்த உடலின் வளர்ச்சியே உங்களுக்குள் இருந்துதான் நடக்கிறது. ஆக, இந்தப் படைப்பின் 'மூலமே' உங்களுக்குள்தான் இருக்கிறது. அதைத்தான் நானும் சொல்கிறேன். உங்கள் இருப்பின் ஆதாரமும், இந்தப் படைப்பின் மூலமும் ஆனந்தம் தான். இது ஒன்றுதான் வழி!

நாவலர் பக்கம்: உ (தொடர்ச்சி...



# திருவிளையாடல்

-ஆறுமுகநாவலர்-

படலம்-46

## பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்

**சோ**மசுந்தரக் கடவுள் மறைந்தருளியபின், பன்றிக்குமாரர்கள் பன்னிருவரும், உதயசூரியர்கள் பன்னிருவர்போல விளங்கிப் பல கலைகளிலும் வல்லவர்களாகிப் பன்றி மலையில் இருந்தார்கள். அப்படியிருக்கும் நாளிலே, "சோமசுந்தரக் கடவுளின் திருவருள் எல்லா உயிர்களுக்கும் பொதுவானது" என்ற உண்மையை உலகத்தாருக்கு அறிவிக்கத் திருவுளங்கொண்ட மீனாட்சியம்மையார், பெருமானை நோக்கி, "எம்பெருமானே! பொல்லா விலங்குகள் எல்லாவற்றினும் பொல்லாதனவாய் உள்ள பன்றிக்குட்டிகளுக்கு இரங்கி முலை கொடுத்து, முன்னை விலங்கறிவை நீக்கியருளியமை என்னை?" என்று கேட்டார். அதற்குச் சோமசுந்தரக் கடவுள், "சகல வேதங்களும் ஆகமங்களும் நம்மைச் "சகல சீவ தயாபரர்" என்று சொல்லும். அதனால் எல்லா உயிரும் நமக்குச் சமமே. அதனாற்றான், தாயை இழந்து பசியினாலும் வெய்யிலினாலும் வருத்தமடைந்த பன்றிக்குட்டிகளுக்கு இரங்கி முலைகொடுத்துக் காத்தோம். அதனால் அவைகள் அளவில்லாத வலிமையையும் கல்வியையும் ஞானத்தையும் பெற்றுக்கொண்டன. இனிமேல், அப்பன்றிக் குமாரர்கள் பாண்டியனுக்கு மந்திரிமார்களாயிருந்து, நம் கணத்தவர்கள் ஆவார்கள்" என்று விடை கொடுத்தார்.

பின்பு, அன்றிரவே, சோமசுந்தரக் கடவுள் இராசராச பாண்டியனுக்குச் சொற்பனத்திலே தோன்றி, "பாண்டியனே! பன்றிமலையிலே பன்னிரண்டு குமாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அளவில்லாத வலிமையும் கல்வியும் ஞானமுங் கொண்டவர்கள். நீ அவர்களை மந்திரிகளாக்கிக்கொள்" என்று கூறி மறைந்தருளினார். பாண்டியன் விழித்தெழுந்து, களிப்படைந்து, காலையிலே தன் மந்திரிகளைப் பன்றிமலைக்கு அனுப்பி அக்குமாரர்களை அழைப்பித்தான். அவர்கள் வந்து பாண்டியனை வணங்க, அவனும் மிக்க மகிழ்ந்து அவர்களுக்குப் பல வரிசைகளும் கொடுத்து அவர்களைத் தனக்கு மந்திரிகளாக்கிக் கொண்டான். பழைய மந்திரிமார்களுடைய கன்னிகைகளை அவர்களுக்கு விவாகம் செய்வித்தும் கொடுத்தான்.

பன்றிமுக வீரர்கள் பன்னிருவரும் பாண்டியனுக்குக் கவசம்போல இருந்து ஒழுகினார்கள். பன்னிரண்டு உடலுக்கும் உயிர் ஒன்று என்று சொல்லும் வண்ணம் ஒற்றுமையுடையராகி, இறுமாப்பு எதுவுமின்றி, அரசனை நிழல்போல ஒழுகிப் பாதுகாத்து வந்தனர். இவ்வாறு பாண்டியனுக்குத் தருமத்தையும் புகழையும் பெருக்கி வாழ்ந்திருந்து, சில காலஞ்செல்ல சிவலோகத்தையடைந்து சிவ கணநாதர்களானார்கள். இராசராச பாண்டியனும் சிவபதமடைந்தான்.

அறிவு அச்சத்தை முறிக்கும் மருந்து.

படலம்-47

# கரிக்குருவிக்கு உபதேசஞ்செய்த படலம்

இராசராச பாண்டியன் சிவபதம் அடைந்தபின், அவன் குமாரனாகிய சுகுண பாண்டியன் அரசியற்றி வந்தான். ஒருவன், முற்பிறவியிலே தருமகாரியங்கள் பலதும் செய்தும், சிறிது பாவம் செய்தமையினால் கரிக்குருவியாய்ப் பிறந்தான். அக் கரிக்குரு விக்கு காகம் முதலியன தொடர்ந்து ஊறு செய்தமையால், அவ்வூறுபாட்டுக்கு அஞ்சி, பட்டினத்தைவிட்டு நீங்கி, வனத்திலேபோய் ஒரு மரக்கிளையில் ஒடுங்கிப் பெருமூச்செறிந்த படி இருந்தது.


அப்பொழுது, உள்ளும் புறமும் பரிசுத்தரும் விபூதி உருத்திராட்சந் தரித்தவரும், கையில் குடையுடன் தீர்த்த யாத்திரை செய்து வரும் ஒரு சிவபக்தர் அம்மரநிழலில் வந்த மர்ந்துகொண்டு சிலருக்குப் போதித்தார். "தலங்களெல்லாவற்றிலும் சிறந்தது மதுரை. தீர்த்தங்களிற் சிறந்தது பொற்றாமரை வாவி. மூர்த்திகளெல்லாவற்றிலும் சிறந்தவர் சொக்க லிங்கம். மதுரையிலே இம்மூன்றும் சிறப்புற் றிருப்பதால் மதுரைக்குச் சமமான தலம் இப் பூவுலகில் இல்லை. சோமசுந்தரக் கடவுள், தம்மை வழிபடுவோருக்கு எளியராகி, தம்மை வழிபடுவோருக்கெல்லாம் விரும்பிய வரம் அருளுவார்" என்று போதித்தார்.

அம்மரத்தின் மேலிருந்தபடியே இதனைக் கேட்ட கரிக்குருவிக்கு ஞானம் பிறந்தது. முற்பிறப்பையும், இப்பிறவியில் தான் கரிக்குருவியாகப் பிறந்த காரணத்தையும் அறிந்தது. தான் இப்பிறவியை ஒழிப்பதற்கு இச்சிவபக்தர் கூறியதே சரியான வழியெனத் துணிந்து, காட்டினின்றும் நீங்கி மதுரையை அடைந்தது. பொற்றாமரை வாவியிலே ஸ்நானம் பண்ணி, சோமசுந்தரக் கடவுளை வலஞ்செய்து, மனசினாலே பூசித்து வணங் கியது. இவ்வாறு மூன்று நாட்கள் கழிந்தபின், மீனாட்சி அம்மையார் சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே! இந்தக் கரிக்குருவி செய்யும் செய்கை என்ன? இதன் வரவு யாது? என்றார். சிவபெருமான் அதன் அனைத்து விபரங்களையும் சொல்லிய பின் னர், அக்கரிக்குருவியின்மீது திருக்கடைக்கண் வைத்து, முன்னாளிலே மார்க்கண்டேய முனி வருக்கு மரணத்தையொழித்து நித்தியத்துவத் தைக் கொடுத்த மிருதத்யுஞ்சய மந்திரத்தை அதற்கு உபதேசித்தருளினார். உடனே அக் கரிக்குருவி சிற்றறிவு நீங்கிப், பேரறிவடைந்து சிவபெருமானைத் துதித்தது. இறுதியில் தனக்கொரு குறையிருப்பதாக விண்ணப்பஞ் செய்தது. "தீய பறவைகளெல்லாம் தமியே னுக்கு ஊறு செய்கின்றன. கண்டவரெல்லாம் நகைக்கும்படி எளியனானேன்" என்று விண் ணப்பஞ் செய்தது. அத்துடன் உபதேசித்த மந்திரத்தை தன் கரிக்குருவி மரபிலுள்ள குருவிகளெல்லாம் ஓதி உய்யும் படியும் ஒரு வரத்தினைக் கேட்டுப் பெற்றுக்கொண்டது.

அக்கரிக்குருவி தன்னைப்போலவே தன் குலமும் சிவபிரானது திருவருளினாலே, பறவைகளுக்கெல்லாம் வலியனாகி சிறப்புப் பெற்றிருக்க, தான் சிவபெருமானின் திருவடி யைச் சென்றடைந்தது. தான் தவஞ் செய்து அடைந்த வரத்தைத் தன் சுற்றமும் எளிதாக அடையும்படி பெற்றுக்கொண்டதனால், உல கத்திலே, "**தக்கனொருவன் வாழத் தன் கிளை வாழும்**" என்னும் பழமொழி விளங் கிற்று.

**எதிலும் ஆசை மிகுதியாக இருக்கக்கூடாது.**


உ




# நகையை விடுத்து பண்புடன் வாழ புதியதோர் உறுதி பூணுவோம்

**சி. யோகேஸ்வரி அவர்கள்**

திருமண நிகழ்வொன்றுக்குச் சென்றிருந்தேன். அருகே அமர்ந்திருந்த பெண் என்னுடன் உரையாட ஆரம்பித்தார். சிறிதுநேரம் வெவ்வேறு விடயங்கள்பற்றி உரையாடிய அவர் தங்க நகைகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்.



ஏன் பெண்கள் தங்க ஆபரணங்களை அணிகிறார்கள்? அழகாக இருப்பதற்கு என்று கூறினால் முழுமையாக அக்கருத்தை ஏற்கக் கூடியதாக இல்லை. அவை அழகாக இருந்தாலும் தங்கத்தால் செய்யப்படாத எத்தனையோ பொருட்கள் அழகைத் தருகின்றனவே. அவற்றை அணியலாமே? நான்குபேர் ஒரு நகையை அணிந்தால் நாமும் அதையே அணியும் ஒரு குணம் எம்மிடம் இருக்கிறதல்லவா? அப்படித்தான் பொன்னால் நகை செய்து போடும் எண்ணம் எம்மில் தோற்றிக்கொள்கிறது. இதைத்தான் செம்மறி ஆட்டுக்குணம் என்பார்கள்.

இதைவிட அந்தஸ்தைக் காட்டவும் பொன்னால் செய்த அணிகலன்களை அணிய வேண்டுமென நாம் நினைக்கிறோம். ஆனால் அது உண்மையல்ல, ஏழைப் பெண் நான்கு நகை போட்டிருந்தால் பணக்காரி என்று கருதப்படுகிறாரா? இல்லையே "எங்கேயோ இரவல் வாங்கிப் போட்டிருக்கிறாள்" என்றுதான் பார்ப்பவர்கள் நினைப்பார்கள் என்ற எண்ணம் நம்முள் உருவாக்கிக்கொள்வது எவ்வளவு முட்டாள்த்தனம்? நாம் இந்தத் தங்கநகை அணியும் நடைமுறையைப் பின்பற்றினாலும் முதலிலே யாரோ ஏதோ காரணத்திற்காகத் தொடங்கியிருக்கிறார்கள். ஏன் அவர்களுக்கு நகையைப் பொன்னினால் செய்து போடும் எண்ணம் ஏற்பட்டது?

மறைவில் இருப்பதற்கு மரியாதை உண்டு.

நாளைய தேவைக்கென்று இன்று சேமிக்கும் பழக்கம் எல்லா மனிதருக்கும் இயல்பானது. சேமித்தபொருள் பழுதாகக்கூடியதும் அழியக்கூடியதுமாக இருந்தால் நீண்ட நாள்கள் வைத்திருக்க முடியாது. எனவே தானியம் போன்றவையாக வைத்திராது பெறுமதி கூடிய பொன்னாக வைத்திருக்கக் காலத்தில் எண்ணியிருக்கலாம். அப்போது வங்கி வசதிகளில்லாத காலம். ஆள்கள் இல்லாத வேளையில் மட்டுமே திருடிய காலம். எனவே பொன்னால் நகை செய்து தானே அணிந்திருப்பது பாதுகாப்பாயிருந்தது. அப்படி ஆரம்பித்த ஒன்றைத்தான் நாம் இப்படித் தொடர்கிறோம்.

தங்கத்தால் கொடிசெய்து தாலிகோர்க்க வேண்டும் என்று சாத்திரமேதும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க ஒவ்வொரு பெண்ணின் கழுத்திலும் குறைந்தது ஐந்தாறு பவுணாவது இருந்தாக வேண்டும் என்று கத்தியுடன் ஆள்களை அலைய வைக்குமளவிற்கு எமது நகைமோகம் திருடர் கூட்டத்தை உருவாக்கிவிட்டிருக்கிறது.

எந்தத் தீமையிலும் ஒரு நன்மையிருக்கும். தங்கநகை அணியாமல் இப்பெண் திருமண நிகழ்வொன்றுக்கு வர அந்தத் திருட்டு வழிவகுத்திருக்கிறதே என்று நினைக்கும்போது வேதனை அளிக்கிறது. ஆனால் இப்படிச் சிலர் வரத்தொடங்க எல்லோருமே அதைப் பின்பற்றினால் திருடர்களுக்கும் பெரிய பொருள்களைத் திருடவேண்டிய நிலை வந்துவிடும் என்று என் கற்பனை நீண்டது.

ஆனாலும் அங்கிருந்தவர்களின் மனதில் இந்த இளம் வயதில் கையில் ஒன்றும் போடாமல் வரலாமோ? இதுதான் அந்தக் கேள்வி?

அந்தப் பெண்ணையே திரும்பிப்பார்த்த நான் ஆச்சரியப்பட்டேன்! எந்த நகையுமில்லாமலா அத்தனை அழகாக இருந்தாள் அந்தப்பெண்.

"நகைபோட விரும்பாதவர்களையும் அணியவைக்க முனையும் இவர்கள் போன்றோர் பின்னேறும் காலையும் முன்னே இழுப்பார்கள் போலிருக்கிறதே" என்ற வேதனை என்னுள் எழுந்தது.

இரசனையும் ஆசையும் மனிதர்களுக்கு மனிதர் வேறுபடும் என்றாலும் பெண்கள் மட்டும்தானே அணிகலன்களை அள்ளி அடுக்கிக் கொள்கிறார்கள். ஆண்கள் அப்படிச் செய்வதில்லையே அவர்களும் மனிதர்கள் தானே; அவர்களுக்கு ஏன் இந்த ஆசை வருவதில்லை. சிந்தித்துப் பாருங்கள்.

காரணம் இதுதான் குழந்தைப் பருவம் முதலே "ஆண்பிள்ளைகள் நகை அணிவதில்லை" என்ற எண்ணம் அவர்களது மனதில் சுற்றியுள்ளோரால் ஆழப்பதிய வைக்கப்படுகிறது. பெண்ணின் மனதில் அணிகலன் ஆசை மட்டுமல்ல இன்னும் தேவையற்ற எத்தனையோ கட்டுப்பாடுகள் எல்லாம் பதியவைக்கப்படுகின்றன. இவற்றிலிருந்து தப்பிப்பிழைத்து ஒருபெண் நிமிர்ந்து நின்றால்கூட அவளைப் பிடித்திழுத்துத் தாம் புதைந்து கிடக்கும் சேற்றினுள் வீழ்த்த முனையும் பெண்களைப்பற்றி என்ன சொல்லலாம்?

தங்கத்தின் விலை உயர்கிறது. அது ஆபத்தை வலிந்து அழைத்து வருகிறது. இந்த நிலையிலாவது அதன்மீதுள்ள ஆசையை நாம் விட்டுவிட முயலலாம் அல்லவா? தங்கத்தை அணிவது நாகரிகம் அல்ல என்ற மனப்பாங்கைக் குழந்தைப் பருவத்திலிருந்தே ஊட்டிவளர்த்துப் பாருங்கள் அந்தக் குழந்தை புதுமைப் பெண்ணாக வளர்வாள். தங்க நகையை விடுத்து உயிரைக் காப்பாற்றி பண்பை வளர்க்க நாமும் புதியதோர் உறுதி பூணுவோம்.

*-நன்றி வலம்புரி-*

உ

# கந்தனே கலியுகத் தெய்வம்



கே.வி. குணசேகரம் அவர்கள்

பத்து வருடங்களுக்கு முன் சைவ சமயத் தெய்வங்களைப் பற்றி முழுமையாக ஆராயவேண்டும் என்ற எண்ணம் சிவனருளால் மனதிற் தோன்றியது. அதன்படி பிள்ளையார், சிவன், மகாவிஷ்ணு, சூரியன், பெண் தெய்வங்கள்பற்றிய ஆய்வுகள் செய்து அவ்வப்போது நூல்களாக வெளியிட்டேன். இறுதியாக முருகனைப் பற்றி ஆராயவேண்டும் என முடிவெடுத்து ஆராய்ந்தேன். அதன்படி முருகனது குணாதிசயங்கள் பற்றிப் "பிரம்மமாக நின்ற சோதி" என்ற நூலை வெளியிட்டேன். அதில் முருகனது முழுமையான ஆய்வுகள் இல்லை. சிறிதளவே இருந்தன. அதனால் சந்நிதியானின் **"ஞானச்சுடர்"** என்ற நூலில் முருகனைப் பற்றிய ஆய்வைச் செய்யலாமென நினைக்கிறேன்.

மனிதன் தோன்றியகாலம் முதல் கடவுளை வணங்கிவருகிறான். பயம் தான் காரணம். பயத்தினால்த்தான் மனிதன் தன்னைப் பயமுறுத்தும் பொருட்களை வணங்க ஆரம்பித்தான். அத்துடன் தனக்கு பிரதியுபகாரமின்றி உதவி செய்யும் பொருட்களையும் நன்றிப்பெருக்கோடு வணங்கினான். இயற்கை மனிதனைப் பயமுறுத்தியது. இடி முழக்கம், பெருமழை, மின்னல், இடிவிழல், ஆற்றுப்பெருக்கு, நிலநடுக்கம், சூறாவளிக் காற்று என்பன மனிதனைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன. அதனால் அவன் இயற்கையை வணங்கினான். இந்தவகையில்த்தான் கடவுள் வணக்கம் உருவாகியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மனிதன் அலைந்து திரிந்தான். பின் ஓர் இடத்தில் குடிசைகளை அமைத்து வாழத் தொடங்கினான். அப்படிக் குடிசைகளை அமைத்து வாழ்ந்த ஓர் இடம் சிந்துவெளி என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிந்துவெளி நகரங்களான மொகஞ்சதாரோ, ஹரப்பா என்ற நகரங்களில் வாழ்ந்த மக்கள் வேத காலத் தெய்வங்களை வணங்குவதற்குப் பல ஆயிரம் வருடங்களுக்குமுன்பு வாழ்ந்தவர்கள். அங்கு ஆராய்ச்சியாளர் கண்டெடுத்த எச்சங்களில் இருந்து அவர்கள் பெரும் நாகரிகம் உள்ளவர்களாக வாழ்ந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மாடிவீடுகள் அமைத்து ஆடம்பரமாக அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறுவதைக் கேட்டால் வியப்புண்டாகும். அங்கு கடவுளை வழிபட்டமைக்கான அறிகுறிகளாகத் தெய்வச் சிலைகள் பலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றி விரிவாக ஆராய்வது எனது நோக்கமல்ல. முருகனைப் பற்றி ஆராய்வதே நோக்கமென்பதால் ஆதிகால வரலாற்றைச் சற்றுத் தொட்டுச் செல்கிறேன்.

மத்திய ஆசியாவில் இருந்து ஆப்கானிஸ்தான் அல்லது ஈரான் வழியாகச் சிந்துவெளிக்குள் நுழைந்து சிந்துவெளியில் குடியேறிய மக்கள்தாம் ஆரியர். அவர்கள்தான் இந்துமதத்தைத் தோற்றுவித்ததாக வரலாறு கூறுகிறது. அவர்கள் வேதங்களையும் இந்து மதத்தையும் அதற்கான வணக்கமுறைகளையும் உருவாக்கியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வேதம் எப்போது உருவானது என்று யாரும் இதுவரை அறுதியிட்டுக் கூறவில்லை. மார்க்முல்லர் என்ற மேல்நாட்டு அறிஞர் கிறிஸ்து பிறப்பதற்கு 1200 வருடங்களுக்கு முன்புதான் வேதப்பாடல்கள் உருவானவை என்று கூறுகிறார். இந்திய அறிஞரான திலகர், கிறிஸ்து பிறப்பதற்கு 4000 வருடங்களுக்கு முன்பு வேதப்பாடல்கள் உருவாக்கப்பட்டன என்று கூறுகிறார். இருப்பினும் வேதங்களை நான்காக வகுத்தவர் வேதவியாசர் என்று அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

வேதவியாசர்தான் இதிகாசமான மகாபாரதத்தை எழுதியவர். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்குமிடையே 18நாட்கள் மகாபாரதப்போர் நடைபெற்றது. இப்போர் கிறிஸ்து பிறப்பதற்கு 1900 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பாரதத்திற்கும் வேதத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அத்துடன் வேதத்தின் இறுதிப் பகுதியாகக் கருதப்படும் உபநிடதங்களில் ஒன்றான பகவத்கீதை மகாபாரதத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் வேதங்கள் கிறிஸ்து பிறப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டன என்ற முடிபுக்கு ஆய்வாளர் வந்துள்ளனர்.

வேதகாலத்தில் 33 தெய்வங்கள் வழிபடப்பட்டன. இவற்றுள் முக்கிய தெய்வங்களாக இந்திரன் அக்கினி, வருணன், சூரியன் ஆகியோர் வழிபடப்பட்டனர். அக்கினி வருணன் சூரியன் என்ற தெய்வங்கள் வேத காலத்திற்கு முன்பு வாழ்ந்த மக்களாலும் வணங்கப்பட்ட தெய்வங்களாகும். இயற்கை என்ற பெயரில் வணங்கப்பட்ட தெய்வங்கள் பின் ஆரியரால் வேதத்துக்குள் புகுத்தப்பட்டன. உருத்திரன், மகாவிஷ்ணு போன்ற தெய்வங்கள் வேதகாலத்தில் வணங்கப்பட்ட போதும் அவற்றிற்குப் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. வேதப்பாடல்கள் யாவும் மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுமாறு கடவுள்களைக் கோருபவையாக உள்ளன. அத்துடன் மக்களுக்குப் போதிய அளவு உணவு தரும்படியும்,, தமக்கு உணவுதரும் பசுக்களைக் காப்பாற்றுமாறும் கோரிக்கை விடுகின்றன.

இருக்குவேதம் மக்களைக் காப்பாற்றும்படியும், மக்களின் உணவுத்தேவையைப் பூர்த்திசெய்யும்படியும் கோரிக்கையிட, யசுர்வேதம்; மக்களின் நல்வாழ்விற்காகச் செய்யப்படும் சடங்கு வகைகளைப்பற்றி விரிவாகக் கூறுகிறது. மக்களுக்காகச் செய்யப்படும் சடங்குகள் எவை? அரசர்களினால் மட்டும் செய்யப்படும் சடங்குகள் எவை? அவற்றை எவ்வாறு செய்தல் வேண்டும்? அவற்றை அவ்வாறு செய்தால் உண்டாகும் பயன்கள் எவையென்றெல்லாம் மிகவும் விரிவாக யசுர்வேதம் கூறுகிறது.

மூன்றாவது வேதம் சாமவேதம். இதிலுள்ள பெரும்பாலான பாடல்கள் இருக்கு வேதத்திலிருந்து எடுக்கப்பட்டவை. இசையுடன் பாடும் பாடல்கள் இவை. சாமவேதப்பாடல்கள் யாவும் மிகவும் இனிமையானவை. மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுபவை. இதனால் இதை சாமகானம் என்றும் அழைப்பர்.

நான்காவது வேதம் அதர்வன வேதம். இந்த வேதத்தை அறிஞர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. மந்திர தந்திரங்கள், பில்லி, சூனியம், நோய் நீக்கம் பற்றிய பாடல்கள்

**சோம்பல்தான் தீமைக்கும் துன்பத்திற்கும் காரணம்.**

இவ்வேதத்தில் உள்ளன. இதைப் பின் வந்தவர்கள் ஏற்றுள்ளமையால் வேதங்கள் நான்கு என்று சொல்லப்படுகிறது.

மனிதன் மூன்று பொருட்களால் ஆனவன் என்கிறது இருக்குவேதம். உடம்பு, உயிர், ஆத்மா என்பவையே அம்மூன்று பொருட்களும். தைத்தீரிய உபநிடதம் மனிதனுக்கு ஐந்து நிலைகள் இருப்பதாகக் குறிப்பிடுகிறது. அன்னநிலை, பிராணநிலை, மனோநிலை, விஞ்ஞானநிலை, ஆனந்தநிலை என்பனவே அந்த ஐந்து நிலைகளுமாகும். இவ்ஐந்து நிலைகளுள் அன்னநிலை உடம்பாகும். பிராணநிலை உயிராகும். மனோநிலை ஆன்மாவாகும். விஞ்ஞானநிலை அறிவாகிய ஞானமாகும். ஆண்டவனோடு கலப்பதால் உண்டாகும் நிலை ஆனந்தநிலையாகும்.

உலகில் பிறந்து பிறந்து துன்பங்களை அனுபவித்து அல்லற்படும் ஆன்மாக்கள் பிறவாத நிலையை அடைந்து ஆண்டவனோடு கலந்து ஆனந்தநிலையை அடைய வேண்டும் என்பதே வேதங்களை முதன்மை நூலாக ஏற்றுள்ள காலதீக சமயங்களின் நோக்கமாகும்.

மின்னலை ஆயுதமாகக் கொண்டுள்ள இந்திரன்தான் வேதத்தின் முதன்மையான தெய்வம். அடுத்தபடியாக உள்ள தெய்வம் அக்கினி, மூன்றாவதாக உள்ள தெய்வம் வருணன். அதன்பின் வாயு, சூரியன், உஷா, உருத்திரன், விஷ்ணு, அசுவினி, தேவர்கள், பிரகஸ்பதி, பிராமணஸ்பதி, பிரஜாபதி, அதிதி போன்றவையாகும்.

தைத்தீரிய உபநிடதம் மனிதனின் பிறப்பைப்பற்றி இவ்வாறு கூறுகிறது. “எதிலிருந்து எல்லாப் பொருட்களும் உண்டானதோ, எதனால் உலகில் உள்ள பொருட்கள் அனைத்தும் காக்கப்படுகின்றனவோ, பின் எதில் எல்லாப் பொருட்களும் ஒடுங்குகின்றனவோ அதுதான் பிரம்மம் என்றும் கடவுள் என்றும் விராட புருஷன் என்றும் தைத்தீரிய உபநிடதம் கூறுகின்றது.

இலிங்க வடிவமாக இருக்கும் ஆண்டவனுக்குச் செய்யப்படும் அபிஷேகங்கள் பற்றியும் வேதங்கள் கூறுகின்றன. விராட புருஷனான பிரம்மம்தான் மேலான தெய்வம். விராட புரிஷனிடமிருந்துதான் இதர தெய்வங்களான இந்திரன், அக்கினி, சந்திரன், வாயு எனப்பட்ட தெய்வங்களெல்லாம் தோன்றின என்று புருஷசூத்திரம் கூறுகிறது. இதைத் தவிர விராட புரிஷனின் எந்தெந்த உறுப்புக்களிலிருந்து எந்தெந்தத் தெய்வங்கள் தோன்றினவென்றும் புருஷசூத்திரம் கூறுகிறது. விராட புரிஷனின் உள்ளத்தில் இருந்து சந்திரனும், அவனது கண்களிலிருந்து சூரியனும், வாயிலிருந்து இந்திரனும்- அக்கினியும், மூச்சிலிருந்து வாயுவும் தோன்றினர் என்று கூறுகிறது.

(தொடரும்....

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விஷேட தினங்கள்

**சித்திரை**

**05.04.2011 பங்குனி 22 செவ்வாய்**

ஆலய கும்பாபிஷேக தினம்
சகஷ்ர மகா சங்காபிஷேகம்
காலை 8மணி சங்குப்பூஜை
பகல் 10மணி சகஷ்ர சங்காபிஷேகம்
பகல் 11மணி சண்முக அர்ச்சனை
பகல் 12மணி விசேட உற்சவம்

**07.04.2011 பங்குனி 24 வியாழன்**

கார்த்திகை விரத தினம்
பகல் விஷேட உற்சவம்

**14.04.2011 சித்திரை 1 வியாழன்**

தமிழ் இந்துப் பண்பாடு (கர)
மாலை விஷேட உற்சவம்

**17.04.2011 சித்திரை 4 ஞாயிறு**

சித்திரா பூரணை

அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு.

உ

# சான்றோர் யார்?

ஆ.கோ. சந்திரசேகரம் JP அவர்கள்

சான்றோர்களைக் குறித்து வாழ்ந்த ஆன்றோர் எப்படி எண்ணினார்கள் என்பதை அறிவது முக்கியம்.

மனிதன் பல பேறுகளைப் பெற ஆவல் கொள்கிறான். பொன், நிலம், பணம் ஆகியவற்றைப் பெற்றவரை, யாரும் பெற்றோர் என்று சொல்வதில்லை. மக்களைப் பெற்றோரைத்தான் பெற்றோர் என்று மனங்குளிரச் சொல்கிறார்கள்.

ஒரு தாய்க்கு குழந்தை பிறக்கிறது; 'தன் மகன் பெரிய அறிஞன் ஆவான், பெரிய அதிகாரி ஆவான், பெரிய முதலாளி ஆவான்!' என்றெல்லாம் நினைப்பாள்.

ஆனால், இவற்றைவிடத் தன் மகன் பெரிய சான்றோன் ஆகவேண்டும் என்று நினைத்து, பெற்றபோது பெற்ற மகிழ்ச்சியை விடக் கூடுதலாகப் பூரிப்படைவாள்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்"

-திருக்குறள்-

எனவே, மக்களைப் பெற்றோர், தம் குழந்தைகள் வளர்ந்ததும் சான்றோர் ஆகவேண்டும் என்பதில் குறியாக இருந்தார்கள் என அறிகிறார்கள்.

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே; சான்றோர் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" என்னும் புறநானூற்று அடிகள் இந்தக் கருத்திற்கு அரண் செய்கின்றன.

அந்தக் காலத்தில் வாழ்ந்தவர்கள் சான்றோர் வாழ்ந்த வழியில் வாழவேண்டும் என்றே நினைத்தார்கள். கடை ஏழு வள்ளல்களில் ஒருவனாகிய ஆய் அண்டிரன், சான்றோர் சென்ற வழியில் நடப்பதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதினான்.

பிறருக்கு உதவி செய்தல் என்ற குணம், பிறவியை மாட்சிமைப்படுத்துகிறது; அறியாமை என்ற இருளால் மூடப்பட்டுள்ள உயிரின் இனிய பண்புகளை, இது வெளிப்படுத்தி, ஒளி விளங்கச் செய்கிறது. ஒரு பயனையும் கருதாத உதவி- மறுமைப் பயனையும் எதிர்பார்க்காத உதவி- மிகவும் சிறப்புடையது.

உதவி என்பது அறம் நோக்கிச் செய்வது என்று பலர் தவறாக நினைக்கிறார்கள்.

அறம் கருதிச் செய்தால் ஒன்றை எதிர்பார்த்துச் செய்வதாகும்; இதனால் இரக்க உள்ளம் உண்டாகாது.

மறுமையில் 'சிறப்பு' உண்டாகும் என்று நினைத்து இந்தப் பிறவியில் ஒருவருக்குப் பொருள் கொடுத்து உதவி செய்தால், அதற்கு 'உதவி' என்பது பெயராகாது; அதனை ஒரு வகையான 'வாணிபம்' என்றுதான் பெயரிட வேண்டும்.

ஒரு பொருளைக்கொடுத்து, அறத்தையோ, பலனையோ பெற்றால் அது பண்டமாற்றுப்போல் வாணிபமாகவே முடிகிறது. 'அறத்தை விலைகொடுத்து வாங்கும் அறவிலை வாணிகன் ஆய் அல்லன்; எந்த மறுமைப் பயனையும் அவன் எதிர்பார்க்கவே மாட்டான். சான்றோர் இந்த முறையில்தான் வாழ்ந்தார்கள். அதுபோலவே தானும் வாழவேண்டும்' என்னும் கொள்கையுடையவன் ஆய்.

எனவே, 'சான்றோர் சென்ற நெறி' என்னும் செந்நெறி வகுக்கப்பட்டு இருந்தது எனவும், அந்த நெறியினின்று வழுவாது ஒழுகவேண்டியது ஒவ்வொருவருடைய கடமை எனவும் நம் முன்னோர் எண்ணினர்.

'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
ஆறவிலை வணிகன் ஆய் அலன்; பிறரும்
சான்றோர் சென்ற நெறி என
ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே'

-புறநானூறு-

ஆண்டுகள் பல ஆனாலும், நரை திரை இல்லாமல், இளமையாகவும், அழகாகவும் இருப்பதற்கு எல்லோரும் விரும்புவார்கள். அதற்காகக் காயகற்பங்கள் செய்து இவற்றால் பயனில்லை என உணர்ந்து மனம் புண்ணாவார்கள். இத்தகைய தவறான முயற்சிகளால், பல காலம் பொறுத்து வரவிருக்கும் நரை திரைகளை மிகவிரைவில் வரவழைத்துக் கொள்கிறார்கள். மாறாகச் சான்றோர் வாழும் இடத்தில் நாமும் வாழ்ந்தால், இளமையோடு வாழலாம் என்ற கருத்தைப் பிசிராந்தையார் கூறுகிறார். இளமைக்கு இந்தப் புலவர் காட்டும் வழி இயல்பானது; நிலையானது; செலவில்லாதது. இவர் குறிப்பிடும் முதுமையை ஓட்டும் வழியைக் காண்போம்.

"நான் இல்வாழ்க்கையில் இருக்கிறேன். என் மனைவி மாட்சிமையான குணங்கள் உடையவள்; அறிவும் நிரம்பியவள்; என் மக்களும் அறிவுள்ளவர்கள்; என் வேலைக்காரர்கள் இளைஞர்கள்; நான் கருதுவதையே அவர்களும் கருதுவார்கள். நான் வாழும் நாட்டிலுள்ள அரசன் முறையில்லாதவற்றைச் செய்யமாட்டான். குடிகளைப் பாதுகாப்பான்; என் ஊரில் சான்றோர் பலர் வாழ்கிறார்கள். இவையே நான் நரை திரை இல்லாமல் இருப்பதற்குக் காரணம்" என்கிறார்.

"யாண்டு பலவாக நரை இல ஆகுதல் யாங்காகியர்? ஏன் வினவுதிராயின் மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர் யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும் அல்லவைசெய்யான் காக்கும் அதன்தலை ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழும் ஊரே" -புறநானூறு-

சான்றோர் பலர் இருந்ததனாலேயே சந்தமும் இளமையோடு பிசிராந்தையரால் வாழ முடிந்தது என்று உணர்கிறோம். இத்தகைய அறிவுணர்வு உடைய சான்றோர் வாழாத நாட்டில் ஒரு நன்மையும் உண்டாவதற்கு வழியில்லை. ஓரறிவு உயிர்களும் செழுமையாக வளர்வதில்லை; தக்க பயனும் தருவதில்லை; இறுதியில் பசி, பிணி, பகை ஆகியன உண்டாகி, நாட்டுக்கு இன்னல் அளவில்லாமல் ஏற்படும். இந்தச் சிறுகுடியில் வாழ்பவர்கள் அறமில்லாத காரியங்களை விரும்பிச் செய்வதனால் இந்த மலையில் வள்ளிக்கிழங்குகள் நிலத்தினுள் இறங்கி விளையமாட்டா; இந்த மலையில் வண்டுகள், தேன்கூடுகள் கட்டமாட்டா,

திணைப்பயிர்கள் கதிர்வாங்கிப் பயன்தரமாட்டா. இனிப் பாடலைப் பார்ப்போம்.

'சிறு குடியீரே சிறு குடியீரே
வள்ளிகீழ் வீழா; வரை மிசைத் தேன் தொடா
கொல்லை குரல் வாங்கி ஈனா; மலை வாழ்நர்
அல்ல புரிந்து ஒழுகலான்'

-கலித்தொகை-


சான்றோர் இல்லாமையால் எப்படிப்பட்ட இன்னல்கள் ஏற்படும் என்பதை இந்தப் பாடல் தெளிவுறுத்துகிறது. இனி இறுதியாகச் சான்றோர் யார் என்பதற்கு வள்ளுவர் குறிப்பிடும் இலக்கணத்தைப் பார்ப்போம். ஏனென்றால் திருவள்ளுவரை விட உலகத்தை அளந்து பார்த்த பெரியார் வேறு யாரும் இல்லை.

'அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றிய தூண்'

-திருக்குறள்-

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்து பண்புகளும் சான்றாண்மையைத் தாங்கியுள்ள தூண்களாகும். இந்த ஐந்து பண்புகளை ஆய்ந்து அறிந்தால் இந்தப் பண்புகள் வாய்க்கப்பெற்றோரே சான்றோர் என்று உணரலாம். கட்டுரையின் தலைப்பாகிய வினாவிற்கு விடை கிடைத்துவிட்டது அல்லவா?


# வருடாந்த கும்பாபிஷேக தினம் (05.04.2011)



மேற்படி தவத்திரு வே. முருகேசு சுவாமிகளின் நினைவாக அவரது அடியார்கள், அன்பர்களினால் நடாத்தப்பட்டுவரும் வருடாந்த கும்பாபிஷேகதினம் எதிர்வரும் 05.04.2011 செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளதால் அன்றைய நிகழ்வாக ஸ்ரீ செல்வச்சந்நிதி வேற்பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும், சண்முக அர்ச்சனையும் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து எம்பெருமானின் வீதி உலா இடம்பெறும். விஷேட நிகழ்வாக தவில் கச்சேரியும் இடம்பெறும்.

தீய செயல்களிலிருந்து நம்மைத் தடுப்பவன் நண்பன்.

உ



# அம்மாவின் பெருமை அவனியில் வேறு எவர்க்கும் இல்லை

கு. குணாளன் அவர்கள்

**அ**ம்மாவின் அன்பு வற்றிப்போகுமா? தனது பிள்ளைகளை மறப்பாளா? நிச்சயமாக இல்லை என்றுதான் நான் கூறுவேன். அம்மாவின் அன்பு என்பது வற்றாத ஜீவநதி போன்றது. அந்த நதியின் தண்ணீரை அள்ளிப்பருகக் கிடைத்த இந்த மானிடம், பெறுவதற்கு அரிய பேறு பெற்றது. அன்னைக்கு எவ்வுலகிலும் ஈடிணையானது ஒன்றும் கிடையாது. மேலும் அவளது அன்பு, பாசம், கருணை, அரவணைப்பு, பரிவு இவை எல்லாவற்றிற்குமே ஈடிணை எவ்வுலகிலும் எதுவும் கிடையாது.

அன்னை இடத்து அன்பு பாராட்டாத ஒருவன் இறைவன் இடத்து அன்பு வைப்பது விழலுக்கு இறைத்த நீர்போன்றதே ஆகும். அன்னையவள் தான் நாம் முதன்முதல் கண்ட, கண்கண்ட தெய்வம்.

"அன்னையைப்போல் ஒரு தெய்வம் இல்லை
அவள் அடிதொழ மறப்பவர் மனிதரில்லை"

என ஓர் கவிஞர் மிகவும் அழகாகப் பாடியுள்ளார்.

"தாயிற் சிறந்த கோயில் இல்லை" என்பது ஆன்றோர் வாக்கு. இவை எல்லா வற்றையும் ஒப்புநோக்குமிடத்து, அன்னையே கோயில் ஆகிறாள். அப்படியாக இருக்கும் போது கடவுளும் அவள்தானே.

அன்னையின் அன்பு என்பது விபரிக்கமுடியாத ஒரு பெரும் பொக்கிஷம். அந்த அன்பின் பிடியில் நின்று வாழ்பவருக்கு எல்லாமே வெற்றிதான். தாய்மைக்கு முதலிடம் அளிக்கும் எவரும் வாழ்வில் முதன்மை நிலையை அடைவர் என்பது பெரியோர்களின் கருத்தாகும். எனது கருத்தும் அதுவே.

அன்பு மட்டுமா? கருணை, பாசம், பரிவு, அரவணைப்பு என்பனகூட அந்த வற்றாத ஊற்றிலிருந்துதானே உருவாகின்றன.

அம்மா என்றால் அன்பு, அம்மா என்றால் கருணையின் வடிவம். அம்மா என்றால் பாசத்தின் வடிவம். இப்படியாகத் தாயின் பெருமைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

தாய்மை என்பது எல்லோர்க்கும் கிடைப்பது அரிது. அப்படியான இந்தப் பேறானது தெய்வீகமானது. உயிரோட்டமானது, ஒரு தாய் குழந்தையைப் பெற்றெடுக்கும்போது அவள் எமனிடம் சென்று வருகிறாள் என எமது மூதாதையர்கள் கூறக்கேள்விப்பட்டிருக்கிறோம். அது முற்றிலும் உண்மை. உயிர்போய் உயிர்வரும் நிலைதான் அது. தன் உதிரத்தைக் கருவாக்கி வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த பின்னரும் தன் உதிரத்தையே மீண்டும் பாலாக்கித்தரும் அந்த உயர்ந்த பண்பு வேறு யாருக்குவரும்? அன்னையைத் தவிர வேறு எந்த ஒருவருக்குமே அந்தப் பண்பு வராது.

அம்மா என்பது தமிழ் வார்த்தை. அதுவே உலகில் முதல் வார்த்தை என்று ஓர் கவிஞர் கூறியுள்ளார். தரணியில் மனித குழந்தை அம்மா என்று குரல் எழுப்பிக் கொண்டுதானே பிறக்கிறது. ஏன் சில விலங் கினங்கள்கூட அம்மா என்ற ஒலியை எழுப்பு வதைக் கேட்கக்கூடியதாக இருக்கிறது.

எந்த வார்த்தைக்கும் இல்லாத ஒரு மகத்தான தெய்வீக சக்தி அம்மா என்ற வார்த்தைக்கு உண்டு என்றால் அது மிகை யாகாது. அம்மா என்று நாம் சொல்லும்போது எமது உடல் எவ்வளவு புளகாங்கிதம் அடை கிறது, என்று எம் எல்லோர்க்கும் தெரிந்து இருக்கும் என நான் நினைக்கிறேன். அம்மா என்றால் நம் மெய் சிலிர்க்கும். அம்மா என்னும்போது விபரிக்கமுடியாத இன்ப உணர்வை அனுபவிக்கிறோம். அம்மாவின் அரவணைப்புத்தான் எல்லாவற்றிலும் மேலா னது என்பதனை உணர்த்தவே சிவன் தாய்ப் பன்றி வடிவில் வந்து பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டினார். ஆபத்து வேளையிலும், கீழே தடுக்கி விழுந்தாலும்கூட நாம் எவ்வார்த்தை யையும் உச்சரியாது, அம்மா என்று சொல் லிப் பாருங்கள் சகல துன்பமும் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடும்.

இத்தனை சிறப்பு அம்சங்களை தன் னகத்தே கொண்ட நம் அன்னைக்கு சமு தாயத்தில் கிடைக்கும் மதிப்பு என்ன? வயோதிப காலத்தில் பொல்லுப் பிடித்து நடக்கும் அன்னையின் மனதிற்கு ஆறுதல் அளிக்கப்படுகிறதா? அன்னையை அன்னை யாகக் காப்பவர் எம் மத்தியில் எத்தனைபேர்? எம்மைக் கருவில் பத்துத் திங்களும் சுமந்த அன்னை இன்று முதியோர் இல்லத்தில் கண்ணீர் வடிக்கும் இழிநிலை. எல்லாப் பிள்ளைகளையும் பிழை சொல்லவில்லை. ஒரு சிலர் செய்யும் இழிசெயலால் நாம் எல்லோரும் பாதிக்கப்படுகிறோம்.

வாழ்வில் தோன்றும் புதிய புதிய உறவுகளால் பத்து திங்கள் எமை சுமந்த அன்னை அந்நியமாகி விடுகிறாள். தாயே, “உன் தயவு எனக்கு இனித் தேவையில்லை” என்பதுபோல் தள்ளிவைத்து விடுகிறார்கள். அதற்குப் பதில் “போதும் அம்மா நீ என்னைத் தாங்கியது, இனி உயிர் உள்ளவரை நான் உன்னைத் தாங்குகிறேன்”, என்று ஒரு மகன் கூறுவானானால் அந்தத் தாய் எவ்வளவு சந்தோஷமும், மனநிறைவும் அடைவாள்.

அன்னையைக் கவலையடையச் செய்தால், அவள் விடும் கண்ணீரை இறை வன் எண்ணியபடி உள்ளான். அதற்கான தண்டனை நாம் அனுபவித்தே தீரவேண்டும். அன்னைக்குப்பின்தான் வாழ்வில் எல்லாம் கிடைக்கிறது. “தாய்க்குப் பின்தான் தாரம்” தாயைக் கண்டபின் நாம் ஒரு தாரத்தின் வாழ்க்கைத் துணையாகிறோம். தாய் இல்லை யேல் நாம் ஏது? ஏன் எமது தாரம்தான் ஏது?

அந்தத் தாரமும் ஓர் அன்னை வயிற் றுப் பிறப்புத்தானே. தனது தாயை அறிந்த ஒருத்தி கணவன் தாயை மட்டும் துச்சமாக மதிப்பது ஏன்? தாரம் வந்ததும் தாயைப் புறந்தள்ளி வைப்பவர் மனிதரே இல்லை. அவர்கள் ஒரு சடப்பொருளுக்குச் சமன். அன்னையைப் பார்த்து தவறான கேள்விகள் கோபமாக ஏசுதல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் அன்னை இல்லையேல் இன்று நாம் இல்லை. நாம் இல்லை என்றால் எப்படி அன்னையைப் பார்த்து கேள்விகளைக் கேட்கமுடியும். அன்னையவளுக்கு நாம் எல் லோரும் கடன்பட்டவராகவே உள்ளோம். அவ ளிடம் நாம் பட்ட கடனை எந்தக் காலத்திலும் தீர்க்க முடியாது. “தாய்ப்பாலுக்கு கணக்குப் பார்த்தால் தாலிகூட மிஞ்சாது” என ஓர் கவிஞர் மிகவும் தத்துவரூபமாக விளக்கியுள்ளார்.

பெற்றவளுக்கு இல்லாத உரிமை, அக்கறை எல்லாம் மற்றவர்களுக்கு எங்கிருந்து

வரும். எமது வாழ்வின் உயிர் நாடியே தாய்தான். மற்றைய எல்லா உறவுகளும் இடையில் வந்தவையே ஆகும். எமக்கு உயிர் தந்தவளைவிட இடையில் வந்து உறவு தந்தவள் எவ்விதத்தில் உயர்ந்தவள்.

எவ்வுலகிலும் எப்பொருளுடனும் ஒப்பிடமுடியாத பெறுமதி மிக்கவர் அன்னை. அப்படியான அன்னையை போற்றுவதும், சீராட்டுவதும் மானிடராகப் பிறந்த நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். அதை விடுத்து தாயை ஏசி, காலால் எட்டி உதைத்து உதாசீனம் செய்வது அல்ல. தாயை போற்றுபவர் தரணியில் சகல செல்வங்களும் பெற்று நலமுடன் வாழ்வார் என்பது எனது கருத்தாகும்.

அன்னையுடன் சேர்ந்தால்தான் தந்தைக்குப் பெருமை. அதனால்தான் "அன்னையை, சிறப்பிக்கும்போதெல்லாம் நாம் எமது தந்தையையும் நினைவு கூர்கிறோம். "அன்னை தந்தையை வணங்கிப்பாரு எம் வாழ்வில் எல்லாம் தானா வரும்" என ஒரு கவிஞர் கூறியுள்ளார்.

"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்று படிக்கிறோம்.

முதல் தாயும் பின்னர் தந்தையும் எமது முன்னறி தெய்வங்கள் ஆகின்றனர். இந்த உலகில் உள்ள உறவுகளில் முதலானது தாயின் உறவு. தாய்மையே இத்தரணியில் முதன்மையானது.

"ஆசைப்பட்ட எல்லாவற்றையும் காசு இருந்தால் வாங்கலாம்
அம்மாவை வாங்க முடியுமா?" முடியவே முடியாது என்பது எனது கூற்று. தாய்மை என்றால் சக்தி என்பது இந்துக்களின் கொள்கை ஆகும். பொறுமை, அமைதி நிறைந்தவள் தாய். தினமும் நாம் ஒவ்வொருவரும் "அன்னையின் அடியினை ஆராதிப்போமாக.

---

## செல்வச்சந்நிதிக்கந்தன்
## கற்றோர் கவிமாலை - 17

**பல்லவி**

ஞாலமா வாழ்வுவர நயந்தருள் தாருமையா!
சீலமா மறைதந்த சிவகுரு வாளனே

**அநுபல்லவி**

கோலமா மயில்மீது குறவள்ளி தெய்வியொடு
சோலைமா வெழிலான சுழிமுகத் துமர்வேலா

**சரணம்**

வேலையே வெறித்துநோக்கி விரித்திரு தலையாட்டி
சாலவே சிரித்துப்பேசி தும்கரம் தட்டிப்பாடி
தூலமே நடுநடுங்கத் துள்ளித் துள்ளி ஆடி
ஓலமா யரற்றன்பர் உளத்துறை வேலவனே!

ஆலமாசோலைநடு அழகொளிர் மருதமரம்
கோலமா மஞ்சையொடு குயில்கிளி மிசைபாட
மூலமாயிருந் தெவர்க்கும் முத்திதனை நல்கும்
பாலமா யருள்வாரிப் பரிந்தருள் புரிமுருகா! (ஞாலமா)

-இராசையா குகதாசன்-

---

முடியாது என்பது சோம்பேறிகளின் வார்த்தை.

தமிழகத் திருக்கோயில் வரிசை:

உ

# திருப்புனவாயில்

வல்லையூர் அப்பாண்ணா அவர்கள்



"அப்பனுக்கு மூன்று முழம்
ஆவுடையாருக்கு முப்பது முழம்"
மூன்று முழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒரு சுற்று"

இந்த இரு முதுமொழிகளும் "திருப்புனவாயில்" அமைந்துள்ள ஊரில் மட்டுமல்ல தமிழ் நாடு முழுவதுமே நன்கறிந்தவை. விருத்தபதி, விருத்தகாசி, இந்திரபுரம், பிரமபுரம், தட்சணபுரம் என்பது இவ்வூரின் மறுபெயர்களாயினும், தற்போது "திருப்புனவாயில்" என்றே கோயிலையும் - கோயில் சார்ந்த ஊரினையும் மக்கள் அழைக்கின்றனர்.

திருச்சி- புதுக்கோட்டை - அறந்தாங்கி பாதையில், அல்லது தஞ்சாவூர் - அறந்தாங்கி பாதையில் பயணித்தால், அறந்தாங்கி - ஆவுடையார் கோயில் - திருவாடானை முதலிய இடங்களிலிருந்து "திருப்புனவாயில்" என்றே குறிப்பிட்டு பேருந்துகள் போய் வருகின்றன.

**இறைவன்:** விருத்தபுரீஸ்வரர், பழம்பதிநாதர், மகாலிங்கேஸ்வரர்

**இறைவி:** பிருகந்நாயகி, பெரியநாயகி

நீண்ட மதில்களுடன் ஊரின் நடுவேயுள்ள மிகப்பெரிய கோயிலிது. கிழக்கிலும் மேற்கிலும் வாயில்கள். சுவாமி சந்நிதிக்கும் அம்பாள் சந்நிதிக்குமாக கிழக்கு நோக்கிய இரு வாசல்கள். அம்பாள் சந்நிதிக்கு எதிரே ஒரு மொட்டைக் கோபுரம். அந்த மொட்டைக் கோபுரம் அருகே குடவறையில் காளி எழுந்தருளியுள்ளாள். காளி இங்கு மிகவும் சக்தி வாய்ந்தவளாகக் கருதப்படுவதால் இக்கதவு எப்போதும் மூடப்பட்டபடியே இருக்கிறது. காளியின்

**அக்கிரமம் செய்தாள் அம்மாவும் பிணங்குவாள்.**

மீது மக்கள் கொண்டுள்ள பயத்தையும் பக்தியையும் வெளிப்படுத்தும் முகமாக காளியப்பன், காளியம்மாள் என்கிற பெயர்கள் அதிகமாக வழங்கப்படுவதாக காளிகோயில் அர்ச்சகர் கூறுகிறார்.

திருப்புனவாயில் திருத் தலத்திற்கு, கோயிலுக்கு வெளியே உள்ள பிரம்ம தீர்த்தம் உட்பட மொத்தம் 10தீர்த்தங்கள் உள்ளன. கோயிலுக்குத் தென்புறமாக ஓடும் சிறிய நதியான "பாம்பாறும்", ஊருக்கு அண்மையில் உள்ள கடலான "வருண தீர்த்தமும்" ஸ்தலத்தீர்த்தங்களாகவே கருதப்படுகின்றன. ஏனையவை அனைத்தும் கோயில் சுற்றாடலிலேயே உள்ளன.



வாசலின் தெற்குப் பக்கமாக வல்லப கணபதியும், வடக்காக தண்டபாணி சந்நிதியும் கொண்ட வெளிப்பிரகாரம் கடந்து வாயில் வழியாக உள்ளே நுழைகிறோம். உட்பிரகாரம் மூடிய பிரகாரமாக இல்லாமல் திறந்தபடியான பிரகார அமைப்புக் கொண்டது. வாசலுக்கு வலப்பக்கம் சூரியர் - பைரவர் சந்நிதிகளும், இடதுபக்கம் சந்திரன் சந்நிதியும் மேற்குப் பார்த்தபடி உள்ளன. தம்பமண்டபம் - மகாமண்டபம் - அர்த்த மண்டபமும் உள்ளன. மகாமண்டபத்தின் வடக்குப் பக்கம் நடராஜர் உற்சவ மூர்த்தமும், தெற்குப் பக்கம் சோமாஸ்கந்தர், நால்வர், சேக்கிழார் ஆகியோரும் அமர்ந்துள்ளனர்.

தஞ்சைப் பெரிய கோயிலில் எப்படி கருவறையின் மேலுள்ள தூபிப் பகுதியே நீண்டு நெடிதுயர்ந்து வானளாவிய கோபுரமாக நிற்பதைப் போன்று இங்கேயும் அகன்று விரிந்த கருவறையின் மேற்தூபியே 5 அடுக்குகள் கொண்ட கோபுரமாக உயர்ந்து, (தஞ்சை போன்ற உயரம் அல்ல) அதன் மேல் அகன்ற தூபியுடன் அழகாகக் காட்சி தருகிறது. உட்பிரகாரம் மூடப்படாமல் இருப்பதனால் கோபுரத்தின் அழகை நாற்றிசைகளிலிருந்தும் பார்த்து ரசிக்க முடிகிறது. கருவறைக் கோபுரத்தில் பொம்மைகள் மிகக் குறைவாகக் காணப்பட்ட போதிலும், அடி பருத்தும் மேலே (வேகமாக) சுருங்கிச் செல்கின்ற அழகும், பண்டிகையின் பருமனும் பார்க்கப் பரவசமளிக்கிறது.

ஆலயத்தில் மொத்தம் ஐந்து விநாயகர்கள் உள்ளனர். இந்திரன் வழிபட்ட "ஆகண்டல விநாயகர்" (ஆகண்டலன் -இந்திரன்) தனிச்சந்நிதியில் உள்ளார். பாண்டி நாட்டுத் தலங்கள் பதினான்கும் இங்கிருப்பதாகக் கொண்டு (மூலவர் உட்பட) 14 லிங்கங்கள் கோயிலின் பல்வேறு இடங்களிலும் காணப்படுகின்றன. கோஷ்ட மூர்த்தமாக நிருத்த கணபதியும்

தட்சணாமூர்த்தியும் காணப்படுகின்றனர். கர்ப்பக்கிரகத்துப் பின் சுவரில் பொதுவாகக் காணப்படுகின்ற இலிங்கோற்பவருக்குப் பதிலாக இங்கு திருமாலையும் அருமனையும் தரிசனம் செய்கிறோம். மேற்குப் பிரகாரத்தில் ஆலயத்தின் ஸ்தல விருட்சமான குருந்த மரம் உள்ளது. பிரகார மதிற்சுவரை ஒட்டியபடியே "அகத்திய லிங்கம்" காணப்படுகிறது. இவருக்குத் திங்கட்கிழமைகளில் மட்டுமே பூஜை நடைபெறுகிறது.

பாண்டிநாட்டு மன்னர்கள் காலத்தைய ஐந்து கல்வெட்டுக் குறிப்புக்கள் உள்ளன. ஒரு கல்வெட்டில் **"திருப்புனவாசலுடைய நாயனார்"** என இறைவன் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. திருமால், இந்திரன், சூரியசந்திரர், ஐராவதம், வசிட்டர், அகத்தியர், பாண்டிய நாட்டு மன்னனான "சௌந்தரபாண்டியன்" உட்படப் பலரும் விருத்திபுரீஸ்வரரை வணங்கிப் பேறடைந்தனர். (இந்தப் பந்தியிற் காணப்படும் குறிப்புக்கள் இரண்டும் கோயிற் குறிப்புக் கூறுவன)

இப்பொழுது நாம் திருப்புனவாயிலின் பெருமைக்குக் காரணமான கருவறைப் பகுதிக்கு வருகிறோம். பிரகாரத்தை வலம்வரும்போதே கருவறையும் அர்த்த மண்டபமும் சேர்ந்து "T" வடிவத்தில் அமைந்திருந்ததைப் பார்த்தோமாயினும் பெரிதாக எதுவும் புரியவில்லை. அர்த்த மண்டப வாசலில் நின்றபடி மூலவரைத் தரிசிக்கிறோம். கருவறை அழகானதும் மிகப்பெரியதுமான சிவலிங்கத் திருமேனியைக் கொண்டது. தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலய மூலத் திருமேனிக்கு அடுத்ததாக பெரிய லிங்கத் திருமேனி இதுவாகும். இந்த லிங்கத் திருவுருவின் அமைப்பைக்கொண்டே இந்த முதுமொழிகள் பிறந்தன.

"அப்பனுக்கு மூன்று முழம்
ஆவுடையாருக்கு முப்பது முழம்"

"மூன்று முழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒரு சுற்று"

அழகிய அலங்காரத்துடன் உள்ள லிங்கத்தின் உயரம் 9அடி; சுற்றளவு $8^1/_2$ அடி; லிங்க பாணத்தைத் தாங்கி நிற்கின்ற ஆவுடையார் பாணத்தின் சுற்றளவு 33அடி; ஆவுடையாரின் இறுதியில் உள்ள கோமுகை $3^1/_2$அடி நீளம். (இந்த அளவுகளும் கோயில் குறிப்பு தரும் தரவு) கருவறைக்கு வெளியே நின்று வணங்கியபோது லிங்கபாணம் முழுவதுமாகவும், ஆவுடையாரின் முன்பார்வைப் பகுதி மட்டுமே கண்களுக்குத் தெரிந்தது. கோயிலிலே கூட்டம் வெகு குறைவாக இருந்தமையினால், கருவறையின் வாசல்வரை நகர்ந்து போய் கால்களை வெளியே வைத்தபடி, கைகளை வாசற் தூண்கள் தாங்கிக்கொள்ள, தலையை மட்டும் உள்ளே நீட்டி இருபுறமும் பார்த்தேன். அப்பாடா.... இப்போதுதான் ஆவுடையாரின் பிரம்மாண்டம் புரிந்தது. ஆவுடையாரின் கோமுகைப் பகுதியும் தெரிந்தது. லிங்கபாணத்திற்கு உடுத்தியிருந்தது 3முழ நீளமான வெள்ளை நிற வேஷ்டி. ஆவுடையார் பகுதியினைச் சுற்றியிருந்தது முப்பது முழ நீளமுள்ள வெள்ளை நிற வேஷ்டி. மூலவரை முழுமையாகப் பார்த்த பின்னர்தான் வழக்கிலுள்ள இரண்டு முதுமொழிகளின் உண்மை புரிந்தது.


**அன்பத்திற்குத் தேன் அன்புக்கு ஒரு மனைவி.**

ஆனந்தமான தரிசனத்தை முடித்து மண்டபத்துக்கு வெளியே வந்து நின்றபடி கருவறையின் T வடிவ அமைப்பினையும், லிங்கத் திருமேனியின் பருமனுக்கு ஏற்றபடியாகவுள்ள பருத்த நந்தியையும் மீண்டும் ஒருமுறை கண்களில் உள்வாங்கிக்கொண்டு அற்புதமான ஸ்தல தரிசனம் தந்த நிறைந்த மனதோடு வெளியே வருகிறோம். நமது அடுத்த திருக்கோயில் பயணத்தை ஆரம்பிப்போமா?

*"மின்னியல் செஞ்சடை வெண்பிறையன் விரிநூலினன்*
*பன்னிய நான்மறை பாடியாடிப் பல வூர்கள் போய்*
*அன்னம் அன்னந் நடை யாளொடும் அமரும் இடம்*
*புன்னை நன்மாமலர் பொன்னுதிர்க்கும் புனவாயிலே"*

*(சம்பந்தர்)*

# என்றும் நினைவில்...



## இசைமணி
## சி. துரைராசா

**எமது ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கும், பேரவையின் செயற்பாட்டுக்கும் தன்னாலான பேருதவிகளை முன் எடுத்து "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கூற்றிற்கு உகந்த வகையில் செயலாற்றிய இசைமணி துரைராசா அவர்கள் முருகன் பாதார விந்தங்களில் சேர்ந்ததையிட்டு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருடன் எமது துயரினைப் பகிர்ந்து கொள்கின்றோம்.**

**-இவ்வண்ணம்**

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.**

# சித்திரைமாத வாராந்த நிகழ்வுகள்

**01.04.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "சிந்தனைசெய்"

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வர் இரா செல்வவடிவேல் அவர்கள்

**08.04.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- இன்னிசை நிகழ்வு

(பக்கவாத்தியசகிதம்)

**15.04.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "பக்தி நந்தனார்" இசை நாடகம்

வழங்குபவர்கள் :- இணுவில் கந்தசாமிகோயில் இளந்தொண்டர் சபை அறநெறி மாணவர்கள்

**22.04.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

**29.04.2011 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் 160ஆவது மாத வெளியீடு

சித்திரை 2011

வெளியீட்டுரை :- Dr V. பாலகிருஸ்ணன் அவர்கள்

மதிப்பீட்டுரை :- திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள்

[இளைப்பாறிய அதிபர்]

பதிவு இல. QD/14/NEWS/2011

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

